# கள்ளி மலர்

பொன். சௌரிராசன், எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவன்
அரசினர் கலை அறிவியற் கல்லூரி, சித்தூர் (ஆ. மா.)

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற்பதிப்பு : மே, 1970
தேனக வெளியீடு

விலை ரூ. 2-25

ஆசிரியரின் பிற நூல் :
கட்டுரை மணிகள்

மாணிக்கம் பிரஸ், சென்னை-29

# முன்னுரை

செங்கமலம் என்ற அழகான பெயருடைய பெண்ணின் வாழ்க்கை அவள் பெயருக்கேற்ப அழகாகவும் குளுமையோடும் தான் மலர்ந்திருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்ப்போம். ஆனால் அது ஏனோ முள்ளும் வெம்மையும் கொடுமையும் கலந்து கள்ளிப் பூவாய் வாடுகிறது. ஏன் - எப்படி இந்த நிலை ஒரு பெண்ணுக்கு இந்த நாட்டில் ஏற்படுகிறது? – இந்த வினாவுக்கு விடையாக அமைந்த கதையே 'கள்ளி மலர்' எனக் கூறலாம்.

இயல்பாக எந்த மனித உயிரும் அதன் இளமையில் அன்பையும் ஆதரவையும் பாதுகாப்பையும் பெறக் கூடிய இடம் அதன் குடும்பமாகும். தாய், தந்தை, உடன் பிறந்தார் முதலானவர்கள் அந்தக் குடும்பத்து உறுப்பினர்களுக்கு ஆக்கம் தருவார்கள் எனத் தான் நாம் நம்புகிறோம்; அதையே விரும்புகிறோம். அதற்கு முற்றிலும் மாறுபட்ட குடும்பமும் உண்டு என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

கல்வித் தொண்டு சமூகத் தொண்டு போன்றவற்றை நாம் வழக்கமாகப் போற்றிப் பாராட்டக்கூடியவர்கள். இத்தகைய பணிகளில் உயர்ந்த பண்பும் தொண்டுள்ளமும் கொண்டவர்கள் பலர் ஈடுபட்டுக் கடுமையாக உழைப்பதை நாம் அறிவோம். ஆனால் அங்கேயும் பசுத்தோல் போர்த்த புலிகள் சில தாராளமாக நடமாடத்தான் செய்கின்றன. விடுதியில் உள்ள அனாதைப் பெண்ணை அதன் நிர்வாகியின் நிமிஷ நேர வெறிக்கு இரையாக அனுப்பிவைக்கும் விடுதிப் பொறுப்பாளரான அம்மாக்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லையா என்ன ?-

இலைமறை காய்போல் வெளியில் தெரியாமல் பதுங்கியிருக்கும் - அல்லது பதுக்கப்பட்டிருக்கும் - சில உண்மைகளை நாம் இந்த நாவலில் காணுகின்றோம். ஆசிரியர் தாம் கூர்ந்து நோக்கியதையும் கேள்விப்பட்டதையும் வைத்துக்கொண்டு கற்பனையும் கலை மெருகும் சேர்த்துக் கதையாக உருவாக்கியிருக்கிறார்.

கதைமாந்தர்களின் தனிப்பட்ட குண நலன்கள்-குறைபாடுகள் - இதில் நன்கு வெளிப்படுகின்றன. அவற்றுக்கான அடிப்படைக் காரணங்களையும் ஆராய்ந்து கொடுத்துள்ளார். புறத் தோற்றத்தின் அழகு, நிறம் இவற்றுக்காகவும், குறிப்பிட்ட மனிதர்களோடு தொடர்பே இல்லாத வேறு சில கற்பனைக் காரணங்களுக் காகவும் நாம் அவர்களை வெறுக்கிறோம்; அல்லது விரும்புகிறோம். அப்படி அவள் தாயாராலேயே வெறுக்கப்பட்ட ஒரு பெண்ணின் கதையைக் கூறுவதன் வாயிலாக, நம் அன்பை இத்தகைய பெண்களின் மீது தூண்டிவிடுகிறார் ஆசிரியர். இந்த உயர்ந்த நோக்கத்துக்காகவே நாம் இதன் ஆசிரியரைப் பாராட்டலாம்.

பழந்தமிழ்ப் பயிற்சியும் மரபு வழிச் சிந்தனையும் கொண்டவர்களும்கூட இன்றைய இலக்கியத் துறையில் கலைஞர்களாக விளங்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டியவர் நாவலாசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள். எளிய இனிய தூய தமிழ்நடை ஒன்றைக் கலைப்படைப்புக்கென்றே உருவாக்கிய பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்களின் வழியில் வந்த இளைஞர்களில் ஒருவரே இதன் ஆசிரியர் பொன். சௌரிராஜன் அவர்கள்.

ஆசிரியர் இளைஞர். இது நாவல்துறையில் அவருடைய முதல் முயற்சியாகும். எதிர்காலத்து வளர்ச்சிக்கான கூறுகள் அவருடைய இந்த நாவலிலேயே தென்படுகின்றன. அவருடைய இந்த 'கள்ளி மலர்' மணம் மிக்க கலைமலர் என்பதில் ஐயமில்லை. இதற்குக் கிடைக்கும் வரவேற்பால் இன்னும் பல மலர்கள் அவர் கற்பனை உள்ளத்திலிருந்து பூத்துச் சொரிய அவரை என் உளமாற வாழ்த்துகிறேன்.

*சென்னை-14.*
*6-5-70.*

அன்புள்ள,
**அகிலன்**

# கள்ளி மலர்

## 1

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் புல்லும் பூண்டும் காடாய் மண்டிக் கிடக்கும். அதற்குப் பெரிய காவல் வைத்ததுபோல் வேலி ஓரத்தில் சப்பாத்திக் கள்ளி செழித்து வளர்ந்திருக்கும். தோட்டத்து மூலையில்ஒருவேப்ப மரம். அதுதான் எனக்கு உள்ள ஒரே தோழி. வெய்யிலாகட்டும் வேனலாகட்டும், மப்பாகட்டும் மழையாகட்டும் எதுவாக இருந்தாலும் தவறுது அந்த மரத்திடம் ஒவ்வொரு நாளும் போவேன். காலையிலோ சாயங்காலத்திலோ நேரங் கிடைத்தபோதெல்லாம் என்னை அங்கேதான் பார்க்கலாம். அடக்க முடியாத துயரத்தை அழுது அழுது தீர்த்துக் கொண்டது அந்த மரத்து வேரில்தான். என்னுடைய ஊமைக் கவலைகளை எல்லாம் அதனிடம்தான் பேசித் தீர்த்துக்கொள்வேன். கோடைக் காற்றில் அசைந்து அந்த மரம் எழுப்பும் இனிய ஓசையில் என்னை மறந்து சில நாட்கள் நான் தூங்கிக்கூட இருக்கிறேன்.

அப்படி அந்த வேப்ப மரத்து வேரிலே உட்கார்ந்து கொண்டு அழுது தீர்த்த பிறகு, ஏங்கிப் பெருமூச்சு விட்ட பிறகு, ஊமைக் கவலைகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் இறக்கி வைத்த பிறகு பக்கத்து வேலியில் படர்ந்துள்ள கள்ளிச் செடியைப் பார்ப்பேன். எங்கும் முட்கள். இலையில் முட்கள். தண்டில் முட்கள். இந்த முட்களுக்கு இடையில்

சில பூக்கள் பூத்திருக்கும். பாவம்! அந்தப் பூக்களைச் சுற்றிலும் ஈட்டிக்காரர்கள் போல நிறைய முட்கள் குத்திட்டு நின்றுகொண்டிருக்கும். எப்போதோ எங்கோ படித்த ஞாபகம். அந்த முட்கள் எல்லாம் ஆடு மாடு தின்னுமல் பாதுகாக்கவே இருக்கின்றதாம்.

ஆனால் அந்தக் கள்ளி மலரைப் பார்க்கும்போதெல்லாம் என்னிடம் அது என்னவோ சொல்லத் துடிப்பதுபோல் அசையும். "தோழி! நீ படித்தது உண்மை இல்லேடி. இந்த முரட்டு முட்கள் எனக்குக் காவலாக இல்லை. அப்படி இப்படித் திரும்ப முடியாமல் என்னைக் குத்திக் கிழிப்பதற்காகவே இருக்கின்றன. மெல்லக் காற்று இதமாக வீசும். ஆனாலும் நான் அசையக் கூடாது. எப்போதாவது 'சலசல, என்று என் கால் அடியில் மழைத் தண்ணீர் ஓடும். என்ருலும் நான் அதைக் குனிந்து பார்க்கக்கூடாது. என்றைக் காவது, வானத்தில் திரியும் அந்தக் கதிரவனைத் தலை நிமிர்ந்து பார்த்து மகிழ வேண்டும்போல் தோன்றும். எனக்கு மேலே என்னையே குறியிட்டுக் கூராக நின்றுகொண்டிருக்கும் முட்களைப் பார்த்ததும் அந்த நினைவு நெஞ்சிலேயே நின்று மக்கி மறைந்துவிடும்" என்று அது சொல்லுவதுபோல் தோன்றும். இப்படிப் பல நாள் நானும் கள்ளி மலரும் கலந்து பழகினோம்.

ஒரு நாள் அந்தக் கள்ளி மலரைக் கையால் தொட்டு விரல்களால் வருடி ஆறுதல் சொல்லவேண்டும் போல் தோன்றியது. மெல்ல நெருங்கிச் சென்று அதைத் தொட்டு வருடினேன். மயிரிழை போன்ற முட்கள் 'சுருக் சுருக்' கென்று விரல்களில் குத்திக்கொண்டன. சடக்கென்று கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு முட்களை ஒவ்வொன்ருகப் பிடுங்கினேன். பிடுங்கி எடுத்த ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சொட்டு இரத்தம் துளிர்த்து நின்றது. கையை உதறினேன். ஒரு சில துளிகள் அந்த மல

ரின்மேல் சிதறி விழுந்தன. கோபமாக அந்தக் கள்ளி மலரைப் பார்த்தேன். அது இரத்தக் கண்ணீர் கசிய பரிதாபமாக என்னைப் பார்த்து, "செங்கமலம்! உன் கையில் முட்கள் குத்திவிட்டன. நான் அதற்காக வருந்துகிறேன். ஆனால் இதோ பார் என் இதயத்தின் உள்ளே எத்தனை முட்கள் அவை ஒவ்வொரு நாளும் என்னைக் குத்திக்கொண்டே வளர்கின்றன. நான் இப்போது கருக்கொண்டிருக்கிறேன். என் குழந்தை—கள்ளிப் பிஞ்சு—இப்போது உருவாகிறது. அதனைச் சுற்றி வளர்கின்ற முட்கள் தான் உன்னைக் குத்திவிட்டன. வருந்தாதே" என்று இதயதாபத்தோடு கூறுவது போல் இருந்தது.

அந்தக் கள்ளி மலரையும், வேப்ப மரத்தையும், புல் பூண்டுகள் மண்டிக் கிடக்கும் எங்கள் வீட்டுத் தோட்டத்தையும் விட்டு வெளியேறி எவ்வளவோ ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும் என் வாழ்வைப் பார்க்கும்போது எனக்கு அந்தக் கள்ளி மலர் தான் நினைவுக்கு வருகிறது.

எனக்கு அம்மா இருந்தார். அம்மா இல்லாமலா பெண் நான் பிறந்திருப்பேன் என்று கேட்காதீர்கள். எனக்கும் ஒரு அம்மா இருந்தார். அவர் என்னவோ நல்லவர் தான். நிறைய அன்பும் அவரிடம் இருந்தது. மற்றப் பிள்ளைகளிடம் எல்லாம் அம்மா அன்பாகத் தான் இருந்தார். அண்ணனிடம் தங்கையிடம் எல்லாம் நிறைய அன்பு காட்டினார்.

என் அண்ணன் முரடன்; நன்றாகச் சாப்பிடுவான். சுவையானவற்றை எல்லாம் அவனுக்காக முன்கூட்டியே அம்மா எடுத்து வைத்து விடுவார். உருளைக்கிழங்கு வருவல் தயிர் பச்சடி என்றால் அவனுக்கு உயிர். பெரும்பாலும் அந்த இரண்டு பொருள்களையும் அண்ணன் இருந்த வரையில், நான் அம்மாவோடு வாழ்ந்த வரையில் சுவைத்துப் பார்த்ததே இல்லை.

அவன் பெரிய கோபக்காரன். வீட்டுச் சாமான்களை எல்லாம் போட்டு உடைத்துவிடுவான். "குழம்பு நல்லா இல்லை" "கறியில் காரம் அதிகம்" என்று எங்கள் அப்பா சொல்லி ஒரு நாள்கூட நான் கேட்டது இல்லை. என் அண்ணனோ, "என்ன? புளி குறைவாக இருக்கு. உப்பு சும்மா கெடைத்துதோ? இல்லே அடுத்த வீட்டு அம்மாளிடம் வாயடித்துக்கொண்டே இரண்டுதரம் போட்டிட்டாயா?" என்று அதிகாரத்தோடு கேட்பான். "கழுத்துப் புருசன் கூட என்னை ஒருவார்த்தை 'நில்லு'ன்னு சொன்னது இல்லை இந்த வயித்துப் புருசன் என்னை என்ன அதிகாரம் செய்யறான்" என்று அண்ணன் சாப்பிட்டுவிட்டுப் போன பிறகு அம்மா தனக்குத் தானே சொல்லிக்கொள்வார்.

அண்ணன் ஒரு ஆடம்பரக்காரன். பெண்களைப்போலத் தன்னை அலங்கரித்துக்கொள்வான். காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு கழுத்தைத் திருப்பி அழகு பார்ப்பான். சுனோ, பவுடர் இவை எல்லாம் தனக்காகத் தனியாக வாங்கி வைத்துக்கொள்வான். உப்பு, புளிக்குக் காசு இருக்கிறதோ இல்லையோ. அதுக்கு எல்லாம் தவறுமே அவனுக்குப் பணம் கொடுத்துவிட வேண்டும். நான் புத்தகம் வாங்கக் காசு கேட்டால், "ஆமா! இவ படிச்சி கிழிக்கிற கிழிப்புக்குப் புத்தகமும் நோட்டும்...போடி போ—காசு இல்லே. அப்புறம் பார்த்துக்கலாம்" என்று கடுகடுப்பார். ஆனால் அண்ணன் கேட்டால் சுனோவுக்காயினும் பவுடருக்காயினும் மூச்சுப் பேச்சு இல்லாமல் பணம் கொடுத்துவிடுவார்.

அண்ணனிடம் ஏன்தான் அம்மாவுக்கு அவ்வளவு பயமோ? முரடன் என்பதாலோ என்னவோ? அல்லது முதல் பிள்ளை, நாளைக்குச் சம்பாதித்து உதவுவான் என்ற பாசமோ? அதுதான் போகட்டும். தங்கையிடம் மட்டும் ஏன் அவ்வளவு அன்பு. அவளும் என்னைப்போல் ஒரு பெண் தானே. வேண்டுமானால் அவள் சிவப்பாக இருக்கலாம்.

நான் கருப்புதான். அதற்கு நான் என்ன செய்வேன். கருப்பைவாரி நானு பூசிக்கொண்டேன். கருப்பாகப் பிறந்தது குற்றமா? குற்றமாகவே இருந்தாலும் அது என் குற்றமா?

தங்கை அத்தையைப் பற்றிக் கோள் சொல்லுவாள். 'அத்தை கிணற்றங்கரையில் இதைச் சொன்னாள்; ஆற்றங் கரையில் அதைச் சொன்னாள்; அடுத்த வீட்டு அம்மாவிடம் உன்னைப் 'பட்டி'ன்னு திட்டினாள்' என்று அடிக்கடி அம்மா விடம் வந்து கோள் சொல்லுவாள்.

"ஒன்னே ஒன்னு பெத்து வைச்சிருக்கா; அதுவும் காச நோயாலே 'லொக்கு லொக்கு'ன்னு இருமிக்கிட்டுக் கெடக்கு. அவ அடிச்ச பட்டிக்கு, ஆடின ஆட்டத்துக்குத்தான் கட்டிக் கிட்டவன் கட்டையிலெ அதுக்குள்ளே பொயிட் டானே! முண்டச்சி வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்காமே கிணத்துக்கும் ஆத்துக்கும் வேறே போருளா? மானங் கெட்டவ" என்று அம்மா வசை புராணம் பாட ஆரம்பித்து விடுவார்.

அத்தையை எனக்கு நன்ருகத் தெரியும். பட்டி அடிக் கிற அளவுக்கு உரத்த குரல் அவருக்கு இல்லை. மெல்லிய குரலில்தான் பேசுவார். பேசுவதும் குறைவு. குரல் மெலிந் திருப்பதுபோல் உடலும் மெலிந்திருக்கும். அஞ்சி அஞ்சிப் பழகுவார். அடங்கி அடங்கிப் போய்விடுவது அவருக்குப் பழக்கம். எனக்கு விஞ தெரிந்த காலத்திலிருந்து சிவப்புக் கரைபோட்ட வாழை நார்ப்பட்டு சேலைதான் உடுத்தியிருப் பார். அதைத் துவைத்தே கட்டிக்கொள்வார். வண்ணை னுக்குப் போட்டு நான் பார்த்ததே இல்லை. வாழை நார்ப் பட்டுக்குப் பொருத்தமாக இருக்கும் மாநிற உடம்பு. எப் போதும் ஏதாவது செய்துகொண்டே இருப்பது பழக்கம். சுறுசுறுப்பாகப் பம்பரம்போல் வேலை செய்வார். ஆனல் கழுத்தும் கையும் முண்டமாய் இருப்பதைப் பார்க்கும்போது என் கண் கலங்கிவிடும். பிள்ளை இல்லாது போனல் தன்

கணவனோடேயே உடன் கட்டை ஏறியிருப்பார் என்றுகூட எண்ணத் தோன்றும். அந்த அத்தையைத்தான் தங்கையின் பேச்சுக் கேட்டுக்கொண்டு அம்மா கண்டபடி திட்டுவார். அம்மா அத்தையைத் திட்டியது எல்லாம் அம்மாவுக்குத்தான் பொருந்தும். அவருக்குத்தான் பெரிய தொண்டை. அன்பாகப் பேசுவதே அடுத்த வீடுவரை கேட்கும். கோபமாகப் பேசினால் தெருவே கூடிவிடும். கொடுகொடுங்கிற முகத்தில் மஞ்சள் பூசி பொட்டு வைத்துக்கொண்டாலும் ஒரு களை இருக்காது. அத்தை என்றால் அம்மாவுக்கு ஒரே வெறுப்பு. அத்தையைத் திட்டுவதிலே அவருக்கு மகிழ்ச்சி. அத்தையை யாராவது திட்டினால் நேரம் போறது தெரியாமல் அதைக் கேட்டுக்கொண்டே இருப்பார். அம்மாவிடம் ஏதாவது காரியம் ஆக வேண்டி இருந்தால் அத்தையைத் திட்டினால் போதும். அத்தையை வெறுப்பவர்கள் எவராவது இருந்தால் அவர்தான் அம்மாவுக்கு மிகவும் வேண்டியவர். அத்தையைப்பற்றி யாராவது ஏதாவது நல்ல தனமாகப் பேசிவிட்டால், "அந்த முண்டச்சியைப் பத்திப் பேசிக்கிட்டு என் வீட்டுக்கு வராதே" என்று அவர்களை அம்மா வெறுத்து விரட்டிவிடுவார்.

அத்தையை அம்மா திட்டத் திட்ட தங்கையும் அம்மாவுடன் சேர்ந்துகொண்டு ஒத்து ஊதுவாள், "என் அம்மா! என்னோட அம்மா, நல்ல அம்மா. எனக்குக் கனகாம்பரம் பூ நிறைய வாங்கிக் கொடுத்தாங்களே" என்று வீட்டுக்கு விளையாட வரும் ஏழைச் சிறுமிகளிடம் மிக பீத்திக்கொள்வாள். எவளாவது ஒரு சிறுமி ஏதாவது மறுத்து முணுமுணுத்தால் "ஏய்! என்னடி முணுமுணுக்கிறே. எங்க அம்மாவைப் பத்திச் சொன்னது பிடிக்கலையோ? அப்ப எங்க வீட்டுக்கு வராதே" என்று தங்கை சொல்வதைக் கேட்டு அம்மாவுக்குத் தலைகால் தெரியாது. ஓடிவந்து என் தங்கையைக் கட்டி அணைத்து உச்சிமோந்து முத்தம் கொடுப்

பார். செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் அவளுக்குக் கண்ணெறி சுற்றிப் போடுவார்.

தங்கைக்கு ஆட்டுவால் மாதிரி சின்ன முடி. அவளுக்குக் குதிரைவால் கொண்டை போட்டு அழகு பார்ப்பார். எனக்கு எவ்வளவோ நீண்ட முடி. ஆனால் அதற்கு நிறைய எண்ணெய் செலவாகிவிடுகிறது என்று அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்வார்.

பூ என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. முல்லைப் பூதான் எனக்குப் பிடிக்கும். என் தங்கை கனகாம்பரம் தான் வைத்துக்கொள்வாள். அதனால் எங்கள் அம்மா கனகாம்பரம்தான் வாங்குவார். முல்லைப் பூ வாங்குவதே இல்லை. ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டு எதிரே உட்கார்ந்திருக்கும் நாய்க்கு ஒரு துண்டு அப்பம் வீசி எறிவதுபோல் "துக்குறி பார்த்துக்கொண்டே இருக்கு; என் கண்ணுக்குத் தலைவலி வந்தாலும் வந்துவிடும்" என்று தங்கையை மார்போடு அணைத்தபடியே கனகாம்பர சரத்தை அறுத்து என் முன்னே "இந்தா எடுத்துக்கோ" என்று ஒரு சின்ன துண்டை வீசி எறிவார். வேண்டா வெறுப்போடு குனிந்து எடுத்துக்கொள்வேன். வேண்டாம் என்று மறுத்தால் முதுகு சிவந்துபோய் விடுமே.

வாங்கித் தராது போனால் போகட்டும் என்று அத்தை வீட்டிலிருந்த ஒரு முல்லைப் பதியத்தைக் கொண்டுவந்து நட்டு வைத்தேன். அம்மா கண்ணில் படாதபடி தோட்டத்து மூலையில் வேலி ஓரமாகத்தான் வைத்திருந்தேன். துளிர்விட்டுக் கப்பும் கிளையுமாக அது நன்றாக வளரத் தொடங்கியது. அது செழித்து வளருவதைப் பார்த்து என் மனத் துயரைக் கொஞ்சம் மறந்திருந்தேன். அரும்பு கட்டியிருந்தது. பூக்கின்ற சமயம். அது அத்தை வீட்டிலிருந்து கொண்டுவந்தது என்பதைக் கோள் மூட்டும் தங்கை எப்

படியோ தெரிந்து கொண்டுவிட்டாள்; அம்மாவிடம் மெல்லப் பற்ற வைத்துவிட்டாள். அடுப்பங்கரையில் சமையல் வேலை முடிந்ததும் மத்தியானம் மெல்லத் தோட்டத்துப் பக்கம் போய் எட்டிப் பார்த்தேன். முல்லைக் கொடியைக்காணும்; வேலிக்கு அப்பால் வாடி வதங்கிக்கிடந்தது. வேரை எல்லாம் பிய்த்துப் பிடுங்கிச் சிதைத்திருந்தார்கள். வீட்டுக்குள் வர மனமே இல்லை. என்னையே வெட்டி எறிந்ததுபோல் இருந்தது. "ஏண்டி தெண்டச் சோறு! இங்கே தோட்டத்திலே என்ன காத்துவாங்கப் போயிட்டியா? பாத்திரம் எல்லாம் காயுது. வாடி, வா பத்துத் தேய்க்கணும்" என்று அம்மா கத்தினர். பூ வைத்துக்கொள்ளும் ஆசையை அன்றே விட்டுவிட்டேன்.

பூவைப் பற்றித்தான் அப்படி என்பது இல்லை; ஆடையிலும் அப்படித்தான். நல்ல நல்ல ஆடைகள் எல்லாம் அவளுக்குத்தான். தீபாவளி பொங்கல் என்ருல் அம்மா தங்கையை அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிடுவார் துணிக்கடைக்குப்போய் தங்களுக்குப் பிடித்ததை எல்லாம் வாங்கிக்கொள்வாங்க. எனக்கும் ஒரு மனசு இருக்கிறது. அவுங்களுக்கு இருப்பதுபோல் அதற்கும் ஆசை இருக்கிறது என்று ஏனே ஒருதரம்கூட அவர்கள் எண்ணி இரக்கம் காட்டியது இல்லை.

நல்ல நீல நிறத்தில் பளிச்சுப் பளிச்சென மின்னும் நட்சத்திரம் போட்டிருந்த துணி ஒருதரம் வாங்கி வந்திருந்தார். அது நன்ருக இருந்தது. எனக்கும் சேர்த்தே வாங்கி வந்திருப்பார்கள் என்று நினைத்தேன். அதைப்பற்றிக் கேட்டு அறிந்துகொள்ள ஆசையாக இருந்தது; பயமாகவும் இருந்தது. 'சரி கேட்டுத்தான் பார்ப்போமே' என்று துணிவை வரவழைத்துக்கொண்டு முதலில் மெல்ல ஆர்வத்தோடு அந்தத் துணியைக் கண்களால் பார்த்தேன்.

"ஏண்டி இப்படிப் பார்க்கிறே! தீ பிடித்துவிட போவுது!" என்று அம்மா முகத்தில் அறைந்ததுபோல வெடுக்கென்று கேட்டார்கள்.

"ஒன்னும் இல்லேம்'மா' அது மாதிரி எனக்கும்கூட ஒரு சட்டை..." என்று இழுத்தாற்போல் கேட்க முயன்றேன். வாக்கியத்தை முடிக்கக்கூட இல்லை.

"ஏண்டி துக்குறி! நீ இருக்கிற கலருக்கு டெர்லின்னு கேட்குதா? டெர்லின்னு! உனக்குத் தைத்துப் போட்டா திருடிக்குச் செம்புள்ளி கரும்புள்ளி குத்திறாற்போல இருக்கும். கழுதைதான் இல்லே. இருந்தா அது மேலே ஏத்தி வைச்சு ஊர்கோலம்கூட விடலாம்" என்று நோக நோகப் பேசி வாயாலேயே வதைத்துவிட்டார். அம்மா என்னைக் குத்திப் பேசுவதைக் கேட்டு என் தங்கை வாய்க்குள்ளேயே சிரித்துக்கொண்டாள். அதைப் பார்த்தபோது நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருந்தது. 'இனி இந்த வீட்டில் எதுவுமே கேட்பதில்லை' என்று அப்போதைக்கு உறுதிசெய்து கொண்டேன்.

எங்கள் ஊரில் ஒவ்வொரு ஆண்டும் தேர்த் திருவிழா நடக்கும். எல்லாரும் அலங்கரித்துக்கொண்டு புறப்படுவார்கள். என்னை வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டுப் போய் விடுவார்கள். சமையல் வேலையோடு காவல் வேலையும் வந்து சேரும். திருவிழா பார்க்கப் போனவர்கள் ஊர் சுற்றிச் சுற்றிக் கண்டதை எல்லாம் வாங்கித் தின்றுவிட்டு வருவார்கள். தின்று தின்று சலித்துப்போன பிறகு மிகுந்து போன சில துண்டு தின்பண்டங்களையும், கடிக்க முடியாத கல் பட்டாணிகளையும் கீழே எறிந்துவிடாது எனக்காகக் கொண்டுவருவார்கள். வருவதற்குள் இரவு பன்னிரெண்டு மணி ஆகிவிடும். கண்டதைத் தின்று வயிறு நிறைந்துவிட்டதாலும் அகால இரவின் தூக்கமயக்கத்தாலும் என் அண்ணனும் தங்கையும் சரியாகச் சாப்பிடமாட்டார்கள். அம்மாவோ

'ஒரே உறைப்பு, ஒரே புளிப்பு' என்று ஏதாவது சமையலில் குறைகூறிவிட்டுக் கையை உதறிக்கொண்டு எழுந்துவிடு வார். "ஏண்டி! நாங்க திருவிழாவுக்குப் போனதிலே வயித் தெரிச்சலாடி. இப்படிச் சமைத்திருக்கே" என்று வசவு வேறு கிடைக்கும். வாய் திறக்கமாட்டேன். வாயைத் திறந்தால் முதுகு சிவந்துவிடுமே.

ஒருநாள் எல்லோரும் பட்டணத்துச் சினிமாவுக்குப் போனர்கள். என்னையும் அழைத்துப் போவார்கள் என்று எண்ணிக் காத்திருந்தேன். கடைசியில் எப்போதும்போல் என்னையும் விட்டுவிட்டுப் போய்விடுவார்கள்போல் தெரிந் தது. நான் அடம் பிடித்தேன். என்னையும் அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்று புத்தி கெட்டுப்போய் பிடிவாதம் செய்தேன். 'போடி போ' பெரிய சினிமா ஸ்டார் ஆகிவிடப் போறியா என்ன? மாப்பிள்ளை வர்ற வயசாச்சு, அடங்கிக் கிட; ஆள் பார்க்கப் புறப்பட்டு விடாதே" என்று மனம் நைய நையத் திட்டிக்கொண்டே புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

# 2

'செத்துப்போனால் என்ன? நான் வேறொருத்தியின் பெண்ணா? ஏன் என்னை இப்படி வதைக்கிறார்கள்?' என்று அடிக்கடி எண்ணி ஏங்கினேன். 'அம்மா என்னைமட்டும் அப்படி வெறுப்பதற்குக் காரணம் என்னவோ?' என்று வருந்திக் கலங்கினேன்.

ஒரு காரணம் எனக்குத் தெரிந்தது. எங்கள் வீட்டு எதிர் சாரியில்தான் அத்தை வீடு இருந்தது. எங்கள் அப்பா கூடப்பிறந்தவர் அவர். என்னிடம் அத்தைக்கு அலாதி அன்பு. ஆனால் அம்மாவுக்கு அத்தையைக் கண்டால் வேப் பெண்ணெய்யைக் கண்டதுபோல் ஒரு கசப்பு. அத்தை தலைவைத்த இடத்தில் எங்கள் அம்மா கால்கூட வைக்க மாட்டார். அவர் போகிற சொந்தக்காரர் வீட்டுக்கு இவர் போவது இல்லை.

ஒரு சமயம் அம்மாவுக்கு உடம்பு மிகவும் மோசமாய்ப் போய்விட்டது. விடாது பதினைந்து நாள் சுரம் அடித்தது. பாவம்! செத்துத்தான் பிழைத்தார். அப்போது அம்மாவுக்குத் துணையாக இருந்து உதவி செய்யச் சொந்தக்கார அம்மா ஒருவர் வந்திருந்தார். அவர் அத்தை வீட்டுக்கும் உறவாம். வெகு தூரத்திலிருந்து இதற்காக எங்கள் ஊருக்கு வந்திருந்தார். அதனால் அடிக்கடி அத்தை வீட்டுக்கும் போய் ஏதாவது

பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவார். அம்மா உணர்வு இல்லாமல் கிடந்தவரைக்கும் இது நடந்துகொண்டிருந்தது. கொஞ்சம் தேறி எழுந்ததும் இப்படிப் போய்வருவது அம்மாவுக்குத் தெரிந்துவிட்டது. "ஏண்டி! என் வீட்டுக்குத்தானே வந்தே? எவ எவ வீட்டுக்கு எல்லாம் எதுக்குடி போறே? அவ வச்ச கண்ணுதானே என் ஒடம்பு அரை ஒடம்பாய்ப் போய்ச்சுது" என்று அத்தை வீட்டைச் சுட்டிக் காட்டி அம்மா வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டினுர். ஊரிலிருந்து வந்த அந்த அம்மாவுக்கும் கோபம் வந்துவிட்டது. "போதுண்டி, கொஞ்சம் நாக்கை அடக்கியேபேசு; நாத்திஞ சண்டையை உன் வீட்டோடு வைச்சிக்கோ. எனக்கு அதெல்லாம் எதுக்குடி. எனக்கு நீயும்தான் வேணும்; அவளும்தான் வேணும். உடம்பு தேறிடிச்சில்லே. இதுவும் பேசுவே இன்னமும் பேசுவே. இனிமே எனக்கு என்னடி இங்கே வேலே. வேணுண்டி வேணும். எனக்கு நல்லா வேணும். 'கழுதை எக்கேடு கெட்டால் என்ன? நீ ஏன் போறே? போயி மொத்தடி பட்டுக்கொண்டு வரப்போறே பாருன்னு' எங்க வீட்டுக்காரர் சொன்னது சரியாப் போச்சு"—என்று முணு முணுத்துக்கொண்டே மூக்கை உறிஞ்சி அழுதவாறே மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு அந்த அம்மா போய்விட்டார்.

இந்தப் பகை எப்படி வந்தது? ஏன் வந்தது? என்று அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன். பிறகு தெரிந்துகொண்டேன். எங்க அப்பாவை வளர்த்தவராம் அந்த அத்தை. தன் தம்பி படித்தவன் ஆகவேண்டும், நல்லவன் என்று பெயர் எடுக்கவேண்டும் என்று எவ்வளவோ துன்பப்பட்டு இட்டலி சுட்டு விற்று இலை தைத்துக் கொடுத்துப் படிக்க வைத்தார்களாம். அத்தை பேச்சைக் கேட்டுப் பள்ளிக்கூடம் போகாமல் ஊர் சுற்றித் திரிந்து சூதாடிப் பொழுதைப் போக்கிக் கெட்டுப் போய்விட்டாராம் எங்க அப்பா. அப்

புறம்தான் எங்க அம்மாவைத் தேடிப் பிடித்து எங்க அப்பா வுக்குக் கட்டி வைத்தார்களாம். அதன் பிறகு அப்பாவும் கொஞ்ச நாள் வரைக்கும் அத்தைப் பேச்சைக் கேட்டுக் கொண்டு நல்ல வழியில் குடும்பத்தை நடத்திக் கொண்டு தான் இருந்தாராம். ஆனால் அம்மா செய்கிற தப்புக்களை அடிக்கடி அத்தை கண்டு கொண்டு திருத்துவதும் திட்டு வதும் அம்மாவுக்குப் பிடிக்கவில்லையாம். அதனால்தான் மெல்ல மெல்லப் பகை வளர்ந்து இப்படி ஆகிவிட்டதாம்.

அம்மா ஒரே பெண்ணும். அதனாலே அவர்கள் வீட்டில் மிகச் செல்லமாக வளர்ந்துவிட்டாராம். வீட்டு வேலை ஒன்றுமே சரிவரத் தெரியாதாம். சொல்லிக் கொடுத்தாலும் கற்றுக் கொள்வதும் இல்லையாம். திருமணம் ஆகி அத்தை வீட்டுக்கு வந்த பிறகும் அப்படித்தானும். திறந்தது திறந்த படியே கிடக்குமாம். எலி, பூனை, நாய்களுக்கு விருந்து தானும். எனக்குத் தெரிந்துகூட அம்மா அப்படித்தான் வாழ்ந்து வந்தார். திருமணம் ஆகிய புதிதில் எல்லாம் இன்னும் மோசமாக இருந்திருக்கும். அத்தைக்கு அது பிடிப்பது இல்லையாம். பலமுறை கண்டித்துப் பார்த்தார் களாம். அம்மா மதிக்கவில்லையாம். அப்பாவும் காதில் போட்டுக்கொள்ள இல்லையாம்.

ஒரு நாள் சனிக்கிழமை. அது புரட்டாசி மாதம். அன்றைக்கு பயபக்தியோடு அத்தை நீராடிவிட்டு ஈரப் புடவையோடு சமையல் எல்லாம் செய்து வைத்து விட்டு சேவித்துவரப் பக்கத்தில் இருக்கிற பெருமாள் கோயிலுக் குப் போயிருந்தார்கள். வந்து பார்த்தால் சோற்றை நாய் தின்று கொண்டிருந்ததாம். அம்மா வயிறார உண்டுவிட்டுத் திறந்தது திறந்தபடியே போட்டுவிட்டு அடுத்த வீட்டுக்குக் கதை பேசப் போய்விட்டாராம். அன்று முழுதும் அத்தை சாப்பிடவே இல்லையாம்.

"சாப்பிடா விட்டால் போகுது; சீக்கிரம் மோட்சம் கிடைத்துவிடும்." என்று கேலி பேசிவிட்டு அப்பாவை அழைத்துக்கொண்டு அன்றைக்கு இரவு அம்மா சினிமாவுக்குப் போய்விட்டாராம். அங்கு, சினிமாக் கொட்டகையில் என்ன பேசிக் கொண்டார்களோ? சினிமா பார்த்து வந்த உடனேயே வேறு தனிக் குடித்தனம் போய்விட்டார்களாம்.

அத்தை எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். எனக்குக் கூட கொஞ்சம் கொஞ்சம் நினைவுக்கு வருகிறது. என்னைச் சுட்டிக்காட்டி, "டேய்! எனக்காகக் கேட்கலேடா—இந்தச் சிறுசுக்காகக் கேட்கிறேன். வீணைகப் பிரிந்து போய் கெட்டுப் போகாதே" என்று சொன்னது எல்லாம் மெல்ல மெல்ல என் நினைவுக்கு வருகிறது.

"ஏன் 'கா! நீதான் சின்னஞ் சிறுசிலேயே அறுத்துப் பொயிட்டே. அதனலெ அவ மகிழ்ச்சியா இருப்பது பிடிக்கலே. எதுக்குக் கரிச்சுக் கொட்டுறே. தின்னுட்டுக் கோயிலுக்குப் போறதுதானே. உன்னை யார் வேண்டாம்'னு? அவளுக்குப் பசித்திருக்கு. சின்ன பொண்ணுதானே! ஏதோ சாப்பிட்டுட்டா. முன்னே சாப்பிடக்கூடாதா? உன்னை யாரு சமைக்கச் சொன்னது? சமைத்துவிட்டுப் பட்டினி கிடந்து ஊரிலே எனக்கும் இவளுக்கும் கெட்டபேர் வாங்கித் தரச்சொன்னது. நாங்க சினிமாவுக்குப் போறது உனக்குப் பிடிக்கலே; சிரிச்சிச் சிரிச்சிப் பேசறது உனக்குப் பிடிக்கலே. உன் தலைவிதிதான் அப்படி ஆச்சு. நாங்களாவது நல்லா வாழறோம். நீ தனியா உன் பிள்ளையோடு நிம்மதியா இரு. அந்தக் காச நோய் வேறே எங்களுக்கு வந்தாலும் வந்துடும்!" என்று அத்தை வாயைத் திறக்க விடாமல் 'படபட' என்று அப்பா பொரிந்து தள்ளிவிட்டு முன் போட்ட திட்டப்படி சாமான்களை எல்லாம் வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போய்விட்டார். அத்தை என்னைப் பார்த்தபடியே கண்கலங்கி நின்றார்கள். இன்றைக்கு

நினைத்துக் கொண்டாலும் வண்டி புறப்படுகிறவரை சுருக்கம் விழுந்த அந்தக் கன்னத்தில் கண்ணீர் உருண்டு சிதற நிலைப்படியில் திகைத்துப் போய் நின்றுகொண்டே என்னை ஏக்கத்தோடு பார்த்தபார்வை நன்ருக நினைவுக்கு வருகிறது. "என்னடி பார்க்கிறே அங்கே"ன்னு பளார் என்று கன்னத்தில் ஒரு அறை கொடுத்து என்னை இழுத்து வண்டியுள் போட்டுக்கொண்டு புது வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

அப்போதிருந்தே அம்மாவுக்கு அத்தைமேல் வெறுப்பு. அத்தைக்கும் அம்மாவைக் கண்டால் பிடிக்காது. அம்மா போகிற கிணற்றடிக்கு அத்தை போவது இல்லை. போனல் ஏதாவது சண்டை கிணற்றடியில் வந்துவிடும். இது ஊரறிந்த இரகசியம்.

அம்மா என்னை மட்டும் வீட்டில் வைத்துவிட்டு அடிக்கடி வெளியே எங்காவது போய்விடுவது வழக்கம். அப்போதெல்லாம் அத்தை என்னை அழைத்துத் தின்பண்டம் ஏதாவது தருவார். 'பாவி! உன்னை இப்படி விட்டு விட்டு ஊர் சுற்றப் போய்விடுகிருளே! பஜாரி" என்று அத்தையைத் திட்டுவார்கள். இது அம்மாவுக்குத் தெரிந்துவிடும். அக்கம்பக்கத்தில் அம்மாவுக்கு வேண்டியவர் யாரேனும் வேட்டு வைத்திருப்பார்கள். அன்றைக்கு நல்ல பூசை எனக்குக் கிடைக்கும். "கண்டவ வீட்டுக்குப் போய் கோள் மூட்டியா விடுறே; ஏண்டி முளைக்கும்போதே இப்படி" என்று என்னென்னவோ சொல்லித் திட்டுவார். கட்டை விரல் நுனியாலே என் கன்னங்களில் இப்படியும் அப்படியும் குத்தி, இடித்துக் கொண்டே அத்தை வீட்டு விவரங்களை அலசி அலசி கேட்பார். நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். இதுதான் என் மேல் வெறுப்புக்குக் காரணம் என்று எண்ணியிருந்தேன்.

பிறகுதான் இன்னெரு காரணமும் உண்டு என்று தெரிந்தது. நான் பிறந்த வேளை நல்ல வேளை இல்லையாம்.

என்னைப் பெற்றெடுத்தபோது எங்க அம்மாவுக்குக் கண் கெட்டுவிட்டதாம். அப்புறம் ஏழெட்டு மாதத்துக்குப் பிறகு தான் கண் தெரியத் துவங்கியதாம்.

அதுமட்டும் இல்லை. நான் பிறந்தபோது அப்பாவை அரசாங்கத்தார் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டார்களாம். எங்கேயோ பாங்கியில் பணம் மாற்றப் போயிருந்தாராம். பாங்கிக்குப் போய்வந்தவுடன் அம்மாவுக்கு நிறைய தங்க நகைகள் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தாராம். அவரும் இரண்டு மலையாளத்தாரும் பட்டணத்துக்குப் போய்விட்டு வருகிறவழியில் அப்பாவைப் போலீசுக்காரர்கள் பிடித்துக் கொண்டுவிட்டார்களாம். மற்ற இருவரும் எப்படியோ தப்பிவிட்டார்களாம். மூன்று ஆண்டு கழித்து சிறையிலிருந்து அப்பா வந்தார்களாம். அப்போதிலிருந்து என்னைத் 'துக்குறி' என்றும், 'சனியன்' என்றும் நான் பிறந்ததிலிருந்தே குடும்பம் நொடித்துப் போனதாகவும் அப்பாவுக்கு முன்னேயே அம்மா திட்டுவார்கள். அப்பாவும் அதை ஆமோதிப்பதுபோல வாய்பேசாமல் அப்படியே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்.

கள்ள நோட்டுக் கேசில் அப்பா அகப்பட்டுக்கொண்டதற்கும், அம்மாவுக்குக் கண் கெட்டதற்கும், அத்தை என்னிடம் அன்பு காட்டியதற்கும் நான் செய்த குற்றம் என்ன என்று எனக்கே தெரியவில்லை. இன்னும் ஏதேனும் காரணம் இருக்குமோ என்னவோ? அம்மா எப்போதும் என்னை வெறுத்தே வந்தார்.

# 3

என்னைக் கொடுமையாக நடத்துவதுபற்றிப் பக்கத்து வீட்டார் எல்லோரும் மெல்ல மெல்லப் பார்த்தும் பாராமலும் அம்மாவைக் குறை கூறிவந்தனர். இந்தக் குறைகளிலிருந்து தப்பிக்க, என்னை எப்படியாவது தொலைத்துக் கட்டிவிடுவது என்று அம்மாவும் கங்கணம் கட்டிக்கொண்டார். அம்மாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று வந்தது. எங்கள் ஊரிலிருந்து ஏறக்குறைய ஐம்பது மைல் தூரத்தில் ஏதோ அனாதை ஆசிரமம் ஒன்று இருந்தது. கன்னிப் பெண்கள் சிலர் அங்கே கற்று வந்தனர். சோறு போட்டுப் படிப்பும் சொல்லிக் கொடுத்துவந்தனர். அதைப்பற்றிக் கேள்விப் பட்டிருந்தேன். அந்த ஆசிரமத்தில் படிக்கும் பெண் ஒருத்தி விடுமுறையில் எதிர் வீட்டுக்கு வந்திருந்தாள். அவளிடம் பேச்சுக்கொடுத்து அந்தச் செய்தியை அம்மா அறிந்துகொண்டார். என்னை எப்படியாவது அதில் சேர்த்துவிட வேண்டும் என்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கினர். அங்கிருக்கும் கணக்கப் பிள்ளையைக் கவனித்தால் காரியம் எளிதாக ஆகிவிடும் என்ற உண்மையையும் அறிந்துகொண்டார். என்னை வீட்டைவிட்டு விரட்ட அதாவது அந்த அனாதை ஆசிரமத்தில் சேர்க்க அம்மா பெரும்பாடுபட்டார்.

எனக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது; அடிமையை விடக் கேவலமாக அம்மாவிடம் வாழ்வதைவிட்டு அனாதை

க—2

ஆசிரமத்தில் உரிமையாக வாழ்வது இன்பமாகவே இருக்கும் என்று நம்பினேன், 'ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும்' வைக்கும் இந்த ஓர வஞ்சனையிலிருந்து விடுபட்டால் போதும் என்று எண்ணினேன். விடுதலை பெற்ற கூண்டுக் கிளிபோல் ஒருவாறு ஆசிரமத்தை வந்தடைந்தேன்.

ஓரிரு மாதங்கள் மன மகிழ்ச்சியாக இருந்தது. வேலைகள் அதிகம்தான். இருந்தாலும் வேதனை ஒன்றும் இல்லை. அங்கே செய்த வேலைகளை எல்லாம் வேறு எங்கே செய்தாலும் சோறும் போட்டுக் கூலியும் தருவார்கள். ஆனால் வேறு இடத்தில் படிக்கமுடியாது; இங்கே படிப்பதற்கு வாய்ப்பு இருந்தது. வேறு ஒரு மனநிறைவும் எனக்கு இங்குக் கிடைத்தது. எல்லோரும் கூடிச் சமமாகத் துன்பத்தை அனுபவித்தோம். அதனால் கவலை தெரியவில்லை. வஞ்சகமாகத் தனித்து அனுபவிக்கும் இன்பத்தைவிட எல்லோரும் சமமாகப் பகிர்ந்துகொண்டு கலந்து அனுபவிக்கும் துன்பம் மனதுக்கு இதமாகவே இருந்தது.

பொழுது புலர்வதற்கு முன்னே எழுந்துவிட வேண்டும். பால் பண்ணைக்கு உரிய மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்யவேண்டும். அதற்குக் 'கோ சேவை' என்றுபெயர் அதிலிருந்து நகரத்துக்குக் காலையிலேயே பால் போய்விடும். எனவே சுறுசுறுப்பாகச் சாணத்தை எல்லாம் அள்ளிக் கொண்டுபோய் எருக்குழியில் போடவேண்டும். அந்தப் பொத்தல் கூடையில் தூக்கிக்கொண்டு எருக்குழிக்குப் போவதற்குள் ஒழுகி ஒழுகி எங்கள்மேல் சாணம், மூத்திரம் வழியும். அதன் பிறகு கொட்டிலைக் கழுவித் தூய்மை செய்ய வேண்டும். சாயுங்காலம் ஆனதும் போரில் வைக்கோல் பிடுங்கி மாட்டுக்குத் தொழுவத்தில் வைக்கவேண்டும்; மாட்டுத் தொட்டியில் தண்ணீர் நிரப்பவேண்டும். இது நாள் தவருது எப்போதும் நாங்கள் செய்யவேண்டிய வேலை.

இது இல்லாமல் இடையிடையே சில வேலைகளும் வரும். நடவுக்காலத்தில் நாற்று நடவேண்டும்; அறுவடைக் காலத்தில் அறுவடைசெய்தல், கட்டுகட்டுதல், களத்துமேட்டுக்குத் தூக்கி வருதல், அடித்துச் சிதறிய நெல்லைக் கூட்டிச் சேர்த்தல், தூற்றிப்புடைத்தல் முதலிய வேலைகள் எல்லாம் இருக்கும். நான் போய்ச் சேர்ந்தபொழுது நாற்று நட்டுக் கொண்டிருந்தார்கள். நானும் நட்டேன். இரவில் படுக்கப் போகும்போது இடுப்பு முறிந்துவிடுவதுபோல் வலித்தது.

இவற்ருேடு தோட்ட வேலையும் உண்டு. அதுவும் பொது வேலைகளில் ஒன்று. கிணற்றில் தண்ணீர் இழுத்துச் செடிகளுக்கு ஊற்றுதல், களை எடுத்தல், எரு வைத்தல் எல்லாம் எங்கள் வேலைதான். ஆனல் ஒரு வெள்ளரிப் பிஞ்சுகூட பறித்துத் தின்றுவிடக்கூடாது. கணக்குப்பிள்ளை சொல்லும் காசைக் கொடுத்து வாங்கிக்கொள்ளவேண்டும். உழைக்கத்தான் உரிமையே தவிர; உண்ணும் உரிமை இல்லை. தப்பித் தவறி தின்றுவிட்டால் கடுந்தண்டனை கிடைக்கும். எதையாவது தின்றுவிட்டு அம்மாவிடம் அடி வாங்கிய அனுபவம் எனக்கு இருந்ததால் நான் அந்தத் தவறு ஒன்றும் செய்யவில்லை. பாவம்! என்னேடு புதிதாகச் சேர்ந்த பெண் ஒருத்தி ஒரு வளைந்த பிஞ்சைப் பார்த்தபடியே நின்ருள். "அடி! வந்துடு! அங்கே நிற்காதே!" என்று கூப்பிட்டேன். அந்த அப்பாவிப் பெண் "செங்கமலம்! சின்னப் பிஞ்சுடி...குருட்டுப் பிஞ்சு தாண்டி" என்று சொல்லிக்கொண்டே பறித்துக் கடித்து விட்டாள். 'பளார்' என்ற அறை விழுந்தது. எங்கிருந்து பார்த்தானே! எப்படித்தான் அங்கு பாய்ந்து வந்தானே அந்தக் கணக்குப்பிள்ளை.

"ஏண்டி பிச்சைக்காரி பெத்தெடுத்தவளே! என்னை நினைத்துக்கிட்டுப் பறிச்சே. உன்அப்பன் வைத்த தோட்டமா? இல்லே உன் புருஷன் வைத்த தோட்டமா?" என்று அவன் கண்டபடி பேசினன்.

தளதளன்னு இருக்கும் அந்தக் காய்கறிகளை எல்லாம் நகரத்து வியாபாரிகள் வந்து நல்ல விலை கொடுத்து வாங்கிப் போய்விடுவார்கள். இலவுகாத்த கிளி போல நாங்கள் ஏமாறுவோம். அவர்கள் ஒதுக்கிவிட்டுப் போன சொத்தை சொள்ளை, முற்றல் முடங்கல் காய்கள் எல்லாம் எங்களுக்கு வந்துசேரும். அதையும் கணக்குப்பிள்ளை ஆசிரமப் பணம் கொடுத்து வாங்கித்தான் எங்களுக்கு அனுப்பி வைப்பார்.

இப்படிப்பட்ட பொதுவேலைகளைத் தவிர சில தனி வேலைகளும் இருந்தன. அவற்றைக் குழு வேலைகள் என்று சொன்னார்கள். துப்புரவுக்குழு, காய்கறிக்குழு, சமையல் குழு, பரிமாறும்குழு, பாத்திரம் தேய்க்கும்குழு, தண்ணீர் எடுக்கும்குழு இப்படிப் பல குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு வாரம் ஒவ்வொரு வேலை செய்யவேண்டும். வேலை மாறி மாறி வரும். ஒரு முறை பாத்திரம் தேய்க்கும் வேலை இருந்தால் இன்னொரு முறை தண்ணீர் எடுக்கும் பணி செய்யவேண்டும்.

முதன் முதல் நானிருந்த குழுவுக்குக் காய்கறி அரியும் வேலை கிடைத்தது. இன்னொருத்தி என்னை அழைத்துக் கொண்டு காய்கறி வாங்கக் கணக்குப் பிள்ளையிடம் போனாள். "கண்ணம்மா நீ இந்த வாரம் காய்கறிக் குழுவா? அது யாரு புதுசு?" என்று பல்லை இளித்துக் கொண்டே காய்கறிக் கூடை ஒன்றைக் கொடுத்தான். அது நிறைய வாழைக் காய்கள் சீப்பு சீப்பாக இருந்தன. கூடையைக் கொடுத்துவிட்டு ஒரு நோட்டை நீட்டிக் கையெழுத்துப் போடச் சொன்னான். கண்ணம்மா கையெழுத்துப் போட்டாள்.

"உம் நீயும் போடு. என்ன புதுப் பெண்ணேட்டம் நிக்குறே" என்று கேலியாகப் பேசிக் கொண்டே என்னையும் கையெழுத்துப் போடச் சொன்னான். கண்ணம்மா கையெழுத்துப் போட்ட இடத்துக்குப் பக்கத்

திலேயே நானும் போட்டேன். நாங்கள் கையெழுத்துப் போட்ட இடத்தில் ஐம்பது என்ற இலக்கம் குறிக்கப் பட்டிருந்தது.

கூடையைத் தூக்கிக் கொண்டு சமையற்கட்டுக்குப் பக்கத்தில் வந்தோம். இன்னும் மூவர் அரிவாள் மனையோடு அங்கே காத்திருந்தனர். கண்ணம்மா கூடையைக் கவிழ்த்துக் கொட்டினுள். நான்கு சீப்புக்கள் இருந்தன. ஒவ்வொருவரும் வாழைக் காயைப் பிய்த்து அரிய ஆரம்பித்தனர். நான் காய்களை எண்ண ஆரம்பித்தேன். அங்கு இருந்த மூவரும் என்னை வேடிக்கை பார்த்தனர்.

''ஏண்டி வேலேமெனக்கெட்டு எண்ணிக்கொண்டு கெடக்கிறே; முட்டாள்! கிடுகிடுன்னு அரிந்து தள்ளிட்டு வா'' என்று கண்ணம்மா சொன்னுள்.

நான் அவள் பேச்சைச் சட்டைசெய்யாமல் மும்முரமாக எண்ணினேன். ''அடி! என்னடி இது! நாற்பத்து மூன்று தானே இருக்கு. ஐம்பதுன்னு அங்கே எழுதி இருந்துதே'' என்று வியப்போடு கேட்டேன்.

''போடி போ. போக்கற்றவளே. உன்னை அப்பத்தைத் தின்னச் சொன்னுங்களா இல்லே துளையை எண்ணச் சொன்னுங்களா? அங்கே என்ன எழுதி இருக்கு? இங்கே எத்தனை வந்து இருக்கு? இது எல்லாம் உனக்கு எதுக்குடி? கையை வெட்டிக்காமே வேலையைப் பாரு. புதுசு நீ. போகப் போக எல்லாம் தெரியும். இப்படி ஏதாவது ஆரம்பிச்சே சீட்டுக் கிழிந்திடும்; எங்கும் போக வழியில்லாத அனுதையின்னு முதுகு விரிந்திடும்'' என்று தானறிந்தவற்றைக் கடகடன்னு கொட்டினுள்.

இன்னொரு முறை சமையல் செய்யும் முறை வந்தது. என்னைத் தவிர மற்ற நான்கு பேரும் எங்கள் குழுவில் பழையவர்கள்; நான் ஒருத்திதான் புதியவள். அன்றையத்

திட்டப்படி காலைச் சிற்றுண்டிக்காக நாங்கள் வெண் பொங்கல் செய்யவேண்டும்; கருவேப்பிலைத் துவையல் அரைக்க வேண்டும். இருவர் பொங்கல் செய்ய அடுப்பங் கரைக்குப் போனார்கள்! நானும் அவர்களைப் பின் தொடர்ந்து போனேன்.

"ஏய்! அடியேய்! உனக்குப் பொங்கல் செய்யத் தெரியுமா? சும்மா பீத்திக் கொள்ளாதே. வா என்னோடு துவையல் அரைக்கலாம்" என்று கண்ணம்மா என்னைக் கூப்பிட்டாள்.

"நீ துவையல் அரைத்துக்கொண்டு வா. மருந்து அரைத்துக்கொண்டு வந்துவிடாதே" என்று பதிலுக்கு ஏதோ கேலியாகச் சொல்லிவிட்டு மற்ற இருவரோடு பொங்கல் செய்யப் போய்விட்டேன்.

அதற்குள் மற்ற இருவரும் பொங்கல் செய்ய மூன்று பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் பெரிதாக இருந்த அண்டாவை எனக்கு ஒதுக்கி வைத்துவிட்டுச் சிறிதாக இருந்த இரண்டு பாத்திரங்களில் பொங்கல் செய்யத் துவங்கியிருந்தனர்.

"யார் முதலில் பொங்கல் செய்து இறக்குகிறார் பார்ப் போம்" என்று போட்டியிட்டுக் கொண்டு நாங்கள் அடுப்பு எரிக்க ஆரம்பித்தோம். பொங்கல் தளதளன்று கொதிக்க ஆரம்பித்தது. நீண்ட துடுப்பால் துழவித் துழவிக்கிண்டி னேன். 'தளக்' என்ற சத்தத்தோடு ஒரு கொதி வேகமாகக் கொதித்துக் கஞ்சும் சோறுமாய்க் கலந்திருந்த பொங்கலை வாரி இறைத்தது. ஓடிப் போகாமல் பக்கத்திலேயே நின்று துழவிக் கொண்டிருந்த என் கையிலும் முகத்திலும் கஞ்சோடு குழம்பியிருந்த பொங்கற் சோறு 'சதக்'கென வந்து விழுந்தது. தாவணியால் உடனே துடைத்துவிட் டேன். என்றாலும் கஞ்சி பட்ட இடம் எல்லாம் ஒரே

எரிச்சலாக எரிய ஆரம்பித்துவிட்டது. ஆவி படபட அதிகம் எரிந்தது. அடிபிடித்துவிடுமே என்ற பயத்தில் கிண்டிக்கொண்டே தேம்பித் தேம்பி அழுதேன். மற்ற இருவரும் ஒன்றும் அறியாதவர்கள் போல் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர். 'பெரிய பாத்திரத்தை வேண்டும் என்றே திட்டம் போட்டு என்னிடம் கொடுத்து விட்டுச் சிரிப்பு வேறு?'' என்று என் நெஞ்சு குமுறியது. அப்போது நான் செருமி செருமி அழுகிற ஓசைக் கேட்டுக் கண்ணம்மா துவையல் அரைத்த கையோடு உள்ளே வந்தாள்.

நான் அழுவதைப் பார்த்துவிட்டுப் பரிவோடு "உனக்குக் கிண்டிவிடத் தெரியாதா? நான் அப்பவே சொன்னேனே. என்னிடம் சொல்லியிருந்தா இந்த வேலையை உனக்காக நான் செய்திருப்பேனே. நீ துவையல் வேலைக்குப் போயிருக்கலாமே. ஐயையோ! கை முகம் எல்லாம் கருத்துக் கருத்துப் போயிருக்குதே! பொங்கல் தெரித்துவிட்டதா? அப்படிப் போ; தேங்காய் எண்ணெய் போடு" என்று ஆதரவோடு என் கையில் இருந்த துடுப்பைத் தான் வாங்கிக்கொண்டு மற்ற இருவர்களையும் பார்த்து, "ஏண்டி பாவிகளா! நீங்க அக்கா தங்கையோட பொறக்கலே, ரெண்டு பேரும் கூடிக்கிட்டு பத்து படி பொங்கும் பெரிய அண்டாவைப் புதியவகிட்டே கொடுத்துட்டு நாலுபடி வடிக்கும் சின்ன பாத்திரங்களை வைத்துக்கிட்டிங்களே?" என்று அவர்களை அதட்டினாள். அவர்களை அதட்டிக் கடிந்துகொண்டதும் என்னிடம் அன்பாகப் பேசியதும் எனக்கு ஆறுதலாக இருந்தது.

அழுகையை நிறுத்திவிட்டு, "இல்லை கண்ணம்மா, வீட்டில் நான்தான் பொங்கல் செய்கிற வழக்கம். அது மாதிரி நினைத்துக்கொண்டு விட்டேன்" என்று கையிலும் முகத்திலும் மெல்லத் தேங்காய் எண்ணெயைத் தடவிக்கொண்டே சொன்னேன்.

"வீட்டு வாழ்க்கை வேறு; வீதி வாழ்க்கை வேறு. பத்துப் பேருக்குச் சமைப்பதற்கும் நூறு பேருக்குப் பொங்குவதற்கும் வித்தியாசம் இல்லே?...என்று கேட்டவாறே அவள் வேலேயில் ஈடுபட்டாள்.

இதற்குப் பிறகு நானும் கண்ணம்மாவும் இணேபிரியாத தோழிகள் ஆகிவிட்டோம். எங்குப் போனலும் சேர்ந்தே போவோம். எதைச் செய்தாலும் சேர்ந்தே செய்வோம். மாலேயில் கொஞ்ச நேரம் ஓய்வு கிடைக்கும். சில பெண்கள் தங்கள் தங்கள் உற்ருர் உறவினர் கொண்டுவந்து கொடுத்த தின் பண்டங்களே எங்காவது கண்ணுக்குப் படாத இடத்தில் தனித் தனியே உட்கார்ந்து தின்றுகொண்டிருப்பார்கள். தப்பித் தவறி யாராவது அந்தப் பக்கம் அதைக் கவனியாது போய்விட்டால் வேண்டா வெறுப்போடு முணுமுணுத்துக் கொண்டே கொஞ்சம் கொடுப்பார்கள். இப்படித்தனித்தனியே தின்னப்பிடிக்காமல் கண்ணம்மா ஒன்றும் கொண்டு வருவது இல்லேயாம். அவளும் நானும் அந்த நேரத்தில் வயற்கரைப் பக்கம்போய் அமைதியாக உட்கார்ந்து மனம்விட்டுப் பேசிக்கொண்டிருப்போம். என் வீட்டு வாழ்வுபற்றி நான் கூறுவேன். தன் குடும்ப நிலே பற்றி அவள் சொல்லுவாள். தான் தன் தாய்க்கு ஒரே பெண் என்றும், ஒரே பிள்ளேயான அவள் அண்ணன் ஒரு துவக்கப்பள்ளி ஆசிரியர் என்றும், தன்னே ஆசிரமத்திற்கு அனுப்பிவைக்க அம்மாவுக்கு மனம் இல்லே என்ருலும் அண்ணனுடைய வற்புறுத்தலின் பேரில் இங்கு அனுப்பி வைத்ததாகவும் என்னிடம் அவள் சொன்னள். ஐந்தாம் வகுப்புக்குமேல் படிக்கும் வாய்ப்பு இல்லாததால் அவள் அம்மா ஒருவாறு மனம் ஒப்பி மேலே படிக்க இங்கு அனுப்பி வைத்ததாக அவள் கூறினள். பத்தாம் வகுப்புவரை எங்கள் ஊரில் படிக்க வாய்ப்பு இருந்தும் என் அம்மா என்னே விரட்டி விட்டதை நான் நினேத்துக்கொண்டேன்.

இப்படி ஏதாவது கொஞ்சநேரம் வீட்டு விவகாரம் பேசி முடிந்ததும் அவள் தான் கொண்டுவந்த பாரதியார் பாடல்கள் சிலவற்றைப் பாடி எனக்குக் கற்றுக்கொடுப்பாள். "ஜெயம் உண்டு பயம் இல்லை மனமே" என்ற பாடல் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கற்றுக்கொண்டு மெல்ல ஒருநாள் பாடிக் காட்டினேன். "மிக நன்ருகப் பாடுகிருயே-நல்ல, இனிமையான குரலடி உனக்கு" என்று மனமாரப் பாராட்டினுள். என் வாழ்க்கையில் என்னைப்பற்றி நான் கேட்ட முதல் பாராட்டு அது.

இப்படியே கவலையின்றி வாழலாம் என்று மனப்பால் குடித்தேன். ஆனல் அந்த வாழ்வுக்குத் தடையாகப் புதிய நிர்வாகி ஒருவர் வந்துசேர்ந்தார். பழைய நிர்வாகிக்குப் பணம் மட்டும் போதும். இவரோ... சொல்வதற்கே கூசுகிறது. நெறியில்லாத மிருகம். 'கற்பு' என்ருல் என்ன விலை என்று கேட்பவர். அவருக்குக் கை கால் அமுக்கிவிட தினம் ஒருவர் போகவேண்டும். அப்படி ஒன்றும் வயசும் ஆகிவிடவில்லை. கைகால் வலி வருவதற்கு ஆசிரமத்திற்கு நடந்தும் வருவதில்லை. கார் அல்லது குதிரை வண்டியில் தான் வருவது வழக்கம்.

வாத்தியாரம்மாதான் யார் யார் என்றென்று போக வேண்டும் என்று திட்டமிட்டு அனுப்புவார். கால் கை அமுக்கப் போகிறவர்களுக்கு சமூகக் குழு வேலை இல்லை. அத்தோடு இனிப்பு வேறு நிர்வாகி தருவார்.

எத்தனையோ ஏழைச் சிறுமிகள் இனிப்புக்கு ஏங்கி அங்கே இருந்தனர்; அந்த இன்பத்தை நாடி அங்கே தங்கினர். அவர்கள் மகிழ்ச்சியோடு தங்களை அலங்கரித்துக் கொண்டு சென்றதை அடிக்கடி நான் பார்த்திருக்கிறேன்.

நல்லவர் சிலர் அந்த ஏழை அனுதைகள் இடையேயும் இல்லாமல் இல்லை. ஆனல் பாவம் அவர்கள் என்ன செய்

வார்கள். தயக்கத்தோடு வாத்தியாரம்மாவை வாய்க்குள் திட்டிக்கொண்டேபோய் கண் கலங்கியவாறு நிர்வாகி அலுவலக அறையிலிருந்து வெளிவந்ததைப் பார்த்து பயந்து பலமுறை நடுங்கியிருக்கிறேன்.

அந்த வாத்தியாரம்மாவை தலைமை ஆசிரியையாக நிர்வாகி ஆக்கிவிடப் போவதாகப் பெண்கள் சிலர் பேசிக்கொண்டனர். அடிக்கடி அந்த அம்மாவைத் தன் காரில் ஏற்றிக்கொண்டுபோய் புதுப்புது புடவை துணிமணிகளும் அவர் வாங்கிக் கொடுத்து வந்தார்.

புதிய நிர்வாகி ஒரு கவிஞராம். அவருக்கு எல்லாம் அழகாக இருக்க வேண்டுமாம். அதனால் தான் வந்தவுடன் வயதான பழைய வாத்தியாரம்மா பலரை வேலையை விட்டு நீக்கி விட்டதாகவும் கூறினர்; ஆனால் உண்மையில் அந்த வாத்தியாரம்மா எல்லாரும் இந்தப் புது நிர்வாகியின் குணம் பிடிக்காமல் தாங்களே விலகிக்கொண்டதாகக் கண்ணம்மா கூறினாள்.

சிலர் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டாலும் சிலர் கண் கலங்கச் சகித்துக்கொண்டாலும் சிலர் துணிந்து மறுத்து வந்தனர். அப்படிக் கால் கை அமுக்க மறுக்கும் சிறுமிகள் அனாதையாக இருந்தால் ஏதோ காரணங்காட்டி அவர்களுக்கு அடி உதைவிழும். யாரேனும் சிபாரிசுசெய்து வந்து சேர்ந்திருந்தால் ஏதோ சாக்குப் போக்குக் காட்டி ஆசிரமத்தை விட்டு விரட்டியடிக்கப்படுவார்கள். இவற்றை எல்லாம் கண்களால் பார்த்தேன். பீஜீத் தீவில் மட்டும்தானா? இங்கும், பிறந்த மண்ணிலும் நம் பெண்கள் பிறர் காதில் விழாமல் விம்மி விம்மி அழுவதையும் பிறர் கண்களுக்குத் தெரியாமல் தேம்பித் தேம்பித் திணறுவதையும் நான் என் கண்களால் பார்த்துச் செவிகளால் கேட்டேன். என்னவோ என் நல்ல காலம். என்னை அந்தச் சனி பிடிக்கவில்லை. ஒரே கருப்பாக நான் இருந்ததனாலோ என்னவோ? கருப்பு

நிறத்தைக் கொடுத்த கடவுளை முதல் முறையாக மனமார வாழ்த்தினேன்.

அதற்குள் காலாண்டு விடுமுறையும் வந்தது. எப்படியோ தப்பினேன் பிழைத்தேன் என்று ஊருக்கு வந்து சேர்ந்தேன். அறைப் பெண்கள் எல்லாம் அங்கேயே தங்கிவிட்டனர். அவர்களுக்குப் போக்கிடம் எங்கே இருக்கிறது? தாய் வயிற்றைவிட்டு வெளியே வந்ததிலிருந்து பூமிதேவி வயிற்றுக்குள் போய்ப் புதைவதற்குள் என்னென்ன துன்பங்களையும் தொல்லைகளையும் அவர்கள் அனுபவிக்க வேண்டுமோ?

# 4

காலாண்டு விடுறை முடிவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னேயே என் மூட்டையை அம்மா கட்டி வைத்துவிட்டார். அம்மா தூங்கிய சமயம் பார்த்து ஒரு நாள் பிற்பகல் நான் அத்தையிடம் போனேன். அத்தானைக் காணவில்லை. அத்தை தோட்டத்தில் சாணி தட்டிக்கொண்டிருந்தார்: "அத்தே அத்தே!" என்று மெல்ல அழைத்தபடி தோட்டத்துக்குப் போனேன். செடிகள் எல்லாம் வாடி இருந்தன; தண்ணீர் ஊற்றிப் பலநாள் ஆனதுபோல் தோன்றின.

"ஏன் அத்தெ! அத்தான் ஊரில் இல்லையா?" என்று கேட்டேன்.

"ஆமாண்டி ஆமாம். நீ ஆசிரமத்துக்குப் படிக்கப் போன பிறகு அவன் வாத்தியார் வேலைக்குப் படிக்கப் பொயிட்டான். மூனு மாசம் ஆய்ச்சு. கடிதாசி மாத்திரம் வந்துகிட்டு இருக்கு. இன்னும் அவன் வரலெ. என்னாலே ஒன்னும் வேலை வெட்டி முன்னே போல செய்யமுடியலெ. கிணற்றிலே போய்த் தண்ணிகூட தூக்கிவர முடியலெ. ஏதோ முடிஞ்சப்ப ஒரு தோண்டி அதிகம் தூக்கிக் கொண்டு வந்து அவன் வச்சிட்டுப்போன இந்தச் செடி கொடிங்களுக்குத் தண்ணீர் ஊத்தறேன். அதான் வாடிப் பொயிடுச்சின்னு" மெல்ல மூச்சு வாங்க வாங்கச் சொல்லி முடித்தார்கள்.

என் எண்ணம் எது எதையோ பற்றிப் படர்ந்து கொண்டிருந்தது.

"எங்கடி அத்தி பூத்தா போலே இப்படி இங்கே வந் துட்டே" என்று அத்தை கேட்ட பிறகுதான் நான் அங்கே வந்த காரணம் நினைவுக்கு வந்தது. அங்கு ஆசிரமத்தில் நடக்கும் கொடுமைகளை அரை குறையாக அழுதுகொண்டே அத்தையிடம் சொன்னேன். "அப்படியா பாவி" என்று தன் அடி வயிற்றைப் பிடித்துக்கொண்டு என்னைப் பரிதாப மாகப் பார்த்தார்கள்.

"அந்தக் கால் கை அமுக்கும் படிப்பு உனக்கு வேண் டாம். ஏதாவது சொன்னால் மூட்டையைக் கட்டிக் கொண்டு சொல்லாமல் ஓடிவந்துவிடு. பார்த்துக்கொள்ள லாம்" என்று அத்தை தைரியம் சொன்னார்கள். மீண்டும் ஆசிரமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். ஒரு மாதம் வரை நான் பாட்டுக்கு என் வேலைகளைச் செய்து வந்தேன். அப் போது ஏதாவது வகுப்புக்கள் நடக்கும். பாட்டு, நடனம் இவற்றுக்கு ஒன்றும் குறைவு இருக்காது. எனக்கும் எல்லாம் கற்றுக்கொடுத்தனர். நிறம் கருப்பாக இருந்தா லும் என்னவோ குரல் மட்டும் இனிமையாக இருந்தது. 'ஆசிரமக் குயில்' என்று என்னைக் கேலியாகப் பாராட்ட வும் செய்தனர்.

ஆசிரம இலக்கிய மன்றத் திறப்பு விழாவுக்குப் பெரிய அதிகாரி ஒருவர் வந்தார். அந்த அதிகாரியைப் புகழ்ந்து அவர்மேல் ஒரு பாட்டு எழுதியிருந்தார் எங்கள் நிர்வாகி. அதனைப்பாடுவதற்கு என்று என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். எப்படிப் பாடவேண்டும் என்று பயிற்சி வேறு கொடுத் திருந்தார்கள். அன்று என்னவோ மிக நன்றாகப் பாடிவிட் டேன் என்று நினைக்கின்றேன். அந்தப் பெரிய அதிகாரி, நிர்வாகி இயற்றிய பாட்டையும் அதனை அழகாகப் பாடிய என்னையும் மாறி மாறிப் புகழ்ந்து பேசினார். எனக்குப்

பெருமையாக இருந்தது. என் உடல் ஏதோ வானவெளியில் பறப்பதுபோல உணர்ந்தேன். சுற்றி இருந்த எல்லாப் பெண்களும் என்னையே ஆர்வத்தோடு பார்ப்பதாக அறிந்தேன். கேலியாக 'ஆசிரமக் குயில்' என்று அழைத்தவர்கள் இப்போது அன்போடு, மரியாதையோடு என்னைப் புகழ்ந்து தங்களுக்குள் பேசிக்கொண்டனர். என் வாழ்விலேயே ஏதோ புதுமை நிகழ்ந்துவிட்டது போலவும் எனக்கு ஏதோ ஒரு சிறந்த எதிர்காலம் இருப்பது போலவும், இனிக் கவலையற்ற வாழ்வு துவங்கிவிட்டது என்றும் அன்றெல்லாம் என்னை மறந்து கற்பனை உலகில் பறந்து கொண்டிருந்தேன்.

மாலையில் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தோம். வாத்தியாரம்மா அழைத்ததாகக் கண்ணம்மா வந்தாள். பத்துத் தேய்த்த கையோடு போனேன்.

"அடி அசடே! கையைக் கழுவிக் கொண்டு வா. இந்தா சோப்பு; முகத்தையும் கழுவிக் கொண்டு வா" என்று என்றும் இல்லாத பரிவோடு வாத்தியாரம்மா கூறினர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'சிடு மூஞ்சி' ஏதாவது திட்டிவிடும் என்று பயந்தபடியே கைகால் முகம் கழுவிக் கொண்டு போனேன். அன்போடு என்னை அழைத்து அருகில் வைத்துக்கொண்டு ஆர்வத்தோடு எனக்குத் தலை பின்னி மல்லிகைப் பூவைத்து அழகு செய்தார். இதுவரை என் தாயிடம்கூட கண்டறியாத அந்த அன்பு மனதிற்கு இதமாக இருந்தது. நெஞ்சம் நெகிழ்ந்தது. "ஆகா! என் இனிய குரல் வாத்தியாரம்மாவை எவ்வளவு மாற்றிவிட்டது. உலகத்தில் எல்லோரும் நல்லவர்கள்தான். ஏதோ ஒவ்வொரு சமயத்தில் கொடுமையாக நடந்துகொள்கிருர்கள். அதை வைத்துக் கெட்டவர்கள் என்று நாம் முடிவு கட்டிவிடக்கூடாது." என்று எண்ணுள் என்னென்னவோ நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தேன்.

மெல்ல தலையைத் தடவிக் கொடுத்தபடியே, "இன்றைக்கு நிர்வாகி ஐயா உனக்குப் பெரிய பரிசு கொடுக்கப் போகிறாராம். அலுவலக அறையில் இருக்கிறார். உன் குரலில் அவர் மயங்கிப் போய்விட்டார். உன் பாடு இனி யோகந்தான். போய் வா. என்ன? என்னை மறந்து விடாதே!" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டும் என் கன்னத்தை மெல்லக் கிள்ளியபடியும் ஏதேதோ சொல்லிக் கொண்டே போனார். அப்புறம் ஒன்றும் நான் காது கொடுத்துக் கேட்கவில்லை. என் மனம் எங்கோ போய் விட்டது.

என் இதயம் 'படபட' என்று அடித்துக்கொண்டது. நெருப்பை மிதித்து விட்டதுபோல் உடல் நடுங்கியது. "மோதி மிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா" என்று மனத்திற்குள் நினைவூட்டிப் பார்த்துக் கொண்டேன். 'புலிக் குகைக்குள் போய் ஆட்டுக் குட்டியால் மோதி மிதிக்க முடியுமா?' என்று எண்ணி வருந்தியபடியே இன்னது செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தேன்.

"ஏண்டி பெண்ணே! எதிர்காலத்திட்டம் பலமோ? இப்போதே உன்னை மறந்து எதிர்காலக் கற்பனையிலே பறக்க ஆரம்பிச்சுட்டாப்போல இருக்கே. நான் எவ்வளவு நேரமா இங்கே நிற்கிறேன்!" என்று அதட்டுவதுபோல் வஞ்சமாகக் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தவாறு வாத்தியாரம்மா என்ற தூய பெயரைப் பாழ்படுத்தவந்த அந்த டீச்சர் என்னை எழுப்பி அங்குப் போகத் துரிதப் படுத்தினாள்.

அதற்குள் ஓரளவு இருட்டிவிட்டிருந்தது. மின் விளக்கு ஒன்றுகூட இல்லை. சுற்றிலும் நான்கு நீண்ட விடுதிகள். ஒன்று சமையல் செய்து சாப்பிடும் இடம். அதற்கு எதிரில் பெண்கள் தங்குதல், உறங்குதல் முதலிய எல்லாம் நிகழும்

விடுதி இருந்தது. வகுப்புக்கள் நடைபெறும் கலைமகள் இல்லம் ஒரு புறமும் அலுவலக அறை மற்ெருரு புறமும் இருந்தன. கலைமகள் இல்லத்திலேயே வாத்தியாரம்மா ஓரிருவர் விடுதிப் பொறுப்பாளராகத் தங்கி இருந்தனர்.

கலைமகள் இல்லத்திலிருந்து அலுவலக அறைக்கு இடையே ஒரு சின்ன பூங்கா. புங்கன், வேம்பு மரங்கள் பூங்காவைச் சுற்றி அடர்ந்து வளர்ந்திருந்தன. நடுவில் கொடிமரம். கலைமகள் இல்லத்தில் உட்கார்ந்திருந்தால் வாத்தியாரம்மா தொல்லை கொடுப்பாள் என்று நினைத்துத் தயங்கித் தயங்கி நடந்து புங்கன் மரத்தை ஒட்டி நின்று கொண்டு திரும்பிப் பார்த்தேன். வாயிலில் நான் போவதையே விழித்துப் பேய்போல் பார்த்துக்கொண்டிருந்த டீச்சர்...

"போடி போ! நான் பார்க்கிறேனே என்று வெட்கமா? அடி கழுதை! நீ பெரிய கள்ளிடி—நான் என்னமோ ஒன்றும் தெரியாதவள்னு நெனச்சுட்டேன்—நான் போறேன். வெட்கப்படாமே போ" என்று பாதி கையாலும் பாதி வாயாலும் பேசிவிட்டு, பற்கள் வெளியே தெரிய சிரித்தபடியே உள்ளே போனுள். ஏதோ பேய் பல்லை இளித்துவிட்டு மறைந்தது போல இருந்தது.

அப்போது அலுவலக அறையில் மினுக் மினுக்கென்று அரிக்கேன் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிர்வாகியின் கழுகுக் கண்கள் பளிச்சிட்டன. எங்கள் வீட்டுக் குப்பை மேட்டில் கீச்சு கீச்சு என்று கத்தக் கத்தக் கோழிக் குஞ்சுகளைக் கொத்திக்கொண்டு பறக்கும் பருந்து என் மனக்கண்முன் ஒரு விநாடி வந்து போனது. வயிற்றை என்னவோ செய்தது. தயங்கி நின்ருல் முகம் தெரியாத அந்த முன்னிரவில் நிர்வாகியே வந்து இழுத்துக்கொண்டு போய்விடுவாளுே என்ற அச்சம் வந்து என்னைக் கவ்விக் கொண்டது.

அப்போது திடீரென்று ஒன்று நிகழ்ந்தது. ஏன் நிகழ்ந்ததோ? எப்போதும் அடிக்கடி நிகழ்வதுதான் அது. ஆனால் இன்று அது எனக்கு ஒரு வழியைக் காட்டுவது போல் இருந்தது.

ஆசிரம நாய் ஒன்று அங்கு வந்த பூனைமேல் பாய்ந்தது. அந்தப் பூனை நிர்வாகி அறையைத் தாண்டித் தாவிக் குதித்துத் தப்பி ஓடியது. நானும் ஓடினேன். வாய்க்கால் வரப்பு, புல் புதர், கல் முள் என்று பாராது ஓடினேன். சிறிது நேரம் பின்னால் எவனோ ஓடிவருவதுபோல் காலடி ஓசை கேட்டது. அப்புறம் ஒரே அமைதி. பயங்கர அமைதி. சவுக்குத் தோப்பு ஒன்றுக்கு அருகே நின்றுகொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் ஓடி வந்தேனோ எனக்குத் தெரியாது. எவ்வளவு தூரம் ஓடிவந்தேனோ ஒன்றும் தெரியாது. பின்னால் ஓடிவந்த காலடி ஓசை இன்னும் என் நெஞ்சுக்குள் கேட்டுக்கொண்டிருந்தது. ஒரு பயம் போனவுடன் இன்னொரு பயம் சூழ்ந்துகொண்டது. 'வீட்டுக்கு எப்படிப் போவது? ஆள் அரவமே இல்லாத இந்த இடத்திலிருந்து மனிதர்கள் வாழுகின்ற இடத்துக்கு எப்படிப் போவது?' என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். யார் யாரோ எப்பெப்போதோ சொல்லியிருந்த பேய் பிசாசுக் கதை எல்லாம் அப்போது பார்த்து என் நினைவுக்கு வந்தன. 'அந்திரான காட்டில் நடு இரவில் அகப்பட்டுக்கொண்ட கோழி ஒன்று மரத்தின்மேல் ஏறி விளக்கு எரிந்துகொண்டிருந்த வீடு ஒன்றைக் கண்டுபிடித்ததாக' மூன்றும் வகுப்பு ஆசிரியர் சொன்ன கதை ஒன்று நினைவுக்கு வந்தது. பக்கத்தில் இருந்த பூவரச மரத்தில் ஏறிப் பார்த்தேன். சிறிது தூரத்தில் பெட்ரோமாக்சு விளக்கு ஒன்றின் வெளிச்சம்தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் அங்கே ஆண்கள் எதற்கோ கூட்டமாகக் கூடியிருந்தது தெரிந்தது. அந்தத் திசை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டேன். பாறைக்கல் ஒன்று நன்றாகக் கட்டை விரலில் இடித்துவிட்டது. வலி பொறுக்க

முடியவில்லை. உட்காரவும் பயமாக இருந்தது. கெந்திக் கெந்திக்கொண்டே நடந்து போனேன். நான் போவதற்குள் அந்த வெளிச்சமும் கூட்டமும் எங்கோ புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது. நான் வந்துசேர்ந்த இடம் ஒரு சுடுகாடு. அவர்கள் மயானத்தில் வைத்துக் கொளுத்திவிட்டுப் போன பிணத்தைச் சுற்றிப் புகை சூழ்ந்துகொண்டிருந்தது. என் மனமும் புகைந்துகொண்டுதான் இருந்தது. என்ன செய் வது, அந்தப் புகைச்சலால் அந்த உடலை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் என் மனப் புகைச்சலோ என்னைக் குழப்பிப் பயமுறுத்திக்கொண்டிருந்தது.

மெல்ல மெல்ல அந்தக் கூட்டத்தைப் பின் தொடர்ந்து போனேன். நல்ல காலமாக ஒருத்தர்கூட திரும்பிப் பார்க்க வில்லை. ஊர் நெருங்கிற்று. ஊரின் முன்னேயே இருந்த ஒரு வீட்டின் தெருப்புறம்போய்க் கூட்டம் நின்றது. நான் மட்டும் வேலி ஒன்றும் இல்லாது வெட்ட வெளியாக இருந்த கொல்லைப்புறம் போனேன். சில பெண்கள் அழுது கொண்டும் சில கிழவிகள் அங்கும் இங்கும் போய்க் கொண்டும் சில குழந்தைகள் தூங்கி விழுந்துகொண்டும் இருந்தார்கள். நன்றாக இருட்டி இருந்தது. தலையில் இருந்த பூவை எடுத்து அப்பால் எறிந்துவிட்டுச் சடையை அவிழ்த்து முடிந்துகொண்டு தூங்கிவழிந்த கூட்டத்தோடு கலந்துகொண்டேன். ஏதோ கரைத்து எல்லோருக்கும் ஒவ்வொரு குவளை கொடுத்தார்கள். பெட்ரோமாச்சு விளக்கு ஆண்கள் பக்கம் இருந்ததால் பெண்களை இவர் இவர் என்று அடையாளம் காணமுடியவில்லை. என்னையும் ஊர்க் காரப் பெண்களுள் ஒருத்தி என்று நினைத்து எனக்கும் ஒரு குவளை கொடுத்தார்கள். மூச்சுப் பேச்சுக் காட்டாது வாங்கிக் குடித்துத் தீர்த்தேன். அது கேழ்வரகு கூழ். நன்றாகப் புளித்துப்போயிருந்தது. மெல்லச் சாய்ந்து அந்த மண் தரையில் கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு மல் லாந்து படுத்தேன். ஆகாயத்தில் அங்கொன்று இங்

கொன்றாக நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. நிலவும் சரியாகத் தெரியவில்லை. பெரிய கரிய மேகம் ஒன்று மறைத்துக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். எப்போது தூங்கினேனோ தெரியாது. நன்றாகத் தூங்கிப் போய்விட்டேன்.

# 5

யாரோ என்னைத் தட்டி எழுப்பினார்கள். கண் விழித்தேன்; புரண்டேன். மண்ணில் கிடப்பதை உணர்ந்தேன். ஒரு விநாடி ஆசிரம நினைவு வந்து போயிற்று. என் நல்ல காலம் பொழுது இன்னும் சரியாக விடியவில்லை. 'கொக்கரக்கோ' என்ற சேவற் கோழிகளின் கூக்குரல் விட்டு விட்டுக் கேட்டது. மெல்ல எழுந்து கண்களைச் சுழற்றி அங்கும் இங்கும் பார்த்தேன். ஆற்றங்கரைக்கு ஒருவரை ஒருவர் அழைத்தவாறு எல்லோரும் போய்க்கொண்டிருந்தனர். ஆற்றங்கரையில் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் இருள் திட்டுக்கள்போல் தோன்றின. 'நாமும்தான் போவோமே; இங்கேயே பொழுது விடிந்து விட்டால், நாம் வேறு யாரோ என்று தெரிந்துகொண்டு விட்டால் என்ன நேருமோ? போவோம். யாராவது நல்லவர் ஒருத்தர் போகிற இந்தக் கூட்டத்தில் இல்லாமலா போய்விடுவார்கள்!' என்று எண்ணிக்கொண்டே பின் தொடர்ந்து போனேன்.

காலைக் காற்று சில்லென்று வீசியது. ஆற்றங்கரைக்குப் போகிற வழியில் பெரியசாலை ஒன்று குறுக்கிட்டது. அதற்குச் சிறிது தூரத்தில் சந்திப்பு ஒன்று வந்தது. அந்தச் சந்திப்பின் நடுவில் ஊர்களுக்கு வழிகாட்டும் கம்பம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. ஒருகால் 'அதில் நம்

ஊர்ப்பெயர் எழுதியிருந்தால்' என்ற ஆர்வத்தில் நெருங்கி வேகமாகப் போய்ப் பார்த்தேன். என்னென்ன ஊர்ப்பெயர் களோ அதில் எழுதியிருந்தன. எங்கள் ஊர்ப் பெயர் மட்டும் அதில் இல்லை. ஏமாற்றத்தோடு ஏங்கியபடியே நின்றேன். கீழ்த்திசையைக் காட்டும் பலகையில் உள்ள அந்த ஊர் ஏனோ என் மனதில் மீண்டும் மீண்டும் வந்து நின்றது. மின்னல்போல் ஒரு சிறு தெளிவு ஏற்பட்டது. அது என் தோழி கண்ணம்மா ஊர். கண்ணம்மா தன் அப்பா இறந்து போனது பற்றியும், அம்மாவின் துன்பங் களைப்பற்றியும், ஆசிரியர் வேலைபார்க்கும் தன் அண்ணனின் நல்ல குணங்கள் பற்றியும் கூறியது எல்லாம் என் நினை வுக்கு வந்தன. அந்தத் திசை நோக்கி நடக்க ஆரம்பித் தேன்.

வெய்யில் ஏறிக்கொண்டிருந்தது. காலையில் ஒன்றும் சாப்பிடாத நினைவும் பசியும் தொடர்ந்து வந்தன. கட்டை விரல் வலி வேறு சேர்ந்துகொண்டது. கண் மங்கத் துவங் கியது. சுற்றி இருந்த மரம் செடி கொடிகள் எல்லாம் சுற்று வது போலத் தெரிந்தது. பக்கத்தில் ஓடிய ஓடையில் தண் ணீரைக் கைகளால் மொண்டு மொண்டு வயிறூரக் குடித் தேன்; முகம் கழுவிக்கொண்டேன். கொஞ்சம் நிதானம் வந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒருவாறு அந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். விசாரித்துக் கொண்டு கண்ணம்மாவின் வீட்டையும் அடைந்தேன்.

அந்த அம்மா அப்போதுதான் சோறு பரிமாறிக்கொண் டிருந்தார். இருபது இருபத்தொரு வயதுடைய ஒருவர் உண்டு கொண்டிருந்தார். கண்ணம்மா போன்ற முகம் தான். ஆனல் அவள் முகத்தில் இருந்த படபடப்பு இவர் முகத்தில் இல்லை. ஏதோ ஒரு அமைதியான அழகு அங்கே விளங்கியது. அந்த அம்மா அவரைப் பார்த்தவாறு பரிமாறிக் கொண்டிருந்ததால் என்னைக் கவனிக்கவில்லை.

எதற்கோ தலை நிமிர்ந்த அவர் என்னைப் பார்த்து விட்டு, "அம்மா! அதோ பார். யாரோ பொண்ணு" என்று என்னைச் சுட்டிக்காட்டிக் கூறினார். அந்த அம்மா திரும்பிப் பார்த்துவிட்டு, "யாரும்மா நீ? எங்கிருந்து வர்றே?" என்று வியப்போடு கேட்டார்.

நான் யார் என்பது பற்றி ஒன்றும் கூருமல் "ஆசிரமத்தில் இருந்து வருகிறேன். உம்...கண்ணம்மாவை எனக்குத் தெரியும்" என்று நிறுத்தி நிறுத்திச் சொன்னேன்.

தன் மகளையே கண்டதுபோல அந்த அம்மாவின் முகம் மலர்ந்தது. "கண்ணம்மாவிடமிருந்தா வர்றே? வாம்மா வா" என்று அகமலர வரவேற்று என்னை ஏற இறங்கப் பார்த்தார்கள்.

"ஏம்மா கால்லே ரெத்தம்; பாவாடை கிழிந்திருக்கு; முகம் எல்லாம் வெளிரிப் போயிருக்கே; எங்காவது பயந்துட்டியா?" என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே போனார்கள். எனக்கு எதைச் சொல்வது எப்படிச் சொல்வது என்று ஒன்றும் தோன்றவில்லை.

"ஏனம்மா ஒரே கேள்வியாய் அடுக்கிக் கொண்டே போறிங்க. அந்தப் பொண்ணு மயங்கி விழுந்திடுவா போலிருக்கு" என்று என்னைப்பார்த்து, "தங்கச்சி கைகால் கழுவிக்கிட்டு வா; சாப்பிடலாம்." என்று அன்போடு அழைத்தார்.

என் அண்ணனிடம் இத்தனை ஆண்டுகளாகக் கேட்காத அன்பு வார்த்தைகளைச் சில நிமிடப் பழக்கத்தில் அங்கு அவரிடம் கேட்டு மகிழ்ந்தேன். உண்மையில் எனக்கும் பசி காதை அடைத்தது; கண்ணை இருட்டியது. கை கால் கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்தேன். வயிருர உண்டேன். நான் உண்ண உண்ண அந்த அம்மா ஆவலோடு பரிமாறினர்கள். "மாங்காய்

ஊறுகாய் வேண்டுமா எலுமிச்சை வேண்டுமா?'' என்று கேட்டுக்கொண்டே இரண்டு ஊறுகாய்களையும் வைத்தார்கள். கட்டித் தயிர் இட்டார்கள். நன்ருகப் பருப்பிட்டுச் செய்த பீர்க்கங்காய்க் கூட்டு நிறைய வைத்தார்கள். ஏதோ ஒருவகைப் பசிவெறி. வாய் திறவாமல் வைத்ததை எல்லாம் தின்று தீர்த்தேன். கை கழுவினேனே என்னவோ படுத்து நன்ருகத் தூங்கிவிட்டேன்.

''டர்ர்ர் டக், டர்ர்ர் டக்'' என்ற ஓசை கேட்டு மெல்லக் கண் விழித்தேன். அந்த அம்மா இட்டலிக்கு அரைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த அம்மாவை ஆர்வத்தோடு பார்த்தேன். ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதுபோல் தோன்றியது. முகம் அமைதியாக இருந்தது. என்ருலும் இனங் கண்டுகொள்ளக்கூடிய ஒரு துயரத்தின் சாயல் அதில் படிந்திருந்தது. காது பக்கத்தில் ஓரிரு நரை மயிர்கள் வாழ்வின் முதிர்ச்சியைக் காட்டின. நெற்றியில் காலையில் இட்டிருந்த திருநீறு அழியாமல் அப்படியே இருந்தது. உடல் அவ்வளவு மெலிந்தது இல்லைதான். என்ருலும் ஒரு வித சோர்வு அந்த உடலில் காணப்பட்டது. வெள்ளைப் புடவை உடுத்தியிருந்தார்கள். கழுத்தில் செம்பவள மாலை ஒன்று அணிந்திருந்தனர். இப்படி அந்த அம்மாவையே வைத்த விழி வாங்காமல் நான் பார்த்துக் கொண்டிருந்த போது தன் நெற்றியில் தெறித்த உளுத்தம் மாவைக் கட்டை விரல் நகத்தால் வழித்தவாறு தலையை நிமிர்த்திய அம்மா என்னைக் கண்டார்கள். நான் பவளத்தைப் பார்ப்பதைப் பார்த்து விட்டு,

"என்னம்மா! விழித்துக் கொண்டாயா? இந்தப் பவளத்தையா பார்த்தாய்?'' என்று நான் பார்த்துக் கொண்டிருந்ததைப் பற்றிக் கேட்டார்கள்.

''இல்லை அம்மா இல்லை; சும்மா பார்த்தேன். வேருென்றும் இல்லை'' என்று தடுமாற்றத்துடன் சொன்னேன்.

"சே சே. நான் ஒன்றும் தப்பாக எடுத்துக்கொள்ள மாட்டேன். நீ பயப்படாதே. அவர் போன பிறகு எனக்கு இதுகூட தேவை இல்லைதான். ஆனால் இந்தப் பவளமாலை அவர் வாங்கி வந்தது; தூய அன்போடு வாங்கி வந்தது. அந்தக் காலத்தில், வயிற்றுச் சோற்றுக்கே வருந்திய அந்தக் காலத்தில் காலணா அரையணாவாகச் சேர்த்துத் தன் தாய்க்காக அவர் வாங்கி வந்தது. பாவம் அந்த அம்மா. அன்பாகப் பிள்ளை வாங்கிவந்த இந்தப் பவளமாலையைப் போட்டுக் கொள்ளாமலேயே துளசி மாலையைப் போட்டுக் கொண்டு போய்விட்டார்கள். அந்த அம்மா இறந்த அடுத்த வருடமே என்னையும் இரண்டு குழந்தைகளையும் விட்டு விட்டு அவரும் போய்ச் சேர்ந்துவிட்டார். அதற்குப் பிறகு நான் பொட்டு, பூ எல்லாவற்றையும் விட்டு விட்டேன். ஆனால் என்னவோ இந்தப் பவளத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவர் தூய அன்போடு பாடுபட்டு வாங்கி வந்த நினைவு வரும். அதுதான் அம்மா எனக்குத் தெம்பாக இருக்கு. வாழ்க்கையில் என்ன துன்பம் தொல்லை வந்தாலும் இந்தப் பவளமாலையை எடுத்துக் கலங்குகின்ற கண்களில் ஒற்றிக்கொள்வேன். அவரையே கண்டுவிட்டதுபோல ஒரு ஆறுதலாக இருக்கும்"...என்று ஏக்கத்தோடு அவர்கள் கூறியதை இடை மறிக்காது கேட்டு வந்தேன்.

"அது போகட்டும். பூ வாங்கி வைத்திருக்கிறேன். கண்ணாடி, சீப்பு, எண்ணெய் எடுத்து வைத்திருக்கிறேன் தலை வாரிக்கோ" என்று சொல்லிவிட்டு மீண்டும் மா அரைக்கத் துவங்கினார்கள். சாமி மாடத்தில் மல்லிகைப் பூச்சரம் ஒன்று மலர்ந்து மலராத நிலையில் மணம் வீசிக்கொண்டிருந்தது. அவர் சொன்னபடி எண்ணெய் தடவி தலை வாரிக் கொண்டிருந்தேன்.

"ஏம்மா? ஏன் இப்படி திடுதிப்புன்னு வந்திருக்கே" என்று நண்பகலில் விட்ட கேள்வியைத் தொடர்ந்து கேட்

டார்கள். சீப்பைக் கீழே வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்தேன்.

“பயப்படாதே அம்மா. செந்தில் பள்ளிக்கூடம் போய்விட்டான். வர நேரம் ஆகும். சொல்லு. தயங்காமெ சொல்லு!” என்று அவர்கள் பலமுறை கேட்டபிறகு கேவிக் கேவி அழுதுகொண்டே ஒருவாறு நான் வந்த விவரத்தைக் கூறினேன்.

“ம்...ம்” என்று ஒரு பெருமூச்சு விட்டவாறே “உலகம் ரொம்பக் கெட்டுப்போய்ச்சு தம்மா—ரொம்ப மோசமா போய்ச்சு. படிப்பாவது மண்ணுவது. போதும் போ. சாமி தான் நாய் பூனே மாதிரி பாய்ச்சல் காட்டி உன்னைக் காப் பாத்தி இருக்கு. கண்ணம்மா கதி எப்படியோ? நாளைக்கே அவனே அனுப்பிக் கூட்டியாந்துடறேன்” என்று படபடப் பாகப் பேசினார்கள்.

“அம்மா! எங்க ஊருக்கு எப்படிப் போறதுன்னு தெரி யலே. என்னை அனுப்பி வைத்துடுங்க; உங்களைக் கும்பிட்டுக் கேட்டுக்கிறேன்”...என்று நான் அழுது அவர்களை வேண் டிக்கொண்டேன்.

“அனுப்பிச்சுடறேன் அம்மா அழாதே. நீ அழாதே. நாளைக்குச் சனிக்கிழமை. நாளைக்கும் பள்ளிக்கூடம் இருக்கு அவன் லீவு எடுக்கமாட்டான். நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை. விடுமுறை. ஒருநாள் பொறுத்துக்கோ. நான் உன்னை பத்திரமா அனுப்பி வைக்கிறேன்” என்று சொல்லிவிட்டு அவர்கள் மா அரைக்க ஆரம்பித்தார்கள். நான் விரைவாகத் தலை பின்னிக்கொண்டு ஒத்தாசையாக மாவு தள்ளிவிட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது செந்தில் வந்தார். “கண்ணம்மா நலமா அம்மா! இந்தப் பொண்ணு கண்ணம்மாபற்றி என்ன சொல் லிற்று?” என்று தன் அம்மாவைப் பார்த்துக் கேட்டார்.

"என்ன... சொல்லிச்சு," என்று இழுத்தபடியே "என்னத்துக்கு கண்ணம்மாவை ஆசிரமத்துக்கு அனுப்பி வைச்சோம்னு கவலையாக இருக்கு போ. சீக்கிரம் அழைத்துக்கொண்டு வந்துடனும்; அவ அங்கே படிச்சிக் கிழிச்சது போதும்" என்று அவரிடம் சொல்லிக்கொண்டே என்னைப் பார்த்தார்கள். என் கண் கலங்கியதைக் கண்டு அதற்குமேல் அதுபற்றி ஒன்றும் பேசாமல் நிறுத்திக்கொண்டார்கள்.

"உனக்கு ஒரு நிலையான புத்தி இல்லேம்மா. மேலே படிக்க இங்கே வசதி இல்லேன்னுதானே அனுப்பி வைச்சோம். பணம் வாங்கிக்காமே பஞ்சாயத்துத் தலைவரோட பிள்ளைகளுக்கு ஆண்டு முழுதும் பாடம் சொல்லிக்கொடுத்து அவர் சிபாரிசுலே ஆசிரமத்லே கண்ணம்மாவுக்கு இடம் கிடைத்துது. தங்கச்சியை அங்கே சேர்க்க நான் பட்ட பாடு உனக்கு எங்கம்மா தெரியப்போவுது" என்று தன்போக்கில் என்னென்னவோ பேசினர்.

"அது சரிடா சரி. இந்தப் பொண்ணை ஞாயிற்றுக் கிழமை அவள் ஊரிலே கொண்டுபோய் விடனும். கூட்டம் கீட்டம்னு எங்காவது போகத் திட்டம் போட்டுட போறே" என்று முன் கூட்டியே சொல்லிவைத்தார்கள்.

மறுநாளும் மிக்க அன்போடு என்னை ஆதரித்தார்கள். தாயன்பு அறியாத என்னிடம் அவர்கள் காட்டிய அன்பை என்ன பெயரிட்டு அழைப்பது என்று அறியாமல் தவிக்கிறேன். அந்த நாள்தான் என் வாழ்நாளில் மனம் நிறைந்த ஒரு நல்ல நாள் என்று நினைக்கிறேன். ஆனல் அதையும் நான் மன நிறைவோடு கழிக்கவில்லை. அனதை ஆசிரமத்தையும் அம்மாவின் கொடுமையையும் எண்ணி எண்ணி அந்த நல்ல நாளையும் மன வேதனையோடேயே கழித்தேன்.

# 6

ஞாயிற்றுக்கிழமை காலையில் நான்கு மணிக்கே அந்த அம்மா எழுந்துவிட்டார்கள். வெந்நீர் போட்டு என்னைக் குளிக்கச்செய்து, தலைவாரி, மல்லிப்பூச் சூட்டிச் சுடச்சுட இட்டலி கொடுத்து ''தைரியமா போய் வாம்மா ; செந்தில் உன் அண்ணன் மாதிரி ; எது வேண்டுமானாலும் கூசாமே கேள்...'' என்று சொல்லி அனுப்பினார்.

''கூசாமே கேள்'' என்று என்னிடம் கூறியதற்குப் பதில், ''அவள் உன் தங்கைடா ; கூசாமல் கேட்டு அவளுக்கு வேண்டியதை வாங்கிக் கொடு'' என்று அந்த அம்மா சொல்லியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். வண்டியில் ஏறி உட்கார்ந்ததிலிருந்து அந்தப் பக்கம் இந்தப் பக்கம் தலையைத் திருப்பாமல் காந்தி அடிகளின் 'சத்தியசோதனையைப் படிப்பதிலேயே அண்ணன் ஆழ்ந்து போய்விட்டார்.' நான் உடன் வருகிறேன் ; எனக்காகத்தான் அந்த ரயிலில் அப்போது அவர் பயணம் செய்கிறார்' என்பதையும் மறந்துபோய்விட்டாரோ என்றுகூட எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. அந்த நிகழ்ச்சி நிகழாமல் இருந்திருந்தால் அவரை நான் சரியாகப் புரிந்துகொள்ளாமலே போயிருப்பேன்.

இரண்டு மூன்று நிலையங்கள் தாண்டியிருக்கும். ஏதோ ஒரு நிலையம். வண்டி சிறிது நேரம் நின்று புறப்படத்

துவங்கிய சமயம். தடதட என்று இளைஞர் இருவர் நான் இருந்த பெட்டியில் தாவி ஏறிக்கொண்டனர். ஓடுகிற வண்டியில் தாவி ஏறியது தவறு என்ற குற்ற உணர்ச்சி சிறிதுகூட இல்லாமல் ஏதோ தீரச்செயல் செய்தவர்களைப் போல தலையை ஒட்டைச் சிவிங்கிபோல் நிமிர்த்துக் கொண்டு அங்கும் இங்கும் சுழன்று பார்த்தனர். 'யாரோ நண்பர்களைத் தேடுகிறார்கள் போலிருக்கிறது' என்று நினைத்துக்கொண்டேன். உண்மையில் அவர்கள் தங்கள் நண்பர் எவரையும் தேடவில்லை என்பது எனக்கு உடனே தெரிந்து விட்டது. என் கெட்ட காலமோ என்னமோ அந்தப் பெட்டியில் வேறு பெண் ஒருத்தியும் இல்லை. இருந் திருந்தால் அங்கே போய்த் தொலைந்திருந்திருப்பார்கள். எனக்காகவே இதுவரை தேடிக்கொண்டிருந்தவர்களைப் போல இருவரும் என்னிடம் நெருங்கி வந்தனர். ஒருவன் சிகரெட்டைப் புகைத்து என் முகத்தின்முன் ஊதினான்.

மற்றவன் கையில் ஒரு புத்தகம் இருந்தது. அதி லிருந்த அட்டைப் படம் ஒன்றை என் முகத்துக்கு எதிரே பிடித்துக்கொண்டு உட்கார இடம் கிடைக்காதவன் போல் நின்று கொண்டிருந்தான். பளபளப்பாக இருந்த அந்த வண்ண அட்டையில் யாரோ ஒரு பெண்ணின் வடிவம் ஆபாச மாக வரையப் பெற்றிருந்தது. பார்ப்பதற்கு அசிங்கமான படம். முகத்தைத் திருப்பிக்கொண்டேன். மானம் உள்ள எந்தப் பெண்ணும் கண்களை மூடிக் கொள்வாள். ஏன்தான் இந்த நாடு இப்படிக் கெட்டுவிட்டதோ? கண்ணகி யின் கற்பையும் காதல் சிறப்பையும் எந்தக் கை போற்றி எழுதுகிறதோ அதே கை இப்படியும் படம் போடுகிறது. கலையோ கொலையோ எதுவானாலும் ஆகட்டும். பெண் களுக்கு வரவரச் சொரணை கெட்டுப் போய்விட்டது. தங் களைப் பற்றி எவன் எவனோ எப்படி எப்படி எல்லாமோ படம் போடுகிறான். அதையும் காசு கொடுத்து வாங்கிப் பார்க்கிறார்கள். ஆண்களுடைய வெறிக்கு அது வேண்டிய

தாக இருக்கலாம். ஆனால் அதை எல்லாம் இவர்கள் எப்படி அனுமதிக்கிறார்கள்?

"ஓவியச் சாலைக்கா கூப்பிடுகிறீர்கள். நான் ஆண்கள் ஓவியத்தைப் பார்க்கமாட்டேன். நீங்கள் பெண்கள் ஓவியத்தைப் பார்க்க நான் அனுமதிக்கமாட்டேன். எனவே ஓவியச் சாலைக்கு ஏன் போகவேண்டும்?" என்று தமிழ்ப் பெண் ஒருத்தித் தடுத்ததாக மாயூரம் வேதநாயகம்பிள்ளை பாட்டு ஒன்று இருக்கிறது. யார் யாரோ பாடிவிட்டுப் போகிறார்கள். நல்லதைப் பாதுகாக்கவும் அதற்காகப் போராடவும் யார் இருக்கிறார்கள்? மாதர் சங்கமாம் — மங்கையர் மன்றமாம். அதற்கு ஒன்றும் குறைவு இல்லை. இப்படிப்பட்ட புத்தகங்களை எல்லாம் தடுக்கக்கூடாதா? அசிங்கமாகப் படம் போட்டுத் தங்களை அவமானப் படுத்து வதை எதிர்க்கக்கூடாதா? தான் பெற்ற பிள்ளை, தனக்கு வாய்த்த கணவன், தன்னைப் பெற்ற தந்தை ஆகியோர் இப்படிப்பட்ட புத்தகங்களை வாங்கக்கூடாது என்று சத்யாக்கிரகம் செய்யக்கூடாதா? 'சரிநிகர் சமானம்' என்று பாரதி பாடியது இப்படிப் பாழ்படத்தான் போலும், என்று ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்தபோது என் பாதத்தை எதுவோ தொடுவது உணர்ந்து காலை 'டக்' கென்று பின்னுக்கு இழுத்துக்கொண்டேன். வேகமாக இழுத்ததால் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அண்ணன் செந்தில்மேல் பட்டுவிட்டது. அவரும் தலையைத் தூக் காமல் மெல்லக் கண்களை நகர்த்திப் பார்த்து விட்டு மீண்டும் "சத்தியசோதனையில்" மூழ்கிவிட்டார். வேறு ஒன்றும் செய்யவில்லை. என்ன என்றுகூட ஒருவார்த்தை கேட்க வில்லை. 'ஐ ஆம் சாரி' என்று கீழே விழுந்த புத்தகத்தை எடுக்க முயன்றதாகவும் அப்படிக் குனிந்து எடுத்தபோது தன் கை என் பாதத்தில் பட்டுவிட்டது போலவும் ஒருவன் நடித்தான்.

பிறகு இன்னும் சிறிது நேரம் ஆயிற்று. எனக்குத் துணையாக யாரும் வரவில்லை என்று அவர்களே முடிவு செய்துகொண்டது போல் தெரிந்தது. கொஞ்சம் தைரியமாகவே என் பக்கத்தில் வந்து நின்று கொண்டு ஒருத்தன் மாற்றி ஒருத்தன் சினிமாப் பாட்டுப்பாட ஆரம்பித்து விட்டான்.

செந்தில் அண்ணவைத் தலையை அசைத்து மெல்லப் பார்த்தேன். இப்போது கவனம் புத்தகத்தில் இல்லை முகம் வரவரக் கோபத்தால் மாறிக்கொண்டே வந்தது. சத்திய சோதனையில் பிரித்த 113ஆம் பக்கம் பிரித்தபடியே இருந்தது. அந்த முட்டாள்கள் ஒன்றையும் கவனிக்காமல் இன்னும் மிக நெருங்கி வந்தனர். அவர்களுடைய ஆடை என்மேல் படும் அளவு அவ்வளவு நெருங்கி நின்று கொண்டு "அசிங்கமான" பாட்டு ஒன்றை ஒருத்தன் பாடத் துவங்கினன்; மற்றவன் என்னை முறைத்து முறைத்துப் பார்க்க ஆரம்பித்தான்; பக்கத்திலும் எதிரிலும் உட்கார்ந் திருந்த அத்தனை பேரும் பார்த்தும் பாராதுபோல் 'நமக்கு என்ன' என்று இருந்து விட்டதுபோல் தெரிந்தது. 'நெட்டை மரம் போல்' இல்லாது குட்டிச் சுவர் போல் அவர்கள் எல்லாரும் கூனிக் குறுகி உட்கார்ந்திருந்தனர். என் உடம்பு வியர்த்துக் கொட்டியது. மயக்கமே வந்துவிடும் போல் இருந்தது; தலையைக் குனிந்துகொண்டேன்.

'பளார்' என்று யாரோ யாரையோ அறைந்த சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தேன். அதற்குள் 'பளார் பளார்' என்று நான்கைந்து அறைகள் விழுந்துவிட்டன. செந்திலா அது? பார்க்கவே பயமாய் இருந்தது. கண்கள் சிவந்துபோய்விட்டன. சுவாசம் அனல் போல் வீசியது. செந்தில் அந்த இரு கயவர்களையும் அறைய ஆரம்பித்தவுடன் சுற்றி இருந்த சிலரும் செந்தில் கட்சியில் சேர்ந்து கொண்டனர்.

"நானும்தான் கால்மணி நேரமா பார்க்கிறேன். என்ன கிலாட்டாப் பன்றானுங்க. பொடிப் பசங்க" என்றார் ஒருவர்.

"பிடித்தா ஒரு பிடிக்குக் காணமாட்டானுங்க; முருங் கக்கா மாதிரி இருக்கிறானுங்க. பொம்பளைப் பொண்ணு கிட்டே போயி பாட்டுப் பாடுறானுங்க பாட்டு" என்றார் மற் றொருவர். அதற்குள் அடுத்த நிலையம் வந்துவிட்டது. தப்பினோம் பிழைத்தோம் என்று இருவரும் வண்டி நிற் பதற்குள் குதித்து ஓடிவிட்டனர்.

புத்தகத்தை மூடி வைத்துவிட்டு பலகணிக்கு வெளியே ஆகாயத்தைப் பார்த்தபடி செந்தில் உட்கார்ந்திருந்தார். எதையோ பற்றித் தீவிரமாக எண்ணுவது போல் இருந்தது.

'அண்ணா!... அண்ணா!' என்றேன்.

"என்னம்மா! என்ன..." என்று படபடப்போடு கேட்டார்.

"ஒன்றும் இல்லே அண்ணா! நீங்கள் கலகலப்பாக என்னோடு பழகிக்கொண்டு வந்தால் இப்படி ஒன்றும் நேர்ந்திருக்காது அல்லவா?" என்னாலே உங்களுக்கு எவ் வளவு தொல்லை" என்றேன்.

"பயித்தியக்காரப் பொண்ணும்மா நீ. உன்னாலே எனக்கு என்ன தொல்லை. பொறுப்பில்லாத இந்தப் பசங் களாலேதான் எல்லாத் தொல்லையும்" என்று எதையோ தொடர நினைத்துத் தொடராமல் நிறுத்தினார்.

"நீங்கள் முதலிலிருந்தே என்னோடு பேசிக்கொண்டு வந்திருந்தால் இப்படி நிகழ்ந்திருக்காது" என்று முன்பு சொன்னதையே மீண்டும் சொல்லி அவர் என்ன கூறுகிறார் கேட்கலாம் என்று நிறுத்தினேன்.

"ஆண் தன் மனத்துக்கு நல்லவஞ இருந்தா மட்டும் போதும். ஊர் அவனை எப்படிக் குறை கூறினுலும் அவ்வளவு கேடு இல்லை. பெண்கள் நிலை அப்படி அல்ல அம்மா. பெண் ஒருத்தி தன் மனத்தளவில் நல்லவளா இருந்தா மட்டும் போதாது. நல்லவள் என்று நாலு பேர் சொல்லும் படியும் பெண்கள் நடந்துகொள்ளனும். நான் கலகலப்பாகப் பேசினுல் உனக்கு அந்தத் தொல்லை வந்திருக்காது என்பது என்னவோ உண்மைதான். ஆனுல் உன்னையும் என்னையும் நல்ல எண்ணத்தோடு அண்ணன் தங்கையாக யார் நினைப் பார்கள். உடன் பிறந்த அண்ணன் தங்கையையே தவருகப் பார்க்கும் கண்கள் இப்போதைய கண்கள். இந்தக் கயவர்கள் எப்படி நினைத்துக்கொண்டால் நமக்கு என்ன என்று நாம் பழகினுலும் அதிலும் உனக்கு, பெண் இனத் துக்குத் துன்பம் உண்டு. இந்தக் கயவன் எவனுவது ஒருவனே அல்லது அவன் நண்பனே நாளைக்கு எதிர்பாராமல் உன்னையே பெண் பார்க்க உறவினைகை வரக்கூடும். அப் போது நம் பழக்கத்தை அவன் எப்படி எடுத்துக்கொள் வான்?" என்று வாழ்க்கையை நிறைய அறிந்த பழுத்த கிழம்போல அறிவுரை கூறினர்.

நான் சிரித்தபடியே கேட்டுக்கொண்டேன். இப்படி அச்சமும் அன்பும் கொண்ட நல்ல மனிதரும் ஒழுக்கமுடைய நானும்கூட விதிக்கு விலக்கு அல்ல என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை. இப்படிப் பேசிக்கொண்டே ஊருக்கு வந்து சேர்ந்தோம்.

எங்கள் ஊரில் ரயிலைவிட்டு இறங்கியவுடன் 'என்ன ஆகுமோ' என்று மனம் திகைத்தது. 'அன்பற்ற அம்மாவின் முன்னர் செந்தில் அண்ணுவோடு போய் எப்படி நிற்பது? அயலவரான ஆடவர் ஒருவரோடு திரும்பி வந்ததைப்பற்றி அம்மா என்ன நினைப்பாரோ? தப்பாக நினைத்துக் கண்ட படி திட்டினுல் என்ன செய்வது? என்னைப்பற்றிக் கவலை

இல்லை. அவர் மனம் நோகுமே' என்று இப்படி என்ன என்னவோ எண்ணியபடி தயங்கி நின்றேன்.

"தங்கச்சி! ஏன் என்னவோபோல் நிற்கிறே. எந்தத் தெருவுக்குப் போகனும். இதோ வண்டி பிடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று நிலையத்துக்கு வெளியே போனார்.

இவ்வளவு அன்பு மிக்க ஒருவரை, களங்கம் அற்ற ஒருவரை "இனி நீங்கள் ஊருக்குப் போகலாம். எங்கள் வீட்டுக்கு வரவேண்டாம். நானே போய்க்கொள்கிறேன்" என்று எப்படிக் கூறுவது? என எண்ணிக் கலங்கினேன். 'அன்போடு உபசரித்த அந்த அம்மா தன் பிள்ளைக்கு ஒரு கிண்ணம் குளிர்ந்த தண்ணீர்கூடக் கொடாது திருப்பி அனுப்பிவிட்டேன் என அறிந்தால் எப்படி வருந்துவார்கள்" என்று நினைந்து மயங்கினேன். 'ஆவது ஆகட்டும், அம்மாவிடம் எல்லாவற்றையும் பொறுமையாக விளக்கிச் சொன்னால் சரியாகிவிடும்' என்று நானே எனக்குச் சமாதானம் சொன்னேன்.

அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பது வீட்டுக்குப்போன உடனேயே தெரிந்துவிட்டது. "இனிமேல் நீங்கள் போகலாம். எங்கள் அம்மா ஒரு மாதிரி" என்று துணிந்து கூருமல், செந்தில் அண்ணு மனம் வருந்துமே என்று தயங்கியது எவ்வளவு கேடாக ஆயிற்று என்பது இப்போது எனக்குத் தெரிகிறது. தெரிந்து என்ன பயன்?

# 7

செந்தில் ஒரு அழகான குதிரை வண்டி பிடித்துக் கொண்டு வந்தார். அது தலையை இப்படியும் அப்படியும் அசைத்தபோது 'ஜல் ஜல்' என்று சலங்கை சத்தம் கேட்டது. லகானைப் பிடித்தபடியே வண்டிக்காரன் 'ஏறுங்கோ ஐயா, ஏறுங்கோ அம்மா இதுதான் முதல் சவாரி; வேறு சவாரிக்குப் போகனும்" என்று என்னையும் செந்திலையும் கணவன் மனைவியாய் நினைத்துக்கொண்டு ஒரு மாதிரியாய்ப் பார்த்தபடியே துரிதப் படுத்தினன்.

" தங்கச்சி நீ மட்டும் ஏறிக்கோ ; நான் வண்டி கூடவே நடந்து வந்துடறேன் " என்று வண்டிக்காரன் பார்வையை எண்ணியவாறு செந்தில் தயங்கினர்.

'என்ன தம்பி நீ—இது ஜாதிக் குதிரை; ரேசு குதிரை மாதிரி வேகமாப் போகும் ; ஓடி வந்தாகூடப் பிடிக்க முடியாது. நேரம் ஆகுது ; சீக்கிரம் ஏறிக்கோ" என்று அவசரப்படுத்தினன். செந்தில் வண்டிக்காரன் பக்கத்தில் முன்னே ஏறிக்கொண்டார். நான் பின்னலே ஏறி உட்கார்ந்துகொண்டு போக வேண்டிய இடத்தை வண்டிக்காரனுக்குச் சொன்னேன். கண்மூடிக் கண்திறப்பதற்குள் வண்டி வீட்டு வாசலில் வந்து 'ஜல் ஜல்' என்ற சத்தத்தோடு நின்றது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எங்கள் வீட்டில்

வண்டி நின்றதைத் தங்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே பார்த்துக்கொண்டு நின்றனர்.

நான் 'டக்கென்று'. குதித்தாற்போல் இறங்கி வீட்டினுள் போனேன். வீடு 'கம்' என்று அமைதியாக இருந்தது. அப்பா வெளியே போயிருந்தார். அண்ணனைக் காணவில்லை. தங்கை எங்காவது வாயாடப் போய்விட்டிருக்க வேண்டும். அவளும் வீட்டில் இல்லை. பேச்சு மூச்சு இல்லை திரும்பிப் பார்த்தேன். செந்தில் தயக்கத்தோடு வாயிற்படியிலேயே இன்னும் நின்று கொண்டிருந்தார். "வாம்மா வா" என்று வாயார கண்ணம்மாவின் அம்மா அழைத்ததை நினைத்துக்கொண்டேன். 'வாருங்கள் அண்ணு உள்ளே வாருங்கள்' என்று அழைத்தவாறே "அம்மா! அம்மா!" என்று குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே நுழைந்தேன். நல்ல பாம்பை மிதித்துவிட்டதுபோல் என்னைக் கண்டதும் அம்மா பதறியடித்துக்கொண்டு ஓடி வந்தாள்.

"அடி பாவி, குடும்பத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே. நான் இந்த ஊரிலே எப்படிடி தலை தூக்கி நடப்பேன். அந்தப் பயலை வேறு கூட்டிக்கிட்டு வந்துட்டியா? ஏண்டி! என்ன திமிருடி உனக்கு. நெஞ்சழுத்தக்காரி. ஓங் காலை ஒடிச்சுடுறேன் பாரு; மொட்டை அடிச்சி மூலையிலே உக்கார வச்சுடல்லேன்னு நான் பொம்பளை இல்லே" என்று இரைந்தபடியே அடுப்புப் பற்றவைக்கக் கையில்எடுத்திருந்த விறகுக் கட்டையோடே என் முன்னல் ஓடி வந்தார்கள். இதைப் பார்த்து 'எங்கே, அம்மா என் மண்டையைப் பிளந்து விடுவார்களோ' என்று செந்தில் பயந்தபடியே ஓடிவந்து,

"பொறுங்க அம்மா, கொஞ்சம் பொறுமையோடு கேளுங்க." என்று சொல்லித் தடுக்க வந்தார்.

"அட பாவிப் பயலே! என்ன தைரியண்டா உனக்கு வீடு வரைக்கும் வந்துட்டியே! கயவாலிப் பயலே" என்று

திட்டிய படியே என்னை அடிக்க வந்த விறகுக் கட்டையாலே செந்தில் கையில் ஒரு போடு போட்டார்கள். அது தவறி அவர் காலில் விழுந்தது.

"ஐயோ அம்மா!..." என்று நொண்டிக்கொண்டே தெருப்பக்கம் போனுர். "அண்ணு!" என்று கதறியபடி நானும் தொடர்ந்து ஓடினேன். வீட்டில் நடக்கும் இந்தக் கலாட்டாவைக் கண்டு வண்டி சத்தம் வாங்கிக்கொண்டு போகாமல் நின்றுகொண்டிருந்த வண்டிக்காரன் அவரை ஏற்றிக்கொண்டு வேகமாய்ப் போய்விட்டான்.

'அம்மாவுக்கு என்ன? ஏதாவது பித்துப் பிடித்துவிட்டதா?' என்று எண்ணிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தேன். அம்மா ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருந்தார்.

"ஏம்மா இப்படி அழறே! என்ன நடந்துவிட்டது? எவ்வளவு துன்பப்பட்டு வந்திருக்கிறேன். அதைக் கேட்காமே..." என்று அழுதுகொண்டே சொன்னேன்.

"ஏண்டி வந்தே? ஏன்? எங்காவது ஓடிப் போறது தானே! எப்படியாவது ஒழிந்து தொலையறதுதானே; மேளதாளத்தோடு வரவேற்பாங்கான்னு வந்தே? ஓடுகாலி ஆசிரமத்திலே என்னு பாடுபட்டுப் பொயிட்டார்களாம். நேத்துதான் ஆளு வந்துச்சுடி பாவி; ஆளு வந்துச்சு. எவண்டி அவன். இப்போ வந்தானே அவனு? அடிக்கடி உன்னை வந்து பார்ப்பானே? எவ்வளவு நாளா தொடர்புடி? அடி கேடுகெட்டவளே—நாங்க இல்லே, எவ்வளவு நாளு அடக்க ஒடுக்கமா; ஆம்புளேயோட பேசாம; ரெண்டு பேரும் சேர்ந்து ஜாம் ஜாம்னு குதிரை வண்டியிலா வந்திங்க! ஆசிரமத்துலே சொல்லிக்காமே கொல்லிக்காமே அவனேடு ஜாலியா பொறப்பட்டுட்டியாடி பாவி. ரெண்டு நாளா ஊர் சுத்தினவ அப்படியே எங்காவது போயிடுறதுதானே. செத்துப்போயிட்டேன்னு தலையை முழுகிப்புடுவேனே—ஏண்டி இங்கே வேறு வந்துட்டே..." என்று பாதி அழுகையும்

பாதி ஒப்பாரியாகவும் ஒருவாறு படபட என்று பேசி முடித் தார்கள்.

அம்மா உண்மையை உணரும் நிலையில் இல்லை. வற் புறுத்திச் சொன்னாலும் கேட்கும் மனநிலையிலும் இல்லை. எதையும் நிரூபித்துவிடலாம். பெண் தன் கற்பை நிரூபிப் பது எப்படி? அதிலும் பிறர் நம்பாவிட்டால், பெற்ற தாயே நம்பாவிட்டால் நிரூபிப்பது எப்படி?

நிர்வாகி பெரிய சூழ்ச்சிக்காரன் என்பதைப் புரிந்து கொண்டேன். திட்டமிட்டுத் தப்பித்துக் கொண்டுவிட்டான் என்பது தெளிவாகியது. அன்பற்ற அம்மா ஆசிரமத்தி லிருந்து வந்த எவனையோ முழுதும் நம்பத்தயாராயிருந்தார்; அவர் கையிலேயே வளர்ந்த என்னை நம்ப மறுத்துவிட்டார்.

இந்த நிகழ்ச்சியோடு என் பள்ளிப்படிக்கு முற்றுப் புள்ளி வைத்தாய்விட்டது. நான் கண்டுகொண்டிருந்த கற்பனைக் கனவும் தகர்ந்துவிட்டது.

நான் ஆசிரமத்துக்குப் படிக்கப் போனபோது அத்தான் ஆசிரியர் பயிற்சிக்குப் போயிருந்ததாக அத்தை சொன்ன தைக் கேட்டு என்ன என்னவோ திட்டம் போட்டேன். எப்படியாவது பத்தாவது வரை படித்துவிட்டு ஆசிரியை ஆகி அம்மா தடுத்தாலும் தைரியமாக அத்தானைத் திருமணம் செய்துகொண்டு வாழவேண்டும். அத்தானும் நானும் சேர்ந்து பள்ளிக்கூடம் போய்வரவேண்டும் என்றெல்லாம் நான் கண்ட கனவுகள் தகர்ந்து போய்விட்டன.

"இப்படி ஒரு விபசாரப் பட்டத்தை அம்மாவே கட்டிய பிறகு அத்தான் நம்மைக் கட்டிக் கொள்வாரா? அந்தப் பழைய அன்பு—அம்மாவுக்குத் தெரியாமல் எனக்கு முருக்கு வடை எல்லாம் வேலி ஓரமாகக் கொண்டுவந்து கொடுத்து விட்டு அத்தை கொடுத்ததாகச் சொல்லித் தின்னச் சொல் லும் அந்தப் பழைய அன்பு—இன்னும் நிலைத்து நிற்குமா?" என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினேன்.

அதன் பிறகு வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் என்னை ஒரு விதமாகப் பார்க்கத் துவங்கினர். அம்மா ஏதோ வேண்டா வெறுப்போடு என்னோடு பேசி வந்தார்; மாடு போல என்னை நடத்தி வந்தார். பொழுது விடிந்ததிலிருந்து முதல் ஆட்டம் சினிமா முடியும் வரை தொடர்ந்து வேலை வாங்கினர். அந்த வேலையை வாய், திறவாது செய்து வந்தேன். அப்படி வேலை செய்ய நான் ஒன்றும் வருந்தவில்லை. ஆனால் அடிக்கடி "இப்படி வேலை வாங்கினால்தான் ஆளைத் தேடித் திரியிற திமிர் அடங்கும்" என்று நோவ நோவக் கேவலமாகப் பேசுவதைத்தான் கேட்டுக்கொள்ள முடியவில்லை. "அத்தையைப் பார்த்து ஏதாவது பேசினாலாவது கொஞ்சம் கவலை குறையும்" என்று எண்ணினேன். ஆனால் நான் வீட்டை விட்டு வெளியே போக முடியாதபடி ஒருவர் மாற்றி ஒருவர் எனக்குக் காவல் இருந்தனர்.

ஒரு நாள் அம்மா சந்தைக்குப் போய்விட்டார். அண்ணன் மாட்னிக்குப் போய்விட்டான். அப்பா நல்ல காலமாக ஊரில் இல்லை. "எங்காவது போனே அம்மாவிடம் சொல்லி விடுவேன்" என்று காவலாக இருந்த தங்கை என்னை மிரட்டி விட்டுத் தன் பள்ளித் தோழி ஒருத்தியோடு எங்கோ வெளியே போய்விட்டாள். தெருக் கதவைச் சாத்தி உள் தாழ்ப்பாள் போட்டுவிட்டுக் கொல்லைப்புறம் வழியாக அவசர அவசரமாக அத்தை வீட்டுக்குப்போனேன்.

"ஏண்டி அம்மா ஆசிரமத்திலேயிருந்து திடீர்னு வந்துட்டே. இந்தப் பக்கம் வரவே காணுமே. அத்தை தான் இப்பொ கிழப் பொணம் ஆயிட்டா. அவகிட்ட பணமா இருக்கு." என்று உரிமை அன்போடு அத்தை அங்கலாய்த்துக் கொண்டார்.

தேம்பித் தேம்பி அழுதுகொண்டே ஆசிரமத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து வீட்டில் நிகழ்ந்தது வரை ஒன்று விடாமல் அத்தையிடம் சொன்னேன். கண் கலங்கியபடியே

என்னைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு "உன் தலையிலெ என்னென்ன எல்லாம் எழுதியிருக்கோ அதை எல்லாம் அனுபவித்துத்தான் ஆகுனுண்டி" என்று நா தழு தழுக்க ஆறுதலாகப் பேசி அனுப்பி வைத்தார்.

ஏதோ ஒரு பாரம் இறங்கியதுபோல இருந்தது. "என்னை நல்லவள் என்று, உண்மையை நம்புகிறவர்களும் இருக்கிறுர்கள்" என்று நினைத்தபோது கொஞ்சம் கவலை குறைந்தது; ஓரளவு மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அந்த மகிழ்ச்சி அற்ப நேரத்துக்குத்தான் நீடித்தது. அத்தையிடமிருந்து வீடு வரும் வரைதான் நீடித்தது. அத்தை வீட்டில் என்னை மறந்து நீண்ட நேரம் கழித்து விட்டேன் போலிருக்கிறது. சந்தையிலிருந்து அம்மா வந்து விட்டிருந்தார்கள். தாழ்ப்பாள் போட்டுவிட்டுப் போன தெருக்கதவும் திறந்திருந்தது. "என்ன ஆகுமோ எப்படி ஆகுமோ" என்று பயந்துகொண்டே மெல்லபோய்க்கொல்லை யில் நின்றேன். அம்மா ஒன்றும் பேசாது என்னைப் பார்த்த உடன் விடு விடு என்று அடுப்பங்கரைக்குள் போனுர். அம்மா என்ன என்றும் இல்லாமல் இன்று இவ்வளவு சாந்த மாக இருக்கிறுர்" என்று எண்ணியபடியே உள்ளே நுழைந்தேன்.

தேள் கொட்டியது போலக் கெண்டைக் காலில் ஏதோ ஒன்று 'சுரீர்' என்றது. "ஐயோ அம்மா!" என்று குதித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தேன். அம்மா பழுக்கக் காய்ந்த சூட்டுக் கோலோடு பத்ரகாளிபோல் நின்றுகொண்டு, "ஓடு காலி! எங்கே போனே? மாப்பிள்ளை வீட்டுக்கா? கட்டையிலே போற உனக்குக் கல்யாணம் வேறயா?" நாங்கள் எல்லாம் இருக்க நீயே நிச்சயதார்த்தம் செய்யப் போயிட்டியா? இனிமே வாசற்படியைத் தாண்டு காலை முடமாக்கிடுறேன்" என்று கருவிக்கொண்டே போய்விட் டார். "ஆண்டவனே! எப்போதுடா எனக்கு விடுதலை

கிடைக்கும்" என்று ஏங்கி அழுதபடியே ஒன்றும் சாப்பிடாமல் படுத்துக்கொண்டேன்.

கொஞ்ச நாள் ஆகி விடுதலை கிடைத்தது. அதுவாகக் கிடைக்கவில்லை. நானே துணிந்துகொண்டேன். "அத்தைக்கு வாந்தி எடுத்துப் பேதிஆகிறது" என்று வீட்டில் குசுகுசுன்னு பேசிக்கொண்டனர். சாயுங்காலம் ஐந்தாறு மணி இருக்கும். எதிர்வீட்டுப் பாட்டி, அம்மாவைப் பார்த்து, கண் சொருகிக் கிட்டுது; கைகால் ஜில்லிட்டுப் போய்ச்சு; பையனுக்கு ஆள் போய் வந்துட்டான். ஏண்டி! இனிமே பார்க்கவா போகிறோம்? அப்படி என்னடி பகை. போய்த்தான் பார்த்துட்டு வாயேன்"

'என் வம்சம் ஒன்னும் கேடு கெட்டது இல்லே. எங்களுக்கு ஒரு நாக்குத்தான். சொன்னா சொன்னதுதான். செத்தாகூட அவ வீட்டு வாசற்படியிலெ அடி எடுத்து வைக்கிறது இல்லைன்னு என்னைக்குச் சொல்லிட்டு வெளிவந்தேனே அவ்வளவுதான். அவ செத்தா என்ன, இருந்தா எனக்கு என்ன?" என்று அம்மா போகாமல் இருந்து விட்டார்.

என் மனம் கேட்கவில்லை. கிடுகிடு என்று வேலைகளை எல்லாம் செய்து முடித்தேன். பத்து மணிக்கு எல்லா வேலையும் முடிந்துவிட்டது. எல்லோரும் பாய் விரித்துப் படுத்துத் தூங்கிவிட்டனர். நானும் படுப்பதுபோல் கொல்லை நடையில் பாய் விரித்துப் படுத்தேன். சிறிது நேரத்தில் பூனை ஒன்று அடுப்பங்கரைக்குப் போய் எதையோ உருட்டியது. யாரும் எழவில்லை. எல்லோரும் உறங்கிவிட்டனர். மெல்ல எழுந்தேன். 'வருவது வரட்டும். எது வந்தாலும் சரி' என்று அத்தை வீட்டுக்கு ஓடினேன்.

அத்தைக்கு மூச்சு திணறிக்கொண்டிருந்தது. அத்தான் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு எதையோ அத்தை வாயில் பஞ்சு மூலம் சொட்டு சொட்டாகப் பிழிந்து விட்டுக்

கொண்டிருந்தார். வேறு ஒருத்தர்கூட இல்லை. வீடு இருண்டு கிடந்தது. ஒரே ஒரு மண்ணெண்ணெய் விளக்கு அத்தையின் தலை மாட்டில் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது.

"அத்தே அத்தே" என்று அழுதுகொண்டே அருகில் உட்கார்ந்தேன். மருண்டு மருண்டு விழித்தார். மெல்லத் திரும்பித் திரும்பி என்னையும் அத்தானையும் இரண்டு மூன்று முறை பார்த்துவிட்டு ஏதோ எனக்காகக் காத்திருந் ததைப் போலக் கண்ணை மூடிக்கொண்டார்.

அப்புறம் கண் திறக்கவே இல்லை. அத்தான் கதறிக் கதறி அழுதார். நானும் ஏதேதோ சொல்லி அழுதுவிட்டுப் புறப்பட்டேன். "நீயும் போறியா" என்று என்னைத் தழுவிக்கொண்டு குழந்தைபோல் அழ ஆரம்பித்துவிட்டார். எப்படித்தான் அப்படி ஒரு தைரியம் வந்ததோ. "இல்லை, நான் போகவில்லை அத்தான்! இனிப் போகவும் மாட் டேன். அத்தை விருப்பப்படி உங்களை மணந்துகொண்டு இங்கேயே இருந்துவிடப்போகிறேன்" என்று சொல்லி விட்டு, வீட்டு மருமகள்போல் வேலைகளைச் செய்ய ஆரம்பித் தேன். அத்தையை நன்ருகத் தலைக்கு உயரமான தலையணை கொடுத்துச் சார்த்தி வைத்தோம். சிதறிக்கிடந்த சாமான் சட்டிகளை எல்லாம் எடுத்து ஒதுப்புறமாக வைத்தேன். இரவு முழுவதும் இருவரும் அத்தையின் உடம்பைக் காத்துக் கொண்டிருந்தோம். பொழுது விடிந்தது. "என் வாழ்வும் விடிந்தது; இனி இருள் சூழாது" என்று எண்ணி னேன். காலைக்குப் பிறகு மாலையும் விடிவிற்குப் பிறகு இருளும் வருவதுகூட இயற்கைதான் என்ற எண்ணம் ஏனோ என் நினைவுக்கு அப்போது வராது போயிற்று.

# 8

அதற்குப் பிறகு நான் வீட்டுக்குப் போகவே இல்லை. அம்மா அப்படி இப்படி மிரட்டிப் பார்த்தார். என்மேல் இருந்த அன்பு அல்ல அதற்குக் காரணம், வீட்டு வேலை பாதி; அத்தைமேல் இருந்த வெறுப்பு பாதி, என்னை வீட்டுக்கு அழைத்துக்கொள்ள என்னென்னவோ செய்து பார்த்தார் நான் அசைந்துகொடுக்கவில்லை.

இந்த முறை அத்தை வீட்டுக்குப் போனதிலிருந்து என்னவோ அம்மாவைப் பற்றிய பயமே எனக்கு இல்லாது போய்விட்டது. பற்றுகிறவரைதான் பயம் தடுமாற்றம் எல்லாம் போலும். ஆசிரம வழிபாட்டுப் பாடலில் "நாம் யார்க்கும் குடி அல்லோம்" என்ற பாட்டு ஒன்று பாடுவோம். அதில் வரும் கடை அடியாகிய,

**" கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்**
**கொய் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே "**

என்ற அடிக்குப் பொருள் இப்போதுதான் எனக்கு நன்றாக விளங்கியது. உண்மையாக ஒருவனை—உண்மையான ஒருவனைக் கைப்பிடித்துவிட்டால் அப்புறம் எப்படித்தான் எதையும் எதிர்க்கும் தைரியம் பெண்களுக்கு வந்து விடுகிறதோ? விந்தையாக இருக்கிறது.

எங்கள் தோட்டத்தில்கூட அப்படித்தான் ஒரு அவரைக் கொடி இருந்தது. கொஞ்சகாலம் தட்டுத் தடுமாறிக்

கொண்டிருந்தது. அப்புறம் அருகிலிருந்த முருங்கை மரத்தைத் தாவித் தழுவிக்கொண்டது. ஐந்தாறு நாட்களுக்குள்ளே பின்னிப் பிணைந்துகொண்டது. சில நாட்களுக்குள் பற்றிப் படர்ந்து வளரத் தொடங்கிவிட்டது. கொடியைச் சும்மா இழுத்துப் பார்த்தோம். மரமே முறிந்துவிடும்போல் ஆகிவிட்டது. அப்படி இறுக்கமாகக் கிளைகளைத் தழுவிக் கிடந்தது. அம்மா ஒருநாள், "காயும் தரலே; ஒன்னும் தரலே; எதுக்கு இந்தக் கொடி" என்று ஏதோ கோபத்தில் மண்வெட்டியை எடுத்து அதனை வேரோடு வெட்டிவிட்டார். மறுநாள் காலையில் அது வாடி வதங்கிப்போயிருந்தது. அப்போதும் அது மரத்தைத் தழுவியபடியே வாடி இருந்தது. பிறகு வற்றிக் காய்ந்துபோய்விட்டது. அப்போதும் தழுவியபடியே காய்ந்துபோயிருந்தது. பிறகு அந்த மரத்து அடியிலேயே உதிர்ந்து மண்ணோடு மண்ணாய் மக்கி எருவாகி மரமோடு மரமாய்ப் போய்விட்டது. உம், கடைசிவரை பற்றிக்கொண்டிருப்பது கொடிக்கு இயற்கை. காற்றால் புயலால் மரம் விழுந்தால் தானும் உடனே மடிகிறது. அப்படி அல்லாமல் சாக நேர்ந்தால் தான் முன்னே சாகிறது. மரம் அப்படியா இருக்கு. கொடி சாவதற்காக எந்த மரமும் செத்துப்போவது இல்லையே. அதற்கு என்ன! ஒரு கொடி மாய்ந்தால் இன்னொரு கொடி!

நல்ல நாள் ஒன்று பார்த்து, ஊரார் சிலர் முன்னிலையில் கோயிலில் திருமணம் செய்துகொண்டோம். ஊரில் எல்லோருக்கும்தான் சொல்லியிருந்தோம். ஆனால் அம்மாவின் வாய்க்குப் பயந்துகொண்டு ஊராரில் பலர் வரவில்லை. தூரத்தில் நின்றாவது மணக்கோலத்தில் என்னைப் பார்க்க அம்மாவாவது வருவார் என்று கோயிலின் மூலை முடுக்கு எல்லாம் கண்களை ஓட்டித் துழாவிப் பார்த்தேன். அம்மாவும் வரவில்லை; அண்ணன் தங்கை யாரும் வரவில்லை. பள்ளிக்கூடத்துக் குழந்தைகள் எல்லோரும் வந்திருந்தார்கள். அவர்கள் இதை ஒரு கொண்டாட்டம்போல் கொண்

டாடினார்கள். சில சிறுவர்கள் மாவிலைத் தோரணம் கட்டினார்கள். சிலர் வண்ணத்தாளில் கொடிகள் செய்து மூலைக்கு மூலை பிணைத்தனர். பெண்கள் சிலர் மாக்கோலம் போட்டு அழகு செய்தனர். ஆசிரியர் சிலர் சமையலைக் கவனித்துக் கொண்டனர். கோயில் ஓதுவார் மூர்த்தி, "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற பாட்டுப் பாடி எங்களை வாழ்த்தினார். எல்லோரும், "இது மாதிரி திருமணம் இந்த ஊரில் இதுவரை நடந்ததே இல்லை" என்று பேசிக்கொண்டனர். ஊரெல்லாம் இப்படிப் பெருமையாகப் பேசி மகிழ்ந்தாலும் "அம்மா வந்து நம்மை இந்த நல்ல நாளில் ஆசீர்வதிக்கவில்லையே" என்ற துயரம் எனக்கு மட்டும் இருந்தது. மனக் கவலையோடு நிலவைப் பார்த்தபடியே கொல்லை வாயிற்படியில் உட்கார்ந்திருந்தேன்.

"அட! என்ன அவ்வளவு கவலை? கப்பல் கவிழ்ந்துட்டுதா என்ன? ஒரு பயலைப் பெத்துக் குடு. அப்புறம் அத்தை தானு நம்ப வீட்டைத் தேடி வந்துவிடுவாங்க" என்று எனக்கு ஆறுதலாகச் சொல்லியபடியே என் அருகில் வந்து உட்கார்ந்து, மெல்ல என்னைத் தன் மார்பில் அணைத்தபடியே தழுவிக்கொண்டார். அப்படித் தழுவிக்கொண்டவர் கெண்டைக் காலில் இருந்த தழும்பை நிலவில் பார்த்துவிட்டு, "செங்கமலம்! என்ன இது? இத்தனை பெரிய தழும்பு!" என்று படபடப்போடு கேட்டார். அம்மாவின் கொடுமையை அந்த நேரத்தில் சொல்ல மனம் இல்லாமல் "ஆசிரமத்தில் சமையல் வேலை செய்தபோது நெருப்புச் சுட்டுவிட்டது" என்று பொய் சொன்னேன். அந்தச் சின்ன பொய்கூட என் வாழ்வைப் பாழாக்க வல்லது என்ற உண்மை அப்போது எனக்குத் தெரியாமல் போய்விட்டது. "ஐயோ! பாவம்! துடிதுடித்துப் போயிருப்பையே! என்று அன்போடு சொல்லிய படியே அந்தத் தழும்பை மெல்லத் தடவிக்கொடுத்தார். அது எத்தனையோ ஆண்டுகளாகப் புண்பட்டுக்கிடந்த என் நெஞ்சத்தையே ஆற்றுவதுபோல இருந்தது.

ஆனால் இந்த இன்பம் நீடிக்கவில்லை. எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்துவிட்டது. நன்றாக இருந்த எங்கள் அம்மாவுக்கு ஏதோ ஒருவித மயக்கம் வந்துவிட்டது. இதுவரை வீட்டு வேலைகளை நானே செய்து வந்தேன். அம்மா ஒரு வேலையும் செய்வது இல்லை. தங்கையின் படிப்புக் கெட்டுப் போய்விடும் என்று அவளையும் வேலை செய்ய விடுவது இல்லை. அதுதான் சாக்கு என்று அவள் ஒத்தாசை உதவிக்குக்கூட வரமாட்டாள். வேலை நிறைந்த முக்கியமான நாளில் எல்லாம் மாதத் தேர்வு, வகுப்புத் தேர்வு, ஆண்டுத் தேர்வு என்று ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லித் தப்பித்துக் கொள்வாள். மூன்று நான்கு மணி நேரம் அலங்காரம் செய்து கொள்வது மட்டும் படிப்புக்குத் தடையாக இருக்காதோ? அதைப் பற்றிக் கேட்பதற்கு யாரும் இல்லை.

அம்மாவும் தங்கையை அவள் போக்கிலேயே செல்லம் கொடுத்து வளர்த்து விட்டாள். வளையாது வளர்ந்துவிட்ட உடம்பு. பிறரை ஏவியே சோம்பிப் பழகிய மனம். இப்போது அம்மாவுக்குத் துணை செய்ய மறுத்துவிட்டது. அதுதான் காரணமாக இருக்கும். அடிக்கடி மயக்கம் போட்டு விடுகிறார்கள் என்றும் கண்ட கண்டபடி எல்லாம் பிதற்றுகிறார்கள் என்றும் தெரிந்துகொண்டேன். "பைத்தியம் பிடித்துவிட்டது" என்றும் சிலர் இரகசியமாகப் பேசிக் கொண்டனர்.

என் மனம் தவியாய்த் தவித்தது. அம்மாவை எப்படியாவது என்னிடம் அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆசை வர வர அதிகமாயிற்று. 'சாகக் கிடந்த அத்தையைப் பார்க்கக்கூட வரமறுத்த அம்மாவை அழைத்து வர அத்தான் அனுமதிப்பாரா?' என்று இப்படி ஆசை ஒரு பக்கம் அச்சம் ஒரு பக்கம் என்னை அலைக்கழித்தன. இரு தலைக் கொள்ளி எறும்பு போல ஒவ்வொரு நாளையும் கவலை

யோடு கழித்து வந்தேன். அவர் அறிந்தும் அறியாதவர் போல் நடந்துகொண்டார்.

அம்மா நிலை வர வர மோசமாகிக் கொண்டு வந்தது. கேட்கவே மிகப் பரிதாபமாக இருந்தது. அண்ணனும் எங்கேயோ ஓடிப் போய் விட்டானும். தங்கையோ வீட்டில் உள்ள சாமான்களை ஒன்றன்பின் ஒன்ருக விற்றுச் சிற்றுண்டிகளுக்கும் அலங்காரப் பொருள்களுக்கும் செலவழித்துக் கொண்டிருந்தாள். ஏதோ பொழுது போக்குவதற்குப் போவதுபோல் பள்ளிக்கூடம் போய்வந்தாள். பள்ளியில் ஒழுங்காகப் படித்ததாகத் தெரியவில்லை. ஊரைச் சுற்றி வருவதற்குப் பதில் பள்ளிக்கூடத்தைச் சுற்றி வந்தாள். இவற்றை எல்லாம் நினைத்து வருத்தப்பட யாரும் இல்லை; சீர்திருத்த ஒருவரும் விரும்பவில்லை. தாழ்ந்து போனல் ஏளனம் செய்யவும், உயர்ந்துபோனல் பொருமைப்படவும் தான் ஊர்க்காரர் தெரிந்து வைத்திருந்தனர்.

ஒரு நாள் மாலை நேரம். பொழுது சாய்ந்துவிட்டது. பள்ளிக்கூடம் விட்டுப் பிள்ளைகளும் போய்விட்டனர். அவர் மட்டும் வரவில்லை. வாசற்படியில் நின்று அவர் வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். "டேய் பைத்தியம் டோய் பைத்தியம்" என்று பிள்ளைகள் சத்தமிட்டுக் கொண்டு ஓடி வந்தனர். அஞ்சிப் பயந்தபடியே வாசற்படியை விட்டு இறங்கி எட்டிப் பார்த்தேன். அம்மா தான் கல்லடிக்குப் பயந்து பைத்தியம் போல் வந்து கொண்டிருந்தார். எங்காவது ஒண்டிக் கொள்ளலாம் என்று ஒவ்வொரு வீட்டுப் பக்கமும் ஓடினர். எல்லோரும் படபட என்று கதவைச் சாத்திக் கொண்டனர். எதிர்பாராமல் என் வீட்டு வாசற்படியிலேயே வந்து அம்மா விழுந்துவிட்டார்.

ஆளே அடையாளம் தெரியாதபடி மாறியிருந்தார். அப்போது முகத்தில் இருந்த கோபம் கொடுமை எல்லாம் இப்போது இல்லை. கன்னம் ஒட்டிக் கண்கள் உள்ளுக்குப்

போயிருந்தன. அழகாகச் சீவிக் கொண்டை போட்டுக் கொண்டு பளபளப்பாக இருக்கும் தலை மயிர் புழுதி படிந்து செம்பட்டை பாய்ந்து சடை சடையாகத் தொங்கியது. கல்லடி பட்டு நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. புடவை அங்கும் இங்கும் கண்டபடி கிழிந்து போயிருந்தது. வாய் வழியாகச் சிறிது நுரை தள்ளிக் கொண்டு 'கொர் கொர்' என்று மூச்சு விட்டபடியே மயங்கிக் கிடந்ததைப் பார்த்து, "அம்மா அம்மா" என்று அழைத்தேன். எழவும் இல்லை. கண் விழித்து என்னைப் பார்க்கவும் இல்லை. சரி உள்ளே இழுத்துப் போடலாம் என்று தலையைப் பிடித்துத் தூக்கினேன். என்னால் தூக்க முடியவில்லை. இப்படி நான் திணறிக் கொண்டிருக்கும்போது அவரும் வந்துவிட்டார். உலகத்து வெறுப்பு எல்லாம் திரண்டு வந்து அவர் முகத்தில் சேர்ந்ததுபோல் கேவலமாக என்னை ஒரு பார்வை பார்த்தார். இப்போது அதை நினைத்துப் பார்த்தாலும் பயமாக இருக்கிறது. "சீ சனியன்கள். எல்லாம் என் தலைவிதி" என்று தலையில் அடித்துக் கொண்டே உள்ளே போய்விட்டார். திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டேன். என்ன நினைத்துக் கொண்டாரோ? சிறிது நேரம் ஆன பிறகு அவரே வந்தார். என் துணையோடு அம்மாவைக் கொல்லைப்புற அறைக்குத் தூக்கிச் சென்றார். சில நாள் இரவும் பகலும் ஓயாமல் என்னென்னவோ கத்திக்கொண்டிருந்தார். ஒரு நாள் காலையில் அந்த அறையிலிருந்து சப்தம் ஒன்றும் வரவில்லை. எட்டிப் பார்த்தேன். கத்த வேண்டியதெல்லாம் கத்தித் தீர்ந்து விட்டதுபோல் அம்மா கவலையற்றுக் கிடந்தார்; செத்துப் போய்விட்டார்.

சாவுச் செய்தி கேட்டு எங்கிருந்தோ அண்ணன் வந்து சேர்ந்தான். கருமாதி வரை எல்லோரும் எங்கள் வீட்டிலேயே இருக்கட்டும் என்று ஊரார் கூறினர். ஊர்ப் பேச்சை புறக்கணித்து எப்படி வாழ்வது? அவரும்

வேண்டா வெறுப்போடு ஒப்புக்கொண்டார். "சனியன்கள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்துகொண்டன. உன்னைக் கட்டிக் கொண்டதால் வந்த வினை!" என்று நாள்தோறும் சொல்லிச் சொல்லி என்னைச் சொல்லால் கொன்று வந்தார்.

அவர் சொல்லியதும் ஒரு வகையில் சரி என்றுதான் எனக்குப் பட்டது. அண்ணன் எனக்கு ஒன்றும் சீர் செய்ய வேண்டாம். அவனிடமிருந்து எதையும் நான் எதிர்பார்க்க வும் இல்லை. கண்ணியமாக ஏதாவது ஒரு தொழில் செய்து கொண்டு காதுக்குக் கேட்க நன்ருக இருந்தால் போதும் என்றுதான் நினைத்தேன். ஆனால் அவனைப் பதினறு நாள் என் வீட்டில் வைத்துச் சோறு போடுவதற்குப் பதில் பதினறு மதங்கொண்ட யானைகளை வைத்தே காப்பாற்றி விடலாம் என்று தோன்றியது. "அங்கே பார்த்தான்!" "அவளோடு வழியில் வம்பு வளர்த்தான்" "என் வீட்டுப் பெண்ணைப் பார்த்துப் பல் இளித்தான்." "நேற்று உங்கள் தம்பி, வீட்டுக்கு வேண்டுமென்று நான்கு சோப்புக்களும் ஐந்து பவுடர் டின்களும் வாங்கி வந்தான். அதற்கான பணம் கேட்டு முதலாளி என்னை அனுப்பினர்." "இது உன் வீட்டு வெள்ளி டம்ளர்தான. இதை உன் தம்பி நீ அடகு வைக்கச் சொன்னதாக என் வீட்டுக்கு எடுத்துவந்தான். நான் சந்தேகப் பட்டுக்கொண்டு உன்னையே கேட்கலாம் என்று வந்தேன்" என்று ஒன்றன்பின் ஒன்ருக வழக்குகள் வந்த வண்ணம் இருந்தன. இயன்றவரை அவர் காதுக்குப் போகாமல் பலவற்றை மறைத்துவந்தேன். ஒன்றிரண்டு அவருக்கும் தெரிந்துவிட்டது.

அவர் கேட்பதற்குள் நானே முந்திக்கொண்டு "பதினறே பதினறு நாள்; கொஞ்சம் பொறுத்துக்குங்க. அப்புறம் எக்கேடு கெட்டாலும் கவலை இல்லை. வீட்டை விட்டுப் போகச் சொல்லி விடுகிறேன்" என்று அழுது மன்ருடினேன்.

அவரும் "சரி, போய்த் தொலே; பிசாசுக் கூட்டங்கள் உயிரோடு பிய்த்துத் தின்ன வந்திருக்கின்றன" என்று திட்டிவிட்டுப் பள்ளிக்கூடம் போய்விட்டார்.

அப்போது பார்த்துத்தாஞ ஆண்டுத் தேர்வு வந்து தொலேயவேண்டும்? மிகவும் கண்டிப்பானவர் என்று தேர்வுத் தாள்கள் அச்சடிக்கும் பொறுப்பை அத்தானிடம் பள்ளித் தலேமை ஆசிரியர் கொடுத்திருந்தார். அடிக்கடி அச்சடித்த விஞத்தாள் மாலேயில் அச்சகத்திலிருந்து வீட்டுக்கு வரும். மறுநாட் காலேயிலேயே பள்ளிக்கூடத்திற்கு எடுத்துக் கொண்டு போய்விடுவார். இதை எப்படியோ அண்ணன் மோப்பம் பிடித்துவிட்டான். கையில் நிறைய காசு புரள ஆரம்பித்தது.

"ஏதண்ணே?" என்று கேட்டேன்.

"என் நண்பர்கள் அப்பா இறந்த செய்தி கேட்டு அனுப்பியிருக்கிருர்கள்." என்று கூறி மழுப்பிஞன். நானும் உண்மை என்று நம்பிவிட்டேன். 'அந்த அளவுக்குத் துணே செய்யும் நல்ல நண்பர்களாவது அண்ணனுக்கு இருக்கிருர்களே' என்று எண்ணிப் பூரித்துப் போனேன்.

பூரித்துப் போன என் நெஞ்சில் பழுத்த வேலேப் பாய்ச்சியதைப் போலச் செய்தி ஒன்று பள்ளிக்கூடத்திலிருந்து வந்தது. 'தேர்வுத் தாள்கள் வெளியாகி விட்டதாகச் செய்தி கேட்டுக் கல்வி அதிகாரி ஒருவர் பள்ளிக்கு வந்திருக்கிருர் என்றும் தன் மைத்துனன் மூலம் தேர்வுத் தாள்களே விலேக்கு விற்றுப் பணம் பறித்தவர் என் கணவர் தான் என்று அவர் கண்டு பிடித்துவிட்டதாகவும்' பள்ளிக்கூடத்து ஆயாள் ஒருத்தி ஓடிவந்து எனக்குச் செய்தி சொன்ஞள். இதைக் கேட்டு அங்கே என்னவோ செய்து கொண்டிருந்த அண்ணன் மெல்ல நழுவப் பார்த்தான்.

'அட பாவி!—ஏண்டா இங்கே வந்து என் பாவத்தைக் கொட்டிக்கிட்டே. ஓடுடா ஓடு. நான் செத்தாகூட நீ வர

வேண்டாம். இப்போதே ஓடிப்போ' என்று கண்டபடி திட்டினேன். அவனும் ஆத்திரம் தீர என் முதுகில் நான் கைந்து உதையும் குத்தும் கொடுத்துவிட்டு ஓடிப் போய் விட்டான்.

மாலையில் பொழுது போன பிறகு யார் கண்ணிலும் படாமல் தலை குனிந்தபடியே அத்தான் வீட்டுக்கு வந்தார். முகம் கூம்பிப் போயிருந்தது. உடல் சோர்ந்துபோயிருந் தது. ஏதோ நடைப் பிணம்போல் வந்து கைகால்கூடக் கழுவிக் கொள்ளாமல் நாற்காலியில் சாய்ந்தார். பக்கத்தில் போகவோ, வாய் திறந்து பேசவோ எனக்குப் பயமாக இருந்தது. நல்ல காலமாக என் தங்கை அப்போது அங்கே இருந்தாள். இரட்டைச் சடைபோட்டுத் தலையலங்காரம் செய்துகொண்டு மையுண்ட கண்களால் அத்தானைப் பார்த் துக்கொண்டு ஏதோ வாரப் பத்திரிகை படிப்பதுபோல அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்தாள். இந்தப் பத்துப் பதினைந்து நாட்களில் அவள் ஓரளவு அத்தானை மயக்கி வைத்திருந்தாள் என்றே சொல்லலாம். அதனால் தானே என்னவோ அவள் இருக்கும்போது மட்டும் எங்கள் குடும் பத்தைத் தூற்றிப் பேசுவதை அத்தான் விட்டு வைத்திருந் தார்.

அத்தானைப்பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். அவர் ஒன்றும் சஞ்சல புத்திக்காரர் இல்லை. என்ருலும் தங்கை யின் போக்கு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அதோடு அவள் பள்ளிக்கூடத்தில் அத்தான் அறைக்குத் தேவை இல்லாமல் சென்று அடிக்கடி பேசிக்கொண்டிருப்ப தாகவும், சிற்சில சமயம் சிற்றுண்டிச் சாலையிலிருந்து இனிப் புக்கள் வாங்கி வரச்சொல்லி இருவரும் அங்குத் தின்ப தாகவும் அரைகுறையாக என் காதுக்கும் எட்டியது. 'ஏதோ பசித்திருக்கும். பாவம், வாங்கித் தின்றிருப்பார்கள். இந்த ஊர் பொல்லாதது. சாண் என்ருல் முழம் என்று கதை

கட்டிவிடும்' என்று எனக்குள்ளேயே சமாதானம் செய்து கொண்டேன்.

என்ன சமாதானம் செய்துகொண்டாலும் கண்முன்னே நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சிகள் எனக்கு மன வேதனையைத் தந்தன. அவர் முன்போல் வீட்டில் சரியாக உண்பதில்லை. 'அது குறை இது அதிகம்' என்று ஏதாவது கூறிவிட்டு இலையில் வைத்தது வைத்தபடியே இருக்கக் கையை உதறிக்கொண்டு எழுந்துவிடுவார். கணவன் வயிறார உண்ணும் அளவே அன்போடு சமைத்த மனைவியின் மனமும் நிறையும் போலும். அவர் சரியாக உண்ணாதநாள் எல்லாம் நான் மனம் வருந்தினேன்; உறக்கம் இல்லாது புரண்டேன்.

ஒரு பக்கம் கொண்ட கணவன். மறு பக்கம் உடன் பிறந்த தங்கை, இடையே சாவுக்கு வந்து இன்னும் தங்கள் தங்கள் ஊருக்குப் போகாமல் கருமாதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உறவினர் கூட்டம். இவர்களுக்கு இடையே நான் என்ன செய்வேன். எல்லாம் என் தலைவிதி. 'என்ன என்ன எழுதியிருக்கிறதோ அதை எல்லாம் அனுபவித்துத் தான் ஆகனுண்டின்னு அத்தை சொன்னபடி அனுபவிப் போம்.' என்று கருமாதிவரை பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்திருந்தேன்.

ஒருவாறு கருமாதி முடிந்தது! உறவினர்கள் ஊருக்குப் போகுமுன், 'என் தங்கையையும் தந்தையையும் என்ன செய்வது' என்று கூடிக்கூடிப் பேசினர். கடைசியாக 'அவர்கள் இருவரையும் நாங்கள் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும்' என்று முடி செய்தனர். அத்தானுக்கு அந்த யோசனை பாதி பிடித்திருந்தது.

எனக்கு என்னவோ அந்தத் திட்டம் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. என்றோ வந்து கூடிக் கூத்தடித்துவிட்டுக் கிடந்தது கிடந்தபடியே கிடக்க ஓடிப்போகிற இந்த உறவி

னர்கள் என்றும் வைத்துச் சுமக்க வேண்டிய என்னிடம் ஒருவார்த்தை கூடக் கேட்காமல் தாங்களே முடிவு செய்வதைப் பார்த்து ஆத்திரம் ஆத்திரமாக இருந்தது.

அப்பாவாம் அப்பா. ஒருநாள்கூட என்னை அவர் "மகளே!" என்று கூப்பிட்டு அறியேன். அப்படிப்பட்ட அப்பாவை நான் வீட்டில் வைத்துக்கொண்டு சோறுபோட வேண்டுமாம். எங்கே இருந்து குதித்து வந்தார் இப்போது இந்த அப்பா? என்னைக் கண்டால் அவருக்கு அறவே பிடிக்காது. எப்போதும் 'துக்குறி; துக்குறி' என்று திட்டுவார். அப்பாவோடு அடிக்கடி வந்துகொண்டிருந்த அந்த மலையாளிகள்கூடப் பரவாயில்லை. அன்பு காட்டாது போனாலும் திட்டாமலாவது இருந்து போவார்கள்.

நான் பிறந்தபோது அவர் சிறைக்குப் போனாராம். யார் போகச் சொன்னது. கள்ளநோட்டு அடித்து அவர் சிறைக்குப் போனதற்குப் புணை நான்தானா? அதிலிருந்தே குடும்பம் நொடித்துப் போய்விட்டதாம். எனவே என்னைப் பார்க்கவே மாட்டார். எப்போதாவது அவர் கண்முன் போய்விட்டால் 'சிடு சிடு' என்று விழுவார். தப்பித்தவறி அவர் தாகம் அறிந்து தண்ணீர் கொண்டுபோய்க் கொடுத்தால்... "நீயா? வேறு யாரும் இல்லை? நீ ஏன் கொண்டு வந்தே, போற இடத்திலே பொடிக்குப் புகையிலேகூட அகப்படாதே" என்று திட்டியபடியே வாங்கி என் முகத்தின் மேல் வீசுவது மாதிரி தெருவிலே ஊற்றிவிடுவார். காலையில் எங்காவது புறப்படும்போது தவறிப்போய் அவர்முன் போய்விட்டால், "சரி இன்றைக்கு எல்லாம் உருப்பட்டாற் போலத்தான். இந்தத் துக்குறி முகத்துலே முதல் முதல் முழிக்கிறபடி ஆய்விட்டதே—அப்போ காரியம் எல்லாம் ஆனது மாதிரிதான்' என்று நான் மனம் நோவ என் முன்னேயே முணுமுணுப்பார். அப்போதெல்லாம் எனக்கு அழுகை அழுகையாய் வரும். தோட்டத்து வேப்ப மரத்

தடிக்குப்போய் ஒருகுரல் அழுத பிறகுதான் மனம் நிம்மதி யடையும்.

பெரும்பாலும் அப்பா பகலில் வருவதே இல்லை. இரவில் தான் வருவார். அதுவும் ஒவ்வொரு நாளும் வரமாட்டார். எப்போதாவது வருவார். எப்போது வருவார் எப்போது போவார் என்று யாருக்கும் தெரியாது. இரவில் அம்மா வுடன் ஏதாவது 'கசமுச' என்று பேசிக்கொண்டிருப்பார். என்ன பேசுவார்களோ? எதைப்பற்றிப் பேசுவார்களோ? எனக்கு ஒன்றும் தெரியாது நான் தூங்கிப்போவேன்.

எப்போதாவது அத்தி பூத்தாற்போல் பகலில் வரு வார். பெரும்பாலும் பல நாட்களுக்குப் பிறகு வெகு தூரத்து ஊரிலிருந்து வரும்போதுதான் அப்படி வருவார். அன் றைக்கு எங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு எல்லாம் கொண் டாட்டம்தான். அம்மாவுக்கு, தங்கைக்கு நல்ல நல்ல துணி கள் வாங்கி வந்திருப்பார். அண்ணனுக்கும் தவருது ஏதா வது புதிய சாமான் வாங்கி வந்திருப்பார். எனக்கு மட்டும் ஒன்றும் இராது. மலைப்பழம் கூடை நிறைய வந்திருக்கும். உதிர்ந்து ஒட்டிப்போய் நசுங்கிய பழங்களில் ஒன்றிரண்டு, பார்த்துக் கொண்டிருக்கிறேனே என்ருே என்னவோ எனக்குத் தருவார்கள். அத்தை வீட்டுக்கு ஒன்றும் தர மாட்டார்கள். மலைப்பழம் என்ருல் அத்தைக்கு ஆசை; அத் தானுக்கும்தான். சாமிக்கே இல்லை என்ருல் பூசாரிக்கு என்ன கிடைக்கும்.

'அப்படி இரவில்மட்டும் என்ன வேலையோ அப்பா வுக்கு?' என்று நினைத்துப் பார்ப்பேன். என்ன தொழில் செய்தார் என்று அப்போது எங்கள் யாருக்கும் எதுவும் தெரியாது. அத்தை கூறிய கதையிலிருந்து அப்பா ஏதோ தப்பான தொழில் செய்துவந்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

அப்பா ஒருவர் ஒழுங்காக இல்லாததால் குடும்பமே கெட்டுப் போய்விட்டது. ஒருநாள் இரவில் குடித்துவிட்டு வரும்போது எவளோ ஒருத்தியை வீட்டுக்கே இழுத்துக் கொண்டு வந்துவிட்டார். அம்மா "குய்யோ முறையோ" என்று போட்ட கூச்சலில் ஊரே திரண்டுவிட்டது. அவளோ அதற்கு எல்லாம் அஞ்சியவளாகத் தெரியவில்லை. 'எனக்கும் தாலிகட்டித்தான் அழைத்து வந்திருக்கிறார்' என்று கல் போல வீட்டில் உட்கார்ந்துவிட்டாள். அப்புறம் நிறைய 'தண்டப்பணம்' கொடுத்து அவளை வீட்டை விட்டு விரட்டியது போதும் போதும் என்றாகிவிட்டது.

இத்தோடு சூதாடும் பழக்கமும் அப்பாவுக்கு இருந்தது. அசந்தால் போதும். ஏதாவது சாமான் காணமற் போய் விடும். பல சமயம் 'குளத்தங்கரையில் நான்தான் காணமல் போட்டுவிட்டேன்' என்று அம்மா என்னை அடித்திருக் கிறார். ஒரு நாள் வெள்ளிக் கிண்ணம் ஒன்றைப் பையில் எடுத்து வைத்துக்கொண்டு அப்பா போவதை அம்மாவே பார்த்து விட்டார். பையைப் பிடுங்கிக்கொண்டு அம்மா போட்ட சத்தத்தில் மாற்றுவேட்டி சட்டைகூட எடுத்துக் கொள்ளாமல் அப்பா அந்த முறை வெளியூர் போய்விட்டார்.

இப்படித் தன்னிடம் குறைகள் நிறைய இருந்ததாலோ என்னவோ அம்மாவுக்குப் பயந்து பயந்து அப்பா வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் அப்பா கோபக்காரர் போல் தோன் றினாலும் அம்மா முன் பெட்டிப் பாம்பு போல் அடங்கி ஒடுங்கிவிடுவார். இதனால் அப்பாவின் பேச்சை அண்ணனும் மதிப்பது இல்லை; தங்கையும் மதிப்பது இல்லை. கொஞ்ச நாளில் அண்ணனிடமும் அப்பாவின் கெட்ட பழக்கங்கள் ஒவ்வொன்றாக வளர ஆரம்பித்தன.

இது எல்லாம் அம்மா நன்றாக இருந்த காலத்தில் நடந்தது. அப்போது நான் அங்கு அம்மாவோடு இருந்தேன். அத்தை வீட்டுக்கு நான் வந்த பிறகு அம்மா வீட்டுச் செய்தி

ஒன்றும் சரியாகத் தெரியாமல் போய்விட்டது. ஆனால் அப்போது அப்பாவின் நிலை மிகவும் மோசமாகியிருக்க வேண்டும். மலையாளிகள் வராது போகவே பணத்துக்கு வழி இல்லை. அம்மாவுக்கு உடல் கெட்டுப் போனதால் சோற்றுக்கும் வழி இல்லை. அண்ணனும் தங்கையும் மதிக்காததால் மன நிம்மதியும் இல்லை. இந்தத் தொல்லைகளோடு முதுமையும் நோயும் வேறு சேர்ந்துகொண்டன. எல்லாம் கூடி மொத்தத்தில் அப்பாவின் வலது கையையும் காலையும் முடக்கிப் போட்டுவிட்டன. அன்று மிரண்டவர்கள் எல்லாம் இன்று பரிதாபமாகப் பார்த்துவிட்டுப் போகிறார்கள். அன்று பயந்து 'சலாம்' போட்டவர்கள் இன்று கண்டபடி பேசிவிட்டுப் போகிறார்கள். முடக்கு வாதத்தோடு இன்னும் ஏதோ ஒரு கெட்ட நோயும் சேர்ந்துகொண்டதால் இப்போது அப்பாவிடம் நெருங்கித் தண்ணீர் கொடுக்கக்கூட ஆள் இல்லையாம். இந்த நிலையில்' நான் மட்டும் அப்பாவை எப்படி வீட்டில் வைத்துக் கொண்டு சமாளிப்பது.

"அதெல்லாம் ஒன்றும் நடக்காது. இன்றைக்குச் சொல்லிவிட்டுத் துணியை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நீங்கள் எல்லாம் போய்விடுவீர்கள். காலம் எல்லாம் அனுபவிக்கப்போகிறவள் நான்தானே?" என்று உறுதியாக மறுத்துவிட்டேன்.

"உன் பாடு. உங்க அப்பா பாடு. எங்களுக்கு என்னடி அம்மா" என்று இரண்டு வாரம் தின்றுவிட்டுப் போகிற போக்கில் சும்மா போகாமல் வசை புராணமும் பாடிவிட்டு என் சொந்தக்காரர்கள் ஒருவாறு ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்பாவை என் வீட்டில் வைத்துக்கொள்ள மறுத்தாலும் என் மனத்தைவிட்டு அவர் நினைவை அகற்ற முடியவில்லை. நோய் மிகமிகக் குடிப்பதும் அதிகமாவதாகக் கேள்விப்பட்டேன். தங்கையைக் கண்டபடி அடித்து உதைக்க ஆரம்பித்துவிட்டதாகவும் அறிந்தேன். கண்ட கண்ட கயவாளிப் பயல்கள் எல்லாம் திருட்டுச் சாராயம்

ஒரு பாட்டில் இரண்டு பாட்டில் அப்பாவுக்குக் கொடுத்து விட்டுத் தங்கையைச் சுற்றிச் சுற்றி வட்ட மிடுவதாகவும் அதை அவள் ஒரு பெருமையாக நினைத்துக்கொண்டு சினிமா நட்சத்திரம் மாதிரி தன்னை அலங்கரித்துக்கொண்டு திரிவ தாகவும் கேட்டு மனம் நொந்தேன்.

ஒருநாள் அவர் பள்ளிக்கூடம் போயிருந்த சமயம் பார்த்து யாருக்கும் தெரியாமல் எங்கள் வீட்டுக்குப் போனேன். அப்பா குடித்துவிட்டு வேட்டிபோன இடம் தெரியாமல் மயங்கிக்கிடந்தார். அருகில் கிடந்த வேட்டியை எடுத்துப் போர்த்தினேன். கதவைத் திறந்துபோட்டு விட்டுத் தங்கை எங்கேயோ போயிருந்தாள். திறந்து கிடந்த வீட்டுக்குள் நாய் புகுந்து எதையோ தின்றுவிட்டு என்னைக் கண்டதும் பயந்து ஓடியது. வீடு எல்லாம் ஒரே புழுதி. சுவர் மழையில் கரைந்து கூரை சரிந்து வீடு இடிந்து கிடந்தது. 'எவர்சில்வர்' பாத்திரங்களும், வெண்கலப் பாத் திரங்களும் அழகாக நிறைந்திருந்த இடத்தில் சட்டிகளும் பானைகளும் சிதறிக்கிடந்தன. வயிறு எரிந்தது. என்ன கொடுமைக்காரி ஆனாலும் 'அம்மா' என்று ஒருத்தி இல் லாத வீட்டின் அலங்கோலத்தைப் பார்த்ததும் என் வயிறு பற்றி எரிந்தது. மனத்தை அடக்கிக்கொண்டு 'கிடு கிடு' என்று கொல்லைப்புறம் வந்தேன். மூலையில் இருந்த வேப்ப மரத்தை நோக்கி நடந்தேன். வழியில் மண்டியிருந்த முட் செடிகள் காலைக் குத்திக்கிழித்தன. பொருட்படுத்தாமல் வேப்ப மரத்தடியில்போய் உட்கார்ந்து "அம்மா-அம்மா" என்று என் ஆத்திரம் தீரும்வரை அழுதேன். அப்புறம் சுற்றும் முற்றும் பார்த்தேன். அண்ணாந்து வேப்பமரத் தையும் பார்த்தேன். தழைத்துச் செழித்து வளர்ந்திருந்த அதன் கிளைகள் பல இயல்பாக முறிந்து தொங்கின. சில வெட்டப்பட்டு மொட்டையாக இருந்தன. விரக்தியோடு ஒரு பெருமூச்சுவிட்டேன். வந்தபடியே யாருக்கும் தெரி யாமல் மீண்டும் என் வீட்டுக்குத் திரும்பினேன்.

எதை நான் வேண்டாம் என்று அடியோடு வெறுத்து மறுத்தேனே அதை நானே வேண்டி வரவேற்கும்படி ஆகி விட்டது. 'அப்பாவைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் வயதுக்கு வந்த தங்கை கதி என்னவது? ஏதாவது தப்புத் தண்டா நடந்துவிட்டால் நமக்குத்தானே கேவலம். அவள் வாழ்வும் பாழாய்ப் போய்விடுமே. பெண் துணை இல்லாமல் எந்த ஆணும் வயது வந்த பெண்ணை வளர்க்கமுடியாது. அதிலும் அப்பாவால் என்ன ஆகும்? எப்படியாவது, தங் கையை மட்டுமாவது அழைத்து வந்து நம்மோடு பாதுகாப் பாக வைத்துக்கொள்ள வேண்டும்' என்று இரவு எல்லாம் தூக்கம் இல்லாது படுக்கையில் புரண்டேன்.

பொழுது விடிந்ததும் அத்தானுக்கு வேண்டியன எல் லாம் முந்தி முந்தி நின்று செய்தேன். கோபம் வராது பார்த் துக்கொண்டேன். இட்டலி எல்லாம் உண்டு முடிந்த பிறகு, அவர் முன் கண்கலங்கியபடியே நின்றேன். "ஏன்? என்ன, அம்மாவை நினைத்துக் கொண்டாயா" என்று ஆறுதலாகக் கேட்டார்.

"இல்லை...இல்லைங்க. வந்து...தங்கையை நம் வீட் டுக்கே அழைத்து வந்துடலாமுங்க, கண்டவங்க கண்டபடி பேசறாங்க" என்று தழுதழுத்த குரலோடு அழுதுகொண்டே கூறினேன்.

"சரி போ. உன் விருப்பம். உன் தலை எழுத்து" என்று சொல்லிவிட்டுப் பள்ளிக்குப் போய்விட்டார்.

அவர் சொன்னதில் பின் பாதி பலித்தே விட்டது. என் விருப்பப்படி எதுதான் நடந்திருக்கிறது? எல்லாம் என் தலை எழுத்துப்படிதான் நடந்து வந்திருக்கிறது. என் அத்தானை அவள் கைக்குள் போட்டுக்கொண்டதற்காகக்கூட நான் அவ்வளவு வருந்தவில்லை. என் மனம் என்னை வாட்டி வதைக்கும்படியான அபச்சொல் ஒன்றை எனக்கு உண் டாக்கிவிட்டு இப்போது அவள் ஒன்றும் அறியாதவள்போல் என்னவரோடு வாழ்ந்து வருகிறாள். அவளாவது வாழ்ந்து போகட்டும்.

# 10

தங்கையை வீட்டுக்கு அழைத்து வந்ததிலிருந்து எனக்கு மனம் சரியில்லை. அவள் அளவுக்குமீறி அலங்காரம் செய்துகொண்டாள். சில சமயம் அசிங்கமாகக்கூட ஆடை அணிந்துகொண்டாள். இது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. சிறிய பெண்ணாக இருந்தபோது அவள் அப்படி அணிந்துகொண்டது எனக்கொன்றும் குறையாகப் படவில்லை. இப்போதோ ஆண்கள் கண்களுக்கு மறைக்க வேண்டிய உறுப்புக்களை விளக்கிக் காட்டுமாறு கச்சையும் பிறவற்றையும் அணிந்துகொள்வது எனக்கென்னவோ வெறுப்பாக இருந்தது.

ஆட்டுக்கு மானம் காக்க அளவான வால் ஒன்றை ஆண்டவன் படைத்திருக்கிறான்; பூவுக்கும் புல்லிதழ் பூ இதழ் எல்லாம் படைத்திருக்கிறான்; அதற்கு எல்லாம் ஈடாக மனிதனுக்கு அறிவைக் கொடுத்திருக்கிறான். ஆனால் அது இப்படிப் பகட்டுக்கும் பாழுக்கும் பலியாகும் என்று அவன் நினைத்துப் பார்த்திருப்பானோ என்னவோ?

அவள் அப்படி அழகு செய்துகொண்டதைவிட அதற்கு எல்லாம் அவர் ஒத்துப் போனதுதான் எனக்கு வியப்பாக இருந்தது; வேதனையாகவும் இருந்தது. சினிமா என்றால் அவருக்கு அவ்வளவாகப் பிடிக்காது. ஆடிக்கு ஒரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவைதான் அவர் சினிமாவுக்குப் போவார்.

இப்போது தங்கை வந்ததிலிருந்து தவருது வாரம் இரண்டு மூன்று முறை சினிமாவுக்குப் போகிருர்; சில சமயம் இரண்டாவது ஆட்டத்துக்குக் கூடப் போகிருர். எதையாவது நினைத்துக் கொண்டு சில சமயம்என்னையும் ஒப்புக்குக் கூப்பிடுவார்கள். சில சமயம் போவேன். வேலை அதிகமாக இருக்கும்போது போகமாட்டேன். எனக்காக அவர்கள் ஒன்றும் போவதை நிறுத்திவிட மாட்டார்கள்.

இந்தப் பழக்கத்தை வளர விடுவது ஆபத்து என்று என் மனதுக்கு நன்ருக விளங்கியது. தங்கைக்கும் நல்லது அல்ல என்பதையும் உணர்ந்திருந்தேன். எப்படியாவது ஒருத்தனைப் பார்த்துக் கட்டி வைத்துவிட வேண்டும் என்று தீவிரமாக எண்ணினேன்.

எங்கள் ஊரிலேயே முறைப் பையன் ஒருவன் இருந்தான். அவன் அவ்வளவு பெரிய பணக்காரன் அல்ல. நிறைய படித்தவனும் அல்ல; நல்ல அழகனும் அல்ல. ஆனல் பார்ப்பதற்கு அவலட்சணமாகத் தோன்றமாட்டான். ஏதோ எட்டாவது வரை படித்திருந்தான். நல்ல உழைப்பாளி. கொஞ்சம் கழனிக்காடும் சொந்தமாக இருந்தது. நல்ல ஒழுக்கம் உள்ளவன். அவனுடைய அப்பா அம்மா எல்லோரும் நான் அறிந்தவரை நல்லவர்கள் தான்.

எங்கள் குடும்பம் அப்படி ஒன்றும் உயர்ந்தது இல்லை. தங்கை ஓரளவு அழகாக இருந்தாலும் அடக்கம் இல்லாதவள். அம்மா தான் செத்துப் போய்விட்டார். அப்பாவைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர் குணங்களை அறிந்த எவனும் அவருக்கு மருமகளுக வர விரும்பமாட்டான். வீடுதான் குட்டிச் சுவராகிவிட்டது. சொத்தும் இல்லை; வேறு சுகமும் இல்லை. இந்த நிலையில் அந்தப் பையன் கிடைத்தாலே அது முன்னேர்கள் செய்த புண்ணியம் என்று எண்ணிக்கொண்டேன்.

எப்படியாவது அவனுக்குத் தங்கையை முடித்துவிட வேண்டும் என்று அவசரப்பட்டேன். நேரிடையாகப் பெண் வீட்டார் எப்படிப் பிள்ளை வீட்டாரை நாடிப் போவது? அவர்களும் பெண் தேடி வருவதாக இல்லை. எனவே மறை முகமாகப் பட்டும்படாமலும் சிலரிடம் சொல்லி அனுப்பிப் பார்த்தேன். பையன் ஒன்றும் வீடு தேடி வரவில்லை. 'இனி வேறு வழி இல்லை. அந்த முறைப் பையனுக்கு நேரிடையாக வலை வீசித்தான் அவனைப் பிடித்திழுக்கவேண்டும்' என்று எண்ணி அதற்கான முயற்சிகளைச் செய்யலானேன்.

அவன் ஒவ்வொரு நாளும் எங்கள் வீட்டைத் தாண்டித் தான் தோப்புப் பக்கம் போவான். அவன் போகும் போது வாயிற்படியில் ஏதாவது வேலையாக நின்றுகொண் டிருந்தால், "அம்மா நலமா? அப்பா உடம்பு எப்படி இருக்கு?" என்று ஏதாவது அவனை விசாரிப்பது வழக்கம். அவன் நின்று பொறுமையாகப் பதில் சொல்லிவிட்டுப் போவான். இப்போது எல்லாம் அவனை மெல்ல வீட்டுக்கு அழைத்துப் பால், காபி, சிற்றுண்டி ஏதாவது கொடுத்து வரலானேன்.

அத்தானுக்கு அது அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை என்பது அவர் முகம் போன போக்கிலிருந்தே தெரிந்தது. என்றாலும் ஒன்றும் தவறாகப் பேசுவது இல்லை. அவனும் அவருக்குத் தம்பி முறையில் வேண்டிய உறவினன் தான். எனவே அந்தக் குடும்பப் பகையைக் காரணம் இல்லாமல் தேடிக்கொள்ள அவர் விரும்பவில்லை என்று நினைத்துக்கொண்டேன். அவன் வந்து போன பிறகு என் னிடம் கடுகடுப்பாகப் பேசுவார். "பேசிவிட்டுப் போகட்டும். மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம்!" என்று நான் அதனைப் பொருட்படுத்துவது இல்லை. எல் லாம் ஒரு நாள் விவரமாகச் சொன்னால் சரியாகிவிடும் என்று பேதை நான் தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன்.

அன்று இரண்டாம் தேதி. அத்தான் இனிப்பு வாங்கி வந்திருந்தார். என்றும்போல் அவன் அன்றும் வந்திருந்தான். அவனுக்குக் கொஞ்சம் இனிப்பு எடுத்துக்கொடுத்து விட்டு காபி கொண்டுவர அடுப்பங்கரைக்குள் போனேன். தோட்டத்துக்குக் கைகால் கழுவப் போயிருந்த அத்தான் உள்ளே வந்தார். நானும் காபி கொண்டு வந்தேன். அவன் இனிப்புத் தின்பதைக் கோபமாகப் பார்த்தபடியே "டேய்! வேலையற்றவனே; தினம் இங்கே என்னடா வேலை. இது என்ன சிற்றுண்டிச் சாலையா ? இல்லே...இல்லே..."என்று எதையோ சொல்ல வாயெடுத்துச் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார். நான் ஓரிரு வார்த்தைகள் சொல்ல வாய் எடுத்தேன்.

"ஏண்டா பேந்த பேந்த முழிக்கிறே? போடா ஓடிப் போ. இந்த வீட்டில் அடி எடுத்து வைத்தே காலே முறித்து விடுவேன். ஆமா" என்று திட்டி அவனையும் விரட்டி விட்டார்.

அவன் போன பிறகும் கோபம் அடங்காமல் என்னைப் பார்த்து, "ஆடிய நாடகம் எல்லாம் போதுண்டி, போதும். கொஞ்சம் அடங்கியே இருடி, இரு" என்று சீறினர்.

"நான் அடக்கமாகத்தான் இருக்கேன். மிரண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்தான்" என்று அவரிடம் நான் கொண்டிருந்த சந்தேகத்தையும் குறிப்பாகக் கூறிக்கொண்டே பக்கத்தில் கை இல்லாத சட்டை அணிந்திருந்த தங்கையைச் சுட்டு எரித்து விடுவது போல் பார்த்தேன்.

'அடே என்னே ஏனக்கா அப்புடிப் பாக்குறே. நீயே ஏதாவது கதை கட்டி விட்டுடுவே போலிருக்கே" என்று குலுக்கிக் கொண்டு அழ ஆரம்பித்தாள். 'இனி மேல் இங்கே நின்று கொண்டிருந்தால் நமக்குத் தான் கேவலம், கழுதை எக்கேடு கெட்டால் என்ன ? ஒழுங்கா

இருக்கிறவரைக்கும் சோறு போடுவது. ஏதாவது தப்புத் தண்டாவா நடந்துகொண்டால் அடித்து விரட்டி விட்டு விடுவது. இனிமேல் அவளிடம் நமக்குத்தான் என்ன பேச்சு' என்று எனக்குள்ளேயே தீர்மானித்துக் கொண்டேன். அன்றையிலிருந்து அவளுடன் பேசுவதும் இல்லை.

ஒருவாறு தங்கை பண்பு இல்லாமல் சண்டைக்கு வந்ததை மறந்துவிட்டாலும் அத்தான் என்னிடம் நடந்து கொண்ட முறை எனக்கு வேதனை அளித்தது. "ஆடிய நாடகம் எல்லாம் போதுண்டி போதும்" என்று அவர் அவ நம்பிக்கையோடு பேசியது மிக்கத் துன்பமாக இருந்தது.

ஆண்களே அப்படித்தான் போலும். அவர்கள் எந்தப் பெண்களுடனும் பேசலாம்; எதுவும் பேசலாம். யாருடனும் பழகலாம்; எப்படியும் பழகலாம். அது உலகியலாம்; பரந்த மனப்பான்மையாம். ஆண்மையாம். பெண்கள்மட்டும் நேர்மையான காரணத்துக்குக்கூட யாருடனும் பேசக் கூடாது; நெருக்கடியான சமயத்தில்கூட யாருடனும் பழகக் கூடாது. அப்படிப் பேசினால், பழகினால் ஆண்கள் அதற்குப் புதுப் பொருள் கற்பித்துவிடுகின்றனர். எண்ணிக்கூடப் பார்க்காமல் சமுதாயமும் அதை உடனே அப்படியே ஏற்றுக்கொள்கிறது. இன்று மட்டுமா? அன்றும் அப்படித் தான் இருந்தது. எவனோ எதையோ சொன்னான் என்ப தற்காகச் சீதையையே சந்தேகப்பட்டானே அந்தச் சக்கர வர்த்தித் திருமகன். ஆயிரம் பாரதி இந்த மண்ணில் பிறந்து பதினாயிரம் பாட்டுக்கள் பாடினாலும் இந்த நாட்டு இரத்தத் தில் ஊறி இருக்கிற சந்தேகப் புத்தியை, அடிமைப் புத்தியைப் போக்க முடியாதப்பா என்று முடிவு செய்து கொண்டு 'நான் உண்டு என் வேலை உண்டு' என்று சில நாள் ஒதுங்கியே வாழ்ந்து வந்தேன்.

அப்படி ஒதுங்கி என்னால் பலநாள் வாழ முடியாமல் போய்விட்டது. தங்கையிடம் பேசுவது இல்லை என்ற உறுதி

தானே தளர்ந்துவிட்டது. ஒருநாள் ஏதோ ஒரே மயக்க மாக இருந்தது.

"ஏய்! ஒரே குமட்டலா குமட்டுது. மயக்கம் வேறு வருது. மசக்கையோ என்னவோ? இன்றைக்குப் போய் ஒரு குடம் தண்ணி கொண்டு வந்துடு. வீட்டு வேலையை மெல்ல மெல்ல நானே செய்துடறேன்" என்று தங்கையைப் பார்த் துப் பாதி நாணத்துடனும் பாதி ஆயாசத்துடனும் கூறி னேன். அவளும் முணுமுணுத்துக்கொண்டே ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்தாள்.

சாயுங்காலம் அத்தான் வந்தவுடன், "புதிய படம் வந்திருக்கு; விளம்பரம் பார்த்தேன்; அழகழகாக இருக்கு; வாங்க சினிமாவுக்குப் போகலாம்; நீயும் வர்ரியா அக்கா" என்று அத்தானையும் என்னையும் அழைத்தாள்.

'நீயும் வர்ரியா?' என்று அவள் இழுத்தாற் போலப் பேசியதிலிருந்தே 'நீ வரவேண்டாம்' என்று அவள் சொல் வது தெரிந்தது. எனக்கு இன்னும் மயக்கமாகவே இருந் தது. அதனால்,

"நான் வரலே, என்னவோ போல சோர்வா இருக்கு. நாளைக்குப் போகலாம். எனக்குத் துணையாயிருந்து இன்னைக்குமட்டும் சமையல் செய்யேண்டி" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன்.

எதையோ நினைத்துக் கொண்டவளாய், "இன்று கட் டாயம் சினிமாவுக்குப் போவதாக முடிவு கட்டி விட்டேன். நாங்கள் சாப்பிட்டு விட்டு வருகிறோம். உனக்கும் 'நல்ல சாப்பாடு' வாங்கி வருகிறேன்" என்று 'நல்ல சாப்பாடு' என்பதை அழுத்திக்கூறினாள். அதன் பொருள் எனக்கு அப்போது விளங்கவில்லை.

அவர்கள் சினிமாவுக்குப் போய் கொஞ்ச நேரம் ஆகி "அத்தாச்சி அத்தாச்சி" என்று குரல் கேட்டது. 'ஓ!அன்

றைக்கு ஓடிய முறைப்பையன் வந்திருக்கிருன் போலிருக்கு. நல்ல காலம். அவர்கள் சினிமாவுக்குப் போய்விட்டார்கள். சுற்றி வளைக்காமல் நேரிடையாக, விவரமாகப் பேசி இன்றைக்கே எல்லாம் முடித்துவிடவேண்டும், என்ற ஆர்வத்தில் என்னை மறந்து பேச ஆரம்பித்துவிட்டேன்.

என் தங்கையைக் கல்யாணம் செய்து அவனுக்குக் கொடுக்கப் போகிறேன் என்ற விவரம் அறிந்து அவன் மகிழ்ந்தாலும் கொஞ்சம் தயங்கினுன். அவன் தயக்கத்தைப் புரிந்துகொண்டு, "பயப்படாதே. காலம் போகப் போக எல்லாம் சரியாய்ப் போய்விடும். மூக்கணுங் கயிறு குத்திட்டா மாடு தானு வந்து நுகத்தடியில் தலையைக் கொடுக்கும்" என்று பலவாறு பலவற்றைப் பேசி அவனை ஒருவாறு சம்மதிக்க வைத்தேன். பெரிய காரியம் கை கூடிவிட்ட மகிழ்ச்சியில் கேலியாக,

"உம். நீ மாப்பிள்ளை ஆகிவிட்டாய். ஜமாய்த்துடலாம், வா.வா. மரு உண்ண சீக்கிரம் வா." என்று நீட்டி முழக்கி ராகம் இழுத்தவாறு கூறினேன்.

"ஜமாய்க்கலாண்டி ஜமாய்க்கலாம். டேய்! எங்கேடா வந்தே? பொறுக்கிப் பயலே" என்று பக்கத்தில் சாத்தியிருந்த உலக்கையை வேகமாக எடுத்து அவனை அடிக்க ஓங்கினுர். அவனும் விவரம் ஒன்றும் நின்று கேட்காமல் 'முன்னேயே வரக்கூடாது என்று சொல்லி, வந்தது நம் தப்புத்தான்' என்று நினைத்தவனைப் போல தலை தெறிக்க ஓடிப் போனுன்.

"ஏன் அத்தான் உங்களுக்கு அவனைக்கண்டா பிடிக்கலே" என்று ஒன்றும் அறியாதவளாய் இயல்பாகக் கேட்டேன்.

"ஏண்டி! ஏன்னு கேட்குறே. இந்தக் கடுதாசியைப் பாரு. யாரு எழுதுனுன்னுபாரு. விபசாரி. நாங்க ரெண்டு

பேரு இந்த வீட்லே இருக்கிறப்பவே இவ்வளவுக்கு வந்துட்டுதா? சீ நாயே" என்று காரி உமிழ்ந்து கொண்டே என் முகத்தில் ஒரு காகிதத் துண்டை வீசி எறிந்தார்.

'தவறாமல் வாருங்கள். பார்க்க மிகவும் ஆசையாக இருக்கு' என்று அதில் எழுதி இருந்தது. கீழே என் கையெழுத்தும் இருந்தது. நன்றாகப் பார்த்தேன். எல்லாம் நான் எழுதியதுதான். என் கையெழுத்தேதான். எப்போது எழுதியது? யாருக்கு எழுதியது" என்று சட்டென நினைவுக்கு வரவில்லை. எனக்குப் பயித்தியம் பிடித்தது போல ஆகிவிட்டது.

"கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். கண்டபடி எல்லாம் வையாதீர்கள். மயக்கமாக வருகிறது" என்று சொல்வதற்குள் தங்கை இடை மறித்து,

"அத்தான்...அத்தான்! இப்போ அக்காவுக்கு மசக்கை! மசக்கை அத்தான்! இவ்வளவு வருடமா இல்லாமே **இப்போ** மசக்கை அத்தான் மசக்கை" என்று வார்த்தைக்கு ஒரு அத்தான் போட்டுக் கொண்டு நல்ல பாம்பு குழைந்து குழைந்து ஆடுவது போல அவள் பேசி அத்தானை முழுதும் தப்பு எண்ணம் கொள்ளுமாறு செய்துவிட்டாள்!

அத்தான் புத்தியும் பேதலித்து விட்டது. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமே. அடித்து, "போ போ" என்று விரட்டினார். அவர் கால்கள் இரண்டையும் பிடித்துக் கொண்டு கதறினேன். "நீங்கள் இரண்டு பேருமே வாழுங்கள். நான் வேலைக்காரியாகவாவது இந்த வீட்டிலேயே இருந்துபோகிறேன்" என்று மன்றாடினேன்.

"சீ விபசார நாயே!" என்று உதைத்துத் தள்ளி விட்டார். எந்தக் கால்கள் நோகும் என்று இரவில் பிடித்து விடுவேனோ அந்தக் கால்களே என்னை உதைத்து வெளியே தள்ளின. எந்தக் கைகளை வருடி வருடி என் கண்களிலும் கன்னங்களிலும் வைத்துக்கொண்டு இன்புற்றேனோ அதே

கைகள் என்னைப் பிடித்து வெளியே தள்ளின. எந்த நாக்கு சுவைக்க சுவைக்க நான் சமைத்துப் போட்டேனே அந்த நாக்கே 'சீ' என்று என்னைத் திட்டி ஒதுக்கியது. எந்த ஒருவருக்கு என் அன்பை எல்லாம் கொடுத்து விட்டேனே அந்த ஒருவர் என்னை அறவே வெறுத்துவிட்டார்.

வாயிற்படியில், வயிற்றில் கருவோடு நின்றேன். வானத்தில் தெளிவாக நிலவு காய்ந்துகொண்டிருந்தது. அக்கம் பக்கத்து வீடெல்லாம் சாத்தி இருந்தது. என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. அன்போடு போக அம்மா வீடும் இல்லை. அண்டி ஒதுங்க அண்ணன் வீடும் இல்லை. துணிந்து தங்க ஒரு தோழி வீடும் இல்லை.

சும்மா விரட்டி இருந்தாலும் எனக்கு அமைதி கொடுத்த வேப்ப மரத்து அடியிலாவது வீழ்ந்து கிடந்திருப்பேன். "விபசாரி" என்ற பட்டத்தோடு கணவனால் விரட்டப்பட்டு, தங்கையால் துரோகம் செய்யப்பட்டுத் தாயை இழந்த நான் இன்னதுசெய்வது என்ற முடிவுக்குச் சிறிது நேரத்தில் வந்தேன். எல்லோரும் என் நிலையில் செய்கின்ற முடிவு தான் அது.

ஊருக்கு அப்பால் ஓரிரு மைல் தூரத்தில் ஒரு பாழ்ங் கிணறு இருந்தது. அதை நோக்கிப் புறப்பட்டேன். கண்ணீர் குபுகுபு என்று பொங்கி வழிய என்னென்னவோ இளமை நினைவுகள் எல்லாம் வந்து போயின.

அத்தை நினைவு வந்தது. அன்பாக அவர்கள் அணைத்துக்கொண்டு எனக்கு முத்தம் தருவது வந்தது. அத்தான் நினைவு வந்தது. நான் படித்த காலத்தில் என்னோடு பள்ளியில் படித்த அந்த நல்ல அத்தான் நினைவு வந்தது. பாட்டு வகுப்பில் பள்ளிக்கூடத்தில் ஓங்கி வளர்ந்திருந்த தூங்கு மூஞ்சி மரத்து அடியில் நான் படித்துக்கொண்டிருக்கும் போது ஏதோ விழுந்த பந்தை எடுக்க வந்ததுபோல மரத்துக்கு அருகே நின்று என்னைத் திருட்டுத் தனமாகப்

*பார்த்து மகிழும் அந்த அத்தான் நினைவு, எவனே என் வகுப்பு மாணவன் என்னைப் பற்றி என்னவோ சொல்லி விட்டான் என்பதற்காக அவனேடு சண்டை போட்டு அதற் காகத் தலைமை ஆசிரியரிடம் பிரம்படிபட்ட அந்த அத்தான் நினைவு, அத்தை தனக்குத் தருகின்ற வடை முறுக்கை எல்லாம் தான் தின்னமல் எனக்காகப் பத்திரப்படுத்தி வைத்திருந்து நான் தனியாக இருக்கும்போது யாருக்கும் தெரியாமல் என் புத்தகப் பையினுள் வைத்துவிட்டு ஓடும் அந்த அத்தானின் நினைவு வந்தது. அதற்குள் பாழ்ங் கிணறும் வந்துவிட்டது.*

*என்னதான் உயிருக்கு இந்த உடலின்மேல் ஆசையோ! வேகமாக வந்த கால்கள் திடீரென்று கிணற்றினுள் குதிக் காமல் சிறிது தயங்கி நின்றன. மெல்லக் கிணற்றினுள் எட்டிப் பார்த்தேன். வெருட்டென்று இரண்டு சிட்டுக்கள் பறந்தோடின. உள்ளே, “கிஞ்சு கிஞ்சு...” என்று சிட்டுக் குஞ்சுகளின் சத்தம் கேட்டது. வயிற்றைத் தடவிக்கொண் டேன். வயிற்றுள் வளரும் கரு நினைவுக்கு வந்தது. வாழ்வில் பற்று வந்தது. ஏனே சாக மனம் வரவில்லை. “இப்போது செத்தால் நம் விபசாரப் பட்டம் நிலையாகி விடும். என்ருவது ஒருநாள் உண்மை தெரியாமலா போய் விடும். அப்போது அவரே வருந்தி வந்து என்னை அழைத் தாலும் அழைப்பார்” என்று நம்பிப் பேதை நெஞ்சம் இன்னும் வாழ விரும்பியது.*

# 11

வாழ விரும்பினாலும் ஊருக்குள் திரும்பிப் போக மனம் வரவில்லை. அவர் வெறுப்புக்கு ஆளான பிறகு அந்த ஊரும் எனக்கு வெறுப்பாகத் தோன்றியது. கிணற்றில் இருந்தபடியே ஊருக்கு எதிர் திசையில் கால்போன போக்கில் நடக்க ஆரம்பித்தேன். உயிர் வாழும் ஆசை வந்தவுடன் இருள் பயமாக இருந்தது. பால் போல் நிலவு எரித்தாலும் தனிமை பயத்தை அதிகப்படுத்தியது. அக்கம் பக்கம் பாராமல் ஒற்றையடிப் பாதை ஒன்றைப் பார்த்த படியே அது போன போக்கில் நடந்துகொண்டே இருந்தேன். பொழுது புலர்கின்ற நேரத்தில் அது ஒரு பெரிய பண்ணைக்காரர் வீட்டில் போய்முடிந்தது. அதற்கு மேல் என்னால் நடக்கமுடியவில்லை. கால்களோடு கால்கள் பின்னிக் கொண்டன. தலை சுற்றியது. மயக்கத்தோடு அந்த வீட்டு வாசற்படியில் நீண்டு கிடந்த வராந்தாவில் விழுந்து விட்டேன்.

எவ்வளவு நேரம் அப்படிக்கிடந்தேனோ. முகத்தில் "சில்"லென்று தண்ணீர் படுவதை உணர்ந்து கண் விழித்தேன். பளபள என்று விடிந்திருந்தது. என்னைச் சுற்றிப் பல பெண்கள் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் பேசியது ஏதோ கிணற்றுக்குள் பேசுவதுபோல மெல்லக்கேட்டது. யாரோ ஒரு அம்மா வாயில் காபி ஊற்றினார். மெல்ல எழுந்து உட்கார்ந்தேன்.

அதன் பிறகு அந்தப் பண்ணைக்காரர் வீட்டிலேயே தங்கிவிட்டேன். பாத்திரம் தேய்த்தல், தண்ணீர் எடுத்தல் முதலிய வெளி வேலைகளைச் செய்து வரலானேன். உடுக்கத் துணியும் உண்ணச் சோறும் தந்து அவர்கள் என்னைக் காத்து வந்தார்கள்.

ஒருநாள் கிணற்றில் தண்ணீர் இழுத்துக்கொண்டிருந்தேன். எங்கோ கேட்ட குரல் மாதிரி கேட்டது. தலையை நிமிர்த்திப் பார்த்தேன். தங்கைக்கு மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்த அந்த முறைப் பையன் அங்கு ஒரு மாட்டுத் தரகரோடு பேசிக்கொண்டு கிணற்றருகே வந்தான். வந்தவன் என்னைப் பார்த்ததும்,

" ஆ! நீயா? நீ இங்கா இருக்கிறாய்? பாவம்!" என்று கூறிக் கண் கலங்கினான்.

" நான் அன்றைக்கு அங்கு வந்திருக்க மாட்டேன். நான் வரக்கூடாது என்றுதான் இருந்துவிட்டேன். அன்று உன் தங்கை குளத்தங்கரையில் குளிக்க வந்த என்னைப் பார்த்து நீ என்னைச் சாயுங்காலம் ஏழு மணிக்கு வரச் சொன்னதாகச் சொன்னாள். அதனால்தான் வந்தேன். ஒரு குற்றமும் அறியாத உனக்கு இந்த கதி வந்தது ... உம். அவர்களும் நிம்மதியா இல்லே; புதுசா மளிகைக் கடை வைத்திருக்கிற சாயபு ஒருத்தனிடம் உன் தங்கச்சி தொடர்பு வைத்திருப்பதாக ஊர்லெ பேசிக்கிறாங்க" என்று சொல்லி வருத்தத்தோடு உடனிருந்த தரகரை அழைத்துக் கொண்டு போய்விட்டான்.

என் மனம் அன்றைய நிகழ்ச்சிகளை மீண்டும் நினைத்துப் பார்த்தது. 'அப்பொ இயல்பாக அவன் அன்றைக்குச் சாயுங்காலம் வரவில்லே. தங்கச்சி சொல்லி வந்திருக்கிறான். நான் சொல்லாமல் தங்கச்சி ஏன் அப்படிச் சொன்னாள்? அவனை வரச் சொல்லிட்டு இவள் ஏன் அத்தானை அழைத்துக்கொண்டு சினிமாவுக்குப் போனாள். சினிமாவுக்குப் போனவள் சொல்லி வைத்ததுபோல நான் அவனோடு

பேசிக்கொண்டிருந்தபோது எப்படி அத்தானை அழைத்துக் கொண்டு சினிமா பார்க்காமல் வந்தாள்? ஏன் வந்தாள்?" இப்படி ஒன்றன்பின் ஒன்றாக அலை அலையாகக் கேள்விகள் எழுந்தன. தங்கை ஏதோ திட்டமிட்டு என்னை அழித்து விட்டு அத்தானையும் ஏய்த்துவிட்டாள் என்ற உண்மை தெளிவாக விளங்கியது.

அப்படியானால் அந்தக் கடிதம்? 'தவறாமல் வாருங்கள். பார்க்க மிகவும் ஆசையாக இருக்கு' என்று நான் எழுதிய கடிதம்? அதுவும் விளங்கிவிட்டது. அந்த நிகழ்ச்சிக்குச் சில நாட்களுக்கு முன் என் பழைய கட்டுரை நோட்டு ஒன்றைத் தங்கச்சி படித்துத் தன் நோட்டில் எழுதிக் கொண்டிருந்தாள். "ஏண்டி! சொந்தமாக அல்லவா கட்டுரை எழுதவேண்டும். காப்பி அடிக்கலாமா?" என்றுகூட கடிந்துகொண்டேன். அதில் நான் அம்மாவுக்கு எழுதியது போல் எழுதிய கடிதம் ஒன்றினுடைய கடைசி வரிதான் அது.

எல்லாம் தெரிந்துவிட்டது. நேரே போய் அத்தா னிடம் சொல்லிவிடலாம் என்று எண்ணினேன். எண்ணிப் புறப்பட்டும் விட்டேன். ஆனால் என்னவோ போகவிடா மல் தடுத்தது. 'சரி அவளாவது வாழ்ந்து போகட்டும். நமக்கு இந்த வாழ்வே போதும். அவராக வரட்டும்...அப் போதுதான் உண்மை விளங்கும்' என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டேன்.

பண்ணைக்கார அம்மாவைச் சும்மா சொல்லக்கூடாது. அவர்களே தாய்போல் பிரசவத்தைக் கவனித்தார்கள். ஆண் குழந்தை பிறந்தது. அவரைப்போலவே மூக்கும் முழியு மாய் இருந்தான். இவனைப் பார்த்துக்கொண்டே இனிக் காலத்தைக் கடத்திவிடலாம் என்று நம்பினேன். என் நம்பிக்கையும் வெற்றி பெறும்போல் தோன்றியது.

குழந்தை படுசுட்டியாக வளர்ந்தான். எதைச் சொன் னாலும் திருப்பிச்சொல்லுவான். எதைச் செய்தாலும் தானும் செய்ய வருவான்.

ஒருநாள் நாங்கள் படுத்திருந்த குடிசை ஒழுகியது. சின்னக் குடிசை அது. தரை ஈரமாகிவிட்டது. பக்கத்தில் படுத்துக் கிடந்த அவனைத்தூக்கி மார்பில் போட்டுக்கொண் டேன். தூங்காமல் எழுந்து உட்கார்ந்துகொண்டு, " அம்மா! அம்மா! ஐயா வீட்டு அறையைக் கூட்டினையே அங்கே பெரிய பெரிய மெத்தை இருந்துதே. அதைப்போல உனக்கு வேணுமா? நான் பெரியவன் ஆகி வாங்கித் தர்றேன் " என்று தன் மழலைச் சொற்களால் சொல்லியபடியே என் மேல் படுத்துத் தூங்கிப்போய்விட்டான். அவனைக் கட்டித் தழுவிக்கொண்டே என்னென்னவோ கற்பனையில் நானும் தூங்கிப்போனேன்.

இன்னொருநாள் ஏதோ தவறு செய்துவிட்டேன். பண்ணைக்கார அம்மா இரைந்து திரட்டினார்கள். அப்போது அவன் என் பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். அன்று சாயுங்காலம் நான் தனியாக இருக்கும்போது, " அம்மா, ஏம்மா உன்னை அவுங்க திட்டுறாங்க. நீ ஏன் சும்மா இருக்கே? நீ வேலையை விட்டுடு. நான் சோச்சி போடுறேன் " என்று என்னென்னவோ சொன்னான். அவனை வாரி எடுத்து உச்சி மோந்தேன். கண்கள் பொல பொலன்னு நீர் உதிர்த்தன.

" ஏம்மா அழறே ஏன் அழறே "ன்னு அவனும் அழ ஆரம்பித்தான்.

" அழலேடா கண்ணு. அழலே, சிரிக்கிறேன். ரொம்ப சிரிச்சுட்டேன். அதான் கண்ணுலெ தண்ணி வந்துடுச்சி " என்று சொல்லி அவன் கண்ணீரைத் துடைத்துச் சமாதானம் செய்தேன்.

அவனுக்கு வயது ஐந்து இருக்கும். பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைக்கவேண்டும் என்று ஆசைப்பட் டேன். பண்ணைக்கார அம்மாவிடம் கூறினேன். அந்த அம்மா பண்ணைக்காரரிடம் சொன்னார். அவரும், "சரி. ஊர்ப் பிள்ளைகளோடு போய் வரட்டும். அரிச்சுவடிதானே!

நமக்கு என்ன செலவாகி விடப்போகிறது?" என்று சேர்க்கை மனு ஒன்று வாங்கி வரச் சொன்னார்.

மனு வந்தது. "பையனின் பெயர்?" என்று வினவிய படியே என்னைப் பார்த்தார். நான் விழித்தேன்.

"இதுவரை 'கண்ணு கண்ணு' என்றே கூப்பிட்டு விட்டேன். என்ன பெயர் வைக்கலாம்? நீங்களே நல்ல பெயர் ஒன்று வைத்துவிடுங்கள்" என்றேன்.

"அப்படியா? அதுவும் சரி. என்னைக் கை தூக்கிவிட்ட காரைக்குடி செட்டியார் ஒருவர். நல்லவர், தனவான். குண வான். 'தேனப்பன்' என்று பெயர். அவர் பெயரையே வைத்துவிடுவோம். சரிதானே?" என்றார். நானும் தலையை அசைத்து ஒப்புக்கொண்டே "தேனப்பா!" என்றேன். அவன் சுற்றும் முற்றும் வியப்பாகப் பார்த்தான். "தேனப்பா! என் கண்ணு தேனப்பா!" என்று மீண்டும் அவனை அழைத் தேன். "அம்மா!" என்று ஓடி வந்து என் கால்களைக் கட்டிக் கொண்டான்.

"குழந்தையின் அப்பா பேர்?" என்று கேட்டார்.

நான் அத்தான் பெயரை எழுதிக் காட்டினேன்.

அன்றையிலிருந்து அவன் தவறாமல் பள்ளிக்கூடம் போய் வந்தான். அழாமல், ஏதோ படிப்பின் முக்கியத்தைத் தெரிந்துகொண்டவன் போலத் தானே புறப்பட்டுப் போய் விடுவான். ஐந்து மணிக்குப் பள்ளி விட்டுவிடும். ஐந்தரை மணிக்கு எல்லாம் வீட்டுக்கு வந்துவிடுவான். பழைய சோறு கட்டிக்கொண்டு போவான். துண்டு ஒன்றை வரிந்து கட்டிக் கொண்டு பலகையைத் தொங்குகின்ற வலக் கையில் பிடித்துக்கொண்டு, தலையை இப்படியும் அப்படியும் ஆட்டிக் கொண்டு "தையா தக்கா" என்று அவன் போகும் பின் அழகைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போவேன். சில சமயம் வீட்டு வேலையைக்கூட மறந்து அந்தக் காட்சி யில் லயித்து விடுவேன். பண்ணைக்கார அம்மாவின் அதட் டல் கேட்ட பிறகே உணர்வு பெற்று வேலையில் ஈடுபடு

வேன். என்றாலும் என் மனம் அவனோடு அசைந்து அசைந்து, தாவித்தாவி, துள்ளித் துள்ளிக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நடந்துகொண்டே இருக்கும்.

சாயுங்காலம் ஐந்து மணி அடித்துவிட்டது என்றால் எனக்குச் சரியாக வேலை ஓடாது. கொல்லைப் புறத்தில் இருந்த குப்பை மேட்டுக்குப் போய்விடுவேன். அங்கு நின்று பார்த்தால் அவன் பள்ளிக்கூடம் சிறிய கோழிக் கூடு போல் தெரியும். பள்ளி விட்டுப் பிள்ளைகள் வருவது எறும் புகள் சாரை சாரையாக வருவதுபோல இருக்கும். நெருங்க நெருங்க ஆட்டுக் குட்டிகள் துள்ளிக் குதிப்பதுபோல வரப் பிலும் வாய்க்காலிலும் தாவிக் குதித்துக் கொண்டு பிள்ளை கள் வருவார்கள். இன்னும் அருகில் வந்தவுடன் அவன் என்னைப் பார்த்தபடியே சிலேட்டை இரண்டு கைகளிலும் தூக்கிப் பிடித்தவாறு, "அம்மா!" என்று வாயார அழைத் துக் கொண்டே குறுக்குப் பாதை வழியே ஓடி வருவான். 'ஐயோ! பிள்ளை தடுமாறி விழுந்துவிடப் போகிறான்' என்ற படபடப்பில் நானும் குப்பை மேட்டை விட்டு முன்னே ஓடிச் சென்று அவனைத் தாவித் தூக்கித் தழுவி மகிழ்வேன்.

இரவில் வேலை எல்லாம் முடித்துக்கொண்டு வருவதற் குள் தூங்கிப் போய் விடுவான். ஏதாவது ஒரு நாள் தூக்கம் வராவிட்டால் எனக்காக விழித்துக்கொண்டே இருப்பான். அன்றைக்குப் பள்ளிக்கூடத்தைப் பற்றியும் தன் வகுப்பைப் பற்றியும் தன் வகுப்புப் பிள்ளைகளைப் பற்றி யும் ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பான். சில பிள்ளை கள் இரட்டை மாட்டு வண்டியில் வந்து இறங்குவதைக் கூறுவான். சில குழந்தைகளை அப்பாக்கள் சைகிளில் கொண்டு வந்து விடுவதைச் சொல்வான். அப்போது "அப்பா எங்கே அம்மா" என்ற கேள்வியையும் தவறாது கேட்பான். 'பெரிய பட்டணத்துக்குச் சம்பாதிக்கப் போயிருப்பதாகவும், வந்து விடுவார் என்றும்' சற்றுக் குரலை மாற்றிக் கொண்டு வெறுப்பாகக் கூறுவது போலச்

சொல்லுவேன். உடனே அதனை விட்டு விட்டுப் பள்ளிக் கூடத்துப் பாடத்துக்கு வந்துவிடுவான்.

''துள்ளிக் குதிக்குது கன்னுக்குட்டி'' என்ற பாடலைத் தான் நன்ருகக் கற்றுக் கொண்டதாகக் கூறிப் பெருமைப் படுவான். ''நீ தான் அம்மா வெள்ளைப் பசு. நான் தான் கன்னுக்குட்டி. இல்லேம்மா இல்லே'' என்று ஆர்வத்தோடு கூறி என்னைப் பார்ப்பான்.

''ஆமாண்டா கண்ணு ஆமா. நான் தான் அம்மாப் பசு. நீதான் கன்னுக்குட்டி'' என்று சொல்லிச் சிரிப்பேன். அப்படியே இருவரும் ஏதேதோ பேசிக்கொண்டே தூங்கி விடுவோம்.

ஒரு நாள் வெகுநேரம் ஆகியும் தேனப்பன் வரவில்லை. குட்டிப் போட்ட பூனை மாதிரி குப்பை மேட்டுக்கும் வீட்டுக் குமாய் நடந்துகொண்டிருந்தேன். ஊர்ப் பிள்ளைகளும் ஒருத்தர்கூட வரவில்லை. 'ஏதோ மாய வேடிக்கை பள்ளிக் கூடத்தில் காட்டப் போகிருர்கள்' என்று காலையில் 5 காசு அவன் வாங்கிப்போனது என் நினைவுக்கு வந்தது. வந்துவிடு வான் என்று சிறிது நேரம் தைரியமாக இருந்தேன். ஆனல் பொழுது போகப் போக மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. 'அவன் வருவதற்குள் இருட்டி விட்டால் என்ன செய்வது?' என்று மனம் மருண்டது. கை வேலையை அப் படியே போட்டு விட்டுப் பண்ணைக்கார அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு விடுவிடு என்று பள்ளிக் கூடம் இருக்கும் பக்கத்துக் கிராமத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போனேன்.

அப்போது தான் 'மேஜிக்' முடிந்து பிள்ளைகள் கலைந்து கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ஒருவர் நொண்டி நொண்டி நடந்துகொண்டே ஒவ்வொரு ஊர்ப் பையன்களையும் கணக் காக எண்ணி, பெரிய பையன் ஒருவன் பொறுப்பில் அந்த அந்த ஊருக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். நான் போன

சமயம் எங்கள் ஊர்ப் பையன்களை எல்லாம் அந்த நொண்டி ஆசிரியர் ஒன்று சேர்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கும்ப லில் நின்றுகொண்டிருந்த தேனப்பன் என்னைக் கண்ட தும், "அம்மா அம்மா" என்று கூவியபடியே என்னிடம் ஓடிவந்தான்.

குழந்தை ஓடிவந்த திசையை எல்லோரும் பார்த்தனர். ஆசிரியரும் பார்த்தார். ஆசிரியர் சிறிது நெருங்கி வந்து, "தங்கச்சி நீயா!" என்ருர். அந்தக் குரலிலிருந்தே அவர் செந்தில் அண்ணன் என்பதைப் புரிந்துகொண்டு விட்டேன். "ஏன்நொண்டுகிறீர்கள்?" என்று நான் கேட்பதற்கு முன்,

"என்ன தங்கச்சி இப்படி இளைத்துப் போயிட்டே. தேனப்பன் உன் மகளு? கெட்டிக்காரப் பயல்" என்று பேசிக்கொண்டே வீட்டுக்கு அழைத்துப் போய்விட்டார்.

வாயிற்படியில் அன்றுபோல், நான் ஆசிரமத்தை விட்டு ஓடிக் கண்ணம்மா வீட்டுக்கு வந்த அன்றுபோல் இன்றும் நீறுபூசிய நெற்றியோடு செம்பவளம் அணிந்த கழுத்தோடு நான் தேனப்பனை எதிர்பார்த்து நிற்பதுபோல் செந்தில் அண்ணுவை எதிர்பார்த்துக் கொண்டு அந்த அம்மாள் நின்றுகொண்டிருந்தார்கள்.

"அம்மா!" என்று வாய் நிறைய அழைத்துக்கொண்டு போனேன். "யார்" என்று கேளாமல், "செங்கமலமா!" செங்கமலம்! வாம்மா வா" என்று அன்று போல் வாயார அழைத்து மார்போடு தழுவிக்கொண்டார்கள். என் தோள் களில் சூடாகத் தண்ணீர்த் துளிகள் விழுந்தன. நிமிர்ந்து பார்த்தேன். அம்மா அழுதுகொண்டிருந்தார்கள். "பொல பொல" என்று கண்ணீர் திரண்டு உருண்டு கொண் டிருந்தன.

" கண்ணம்மா! கண்ணம்மா " என்று குரல் கொடுத்த படியே " அண்ணு! எங்கே கண்ணம்மா ?" என்று கேட்ட படியே உள்ளே நுழைந்தேன். " ஐயோ! செங்கமலம் !"

என்று கதறி அழுதபடியே கண்ணம்மா ஓடிவந்து சிறு பிள்ளைபோல் என்னைக் கட்டிக்கொண்டாள். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டதுபோல அழுதுகொண்டோம். எனக்காக என்நிலை அறிந்து அவள் அழுவதாக நான் நினைத்துக்கொண்டேன். அவளுக்காக அவள் நிலை அறிந்து நான் அழுவதாக அவள் நினைத்துக்கொண்டிருக்கவேண்டும். பிறகு பொறுமையாக என் நிலையை அவர்களுக்கு விளக்கினேன்.

அவள் கொண்டிருந்த கோலம் என்னைத் துணுக்குறச் செய்தது. அன்றைய ஆசிரமத்தில் அவளைப் பார்த்த அந்தக் கண்களால் இப்படியும் பார்க்க நேர்ந்ததே என்று வருந்தினேன். "ஏண்டி! என்னடி இது. மூக்கும் முகமும் என்னவோபோல்" என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினேன்.

"ஒன்றும் கேட்காதே தங்கச்சி" என்று அழுது கொண்டே அண்ணன் பதில் சொன்னார்.

"யார் செய்த பாவமோ, நல்ல அழகான பையன்; நிறைய படிப்பு. கைநிறைய சம்பளம், எல்லாம் இருந்துது. எங்களுக்குக் கொடுப்பனை தான் இல்லே. 'வேண்டாம் வேண்டாம்' என்று தலையில் அடித்துக்கொண்டேன். 'அவன் வேலை செய்கிற கம்பெனியிலே கடனாகத் தருகிறார்கள்' என்று மோட்டார் சைகிள் ஒன்று வாங்கி அதில் வேலைக்குப் போய்க்கொண்டிருந்தான். யார் கண்ணைக் கரித்ததோ! நாங்க செய்த பாவம்தானோ? ஒருநாள் போனவன் திரும்பலே. மருத்துவ நிலையத்தில் உயிர்போன உடலையும், காவல் நிலையத்தில் உடைந்துபோன மோட்டார் சைகிளையும் திருப்பிக்கொடுத்தார்கள்" என்று கதறி அழ ஆரம்பித்து விட்டார்.

"நான் பேருக்காகவாவது சுமங்கலியாக இருக்கிறேன். என் துயரத்தைத் தீர்க்க அவர் நினைவாக ஒரு பிள்ளையும் இருக்கிறான். கண்ணம்மா நிலை இப்படியா ஆகனும். என்று எண்ணி முதலில் வருந்தினேன். 'விபசாரி' என்ற பட்டத்

தோடு வாழ்வதைவிட இது எவ்வளவோமேல் என்று என்னை நானே தேற்றிக்கொண்டேன். இந்தத் துயரத்தில் என் மகனை மறந்துவிட்டேன். "அம்மா!" என்று குரல் கொடுத்தபடியே என் முந்தானையைப் பிடித்து இழுத்தான்.

"மாமாடா-அத்தேடா-பாட்டிடா-பாரு" என்று எல்லோரையும் அறிமுகப் படுத்தினேன். அவன் எனக்குப் பின்னே நின்றுகொண்டு "வா அம்மா, நம்ப வீட்டுக்குப் போவலாம்" என்று அழைத்தான். உடனே பண்ணைக் காரர் வீடு நினைவுக்கு வந்தது. அப்படி அப்படியே வீட்டு வேலையைப் போட்டுவிட்டு வந்தது எல்லாம் நினைவுக்கு வந்தன. "அம்மா! இன்னொருநாள் வருகிறேன். இப்பொ உடனே போகனும்" என்று அவசர அவசரமாகப் புறப்பட்டேன்.

"இருட்டி விட்டுதே அம்மா! குழந்தை வேறே இருக்கான். நீ எப்படிப் போவே! பொழுது விடிந்ததும் விடியாததுமாக எழுப்பிவிட்டுடறேன். நீ பொயிடலாம்" என்று அந்த அம்மா எவ்வளவோ சொல்லித் தடுத்துப் பார்த்தார்கள்.

"இல்லேம்மா இல்லே! நான் உடனே போய்விட வேண்டும்" என்று பதிலுக்கு எதிர்பாராமல் கண்ணம்மாவிடம் கண்களாலேயே விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டேன். அண்ணன் அதற்குள் அரிக்கேன் விளக்கு ஏற்றிக்கொண்டு வந்துவிட்டார். அண்ணனும் கண்ணம்மாவும் என்னோடு ஊர் முனைவரை வந்தார்கள். அண்ணன் நொண்டி நொண்டி நடப்பதைப் பார்த்துக் காரணம் கேட்பதுபோல் கண்ணம்மாவைப் பார்த்தேன். அண்ணன் ஒன்றும் கவனியாதவர்போல் ஆகாயத்தைப் பார்த்தார்.

அவள் பெருமூச்சு ஒன்று விட்டாள். "அது உனக்குத் தெரியாதா. உன்னை வீட்டில் கொண்டு வந்துவிட்டுத் திரும்பும்போது புத்தகம் படித்துக்கொண்டே எங்கள் ஊர் நிலையத்தில் ரயிலைவிட்டு இறங்க மறந்துட்டாராம். வண்டி

நகர்ந்ததும் தெரிந்துகொண்டு 'திடீர்' என்று குதித்திருக்கிறார். கால் முறிந்து போய்விட்டது. கால்மட்டும் அல்ல, என்னால் அண்ணாவின் வாழ்க்கையும் முறிந்துபோய்விட்டது. என் கணவர் இறந்ததிலிருந்து தனக்குக் கல்யாணமும் வேண்டாம் என்று இப்படியே காலத்தைக் கழிக்க முடிவு செய்துவிட்டார்" என்று கூறி அண்ணனைப் பார்த்தாள். அண்ணன் ஒன்றும் கேளாதவரைப்போல "உம் உம் நேரமாகிறது, நீ விரும்பினால் நான் துணைக்கு வருகிறேன். இருட்டு. வயல் வரப்பு" என்று கூறி என் பதிலை எதிர் பார்த்தார்.

"வேண்டாம் அண்ணா! வேண்டாம். அந்த அரிக்கேன் விளக்கைக் கொடுங்கள். அது போதும்" என்று அரிக்கேன் விளக்கை ஒரு கையிலும் தேனப்பனை மற்றொரு கையிலும் பிடித்துக்கொண்டு புறப்பட்டேன்.

அம்மா அடித்து ஒடித்ததைத் தானாக முறித்துக் கொண்டதாகப் புனைந்து கூறிய அந்த அருள்நெஞ்சத்தை, தங்கைக்காகத் திருமணமே வேண்டாம் என்று வாழும் அந்தத் தவ நெஞ்சத்தை உடன் பிறவா என் நொண்டி அண்ணனை நினைத்தபடியே பண்ணைக்காரர் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டேன்.

அதன்பின் அண்ணனும் செங்கமலமும் என்னை வேலைக்காரியாய் விட்டுவைக்கவில்லை. ஒருநாள் இரண்டு பேரும் பண்ணைக்காரர் வீட்டுக்கே வந்துவிட்டனர். என்னை இது வரை காப்பாற்றியதற்காக அவர்களுக்குப் பலமுறை நன்றி கூறிவிட்டு, "என்னையும் குழந்தையையும் தங்களோடு அனுப்பிவைக்கும்படி" அவர்களைக் கேட்டுக்கொண்டனர். அவர்கள் ஒன்றும் தடையாக இல்லை. மகிழ்ச்சியாக அனுப்பி வைக்கத் தயாராக இருந்தார்கள்.

நான்தான் மறுத்தேன். "என்னவோ அண்ணா! உங்கள் அன்பும் ஆதரவுமே எனக்குப் போதும். அதுவே

எனக்குப் பாதுகாப்பு ; வழி காட்டி. நான் துக்குறிப் பிடித்தவள். என்னுல் உங்களுக்குத் துன்பமும் துயரமுமே வரும். என் தலே எழுத்தை நான் தனியாகவே அனுபவித்துக் கொள்கிறேன்'' என்று உறுதியாக மறுத்தேன்.

"இப்போது இருக்கிற துன்பத்தை விடவா பெரிய துன்பம் உன்னுல் வந்துவிடப் போகிறது ? அப்படியே வந்தாலும் வந்துவிட்டுப் போகிறது, கண்ணம்மாவைக் காப்பாற்றவில்லேயா. அவள் துன்பத்தைப் பகிர்ந்துகொள்ளவில்லேயா'' என்று நெருஞ்சுருக அண்ணு அழைத்தார்.

"செங்கமலம், ஏன் இப்படித் தயங்குறே? உனக்கு இருப்பது ஒரே பிள்ளே. அவனுக்கு நீ ஒன்றும் சொத்துச் சேர்த்துவைக்கப் போறது இல்லே. அவன் படிக்கிறதுதான் அவன் சொத்து. இங்கே இருக்கிறதைவிட எங்களோடு இருந்தா அவனுக்குப் படிப்பு நல்லா வரும். அண்ணனும் கவனித்துக்கொள்ளும். அதற்காக வராவிட்டாலும் எனக்காக வாடி செங்கமலம். உன்னேடு பேசிக்கொண்டே, உன்னேடு பழகிக்கொண்டே இருந்தால் என் துயரத்தைக் கொஞ்சமாவது நான் மறந்து வாழமுடியும்'' என்று கண் கலங்கக் கேட்டாள்.

என் மனம் நெகிழ்ந்து போய்விட்டது. "சரி செங்கமலம் வருகிறேன். நன்மையோ தீமையோ எல்லோரும் கலந்து அனுபவிப்போம்'' என்று புறப்பட்டுவிட்டேன். அம்மா வாயிற்படியில் நின்றபடியே. "வாம்மா வா ! நீ வந்துவிடுவேன்னு எனக்குத் தெரியும்'' என்று கைகளால் தழுவியபடியே என்னே அழைத்துக்கொண்டு வீட்டின் உள்ளே போனுர்கள்.

# 12

கண்ணம்மா கூறியதும் உண்மைதான். அவளுக்கு மட்டும் அல்ல; எனக்குங்கூட ஆறுதலாகத்தான் இருந்தது. உணர்ந்து பழகும் ஒரு தோழியோடு வாழ்வதில் உள்ள இன்பம் எப்படிப்பட்டது என்று எனக்கு நன்ருக விளங்கியது.

தேனப்பனும் இப்போது மகிழ்ச்சியாகவே இருந்தான். பண்ணையார் வீட்டில் அடிமைபோல் ஒதுங்கி ஒதுங்கி நின்றவன் இங்கு எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகினுன். எதற்கும் முன்னே முன்னே ஓடிவந்து பதில் சொன்னுன். செந்தில் அண்ணு இல்லாதபோது அவன்தான் வீட்டுத் தலைவன் போல அதிகாரம் செய்தான்; அண்ணுவைத் தேடி வந்தவர்க்கு எல்லாம் பதில் சொன்னுன். 'தனக்கு என ஒரு பேரன் பேத்தி இல்லாதபடி தன் மகள் வாழ்வும் மகன் வாழ்வும் இப்படி ஆகிவிட்டதே' என்று எண்ணி ஏங்கிய பெரிய அம்மாவுக்கும் என் மகன் பேரப் பிள்ளையாகி ஆறுதல் தந்தான். பேரப்பிள்ளை போல நிறைய செல்லம் கொடுத்து அவர் வளர்த்ததால் தேனப்பன் காட்டுச் செடி போல் 'தளதள' என்று செழித்து உரிமையோடு வளர்ந்து வரலாஞன்.

பெரிய அம்மா நிறைய செல்லம் கொடுத்தாலும் செந்தில் அண்ணு மிகவும் கண்டிப்பாக இருந்தார். தேனப்பன்

படிப்பிலும் மற்ற நடை உடை பாவனைகளிலும் அவர் தனிக் கவனம் செலுத்தி வளர்த்து வந்தார். அதனுல், அந்த அம்மா தந்த செல்லம் அவன் கரடுமுருடாக வளர்ந்து பாழாகாமல் முறையாக வளரத் துணை செய்தது.

அடிக்கடி 'காந்தி தாத்தா' கதைகளை அவனுக்கு அண்ணு சொல்லுவார். அவனும் கண்களை அகல விரித்தபடி கேட்டுக்கொண்டிருப்பான். கைக் காப்பில் கொஞ்சம் பொன் திருடிய குற்றத்தைத் தன் தந்தையிடம் சொல்லிச் சின்ன மோகனதாசு அழுததைக் கேட்டுத் தேனப்பனும் கண் கலங்குவான். அம்மா புத்தலிபாய் வாக்குப்படி மது, மாது, மாமிசம் இம்மூன்றையும் தீண்டாது இங்கிலாந்தில் கல்வி கற்றுவிட்டு அம்மாவைப் பார்க்க ஆர்வத்தோடு இந்தியாவுக்கு வந்த காந்தி, அம்மா செத்துப்போன செய்தி கேட்டு வருந்திய கதையை அண்ணன் கண்கலங்கச் சொன்னபோது தேனப்பன், "அம்மா, அம்மா!" என்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டே என்னைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அண்ணன் காந்திக் கதை சொன்ஞல், கண்ணம்மா பாரதியின் பாடல் சொல்லிக் கொடுப்பாள். பாரதியின் ஆத்திச் சூடியை அவன் கடகட என்று ஒப்புவிக்குமாறு அவனைப் பயிற்றுவாள். 'ஆண்மை தவறேல்' என்று அவள் சொன்ஞல், இவன் 'ஆமை தவறேல்' என்பான். நாங்கள் சிரிப்போம். அவளுக்குக் கோபம் வந்துவிடும். அவனைத் தனியாக அழைத்துப் போய் பலமுறை சொல்லச் சொல்லித் திருத்துவாள். "ஏறுபோல் நட" என்ற அடியை அவள் நடந்து காட்டிச் சொல்லிக் கொடுத்தாள். தேனப்பனும் கைகளை வீசிக்கொண்டு டக் டக் என்று ஏதோ போர் வீரன் போல அடி எடுத்து வைத்தபடியே "ஏறுபோல் நட" "ஏறு போல் நட" என்று அடித் தொண்டையால் சொல்லுவான். நாங்கள் மனம் மகிழ்ந்து வாய்விட்டுச் சிரிப்போம். இப்படித் தேனப்பன் பேசுவதையும் நடப்பதையும் பார்த்துப் பெரிய

அம்மா பூரித்துப் போவார்கள். தூக்கித் தழுவிக்கொண்டு உச்சி மோந்து, தோளில் போட்டுக் கொள்ளுவார்கள். "ஐயோ! கண்ணம்மா போதும்'டி' இன்னைக்குப் பாடம்; பிள்ளைக்குக் கண்பட்டுவிடும்" என்று இடையில் தடுப்பார்கள்; செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் அவனுக்குக் கண்ணெறி சுற்றித் தெருமுனைவரை சென்று நாற் சந்தியில் எறிந்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் வருவார்கள்.

இப்படி ஏறக்குறைய ஏழெட்டு மாதங்கள் இன்பமாகச் சென்றிருக்கும். ஊராட்சி மன்றப் பள்ளிகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் ஒன்ருக இணைந்தன. அப்போது பல ஆசிரியர்களுக்கு இடமாற்றம் ஏற்பட்டது; சிலர்க்குப் பதவி மாற்றம் நிகழ்ந்தது. அண்ணுவுக்கு இடம் மாறவில்லை; பதவி உயர்ந்தது. அந்த ஊர்ப் பள்ளியின் தலைமை ஆசிரியராக அண்ணுவை உயர்த்தி இருந்தனர். எல்லாம் "தேனப்பன் வந்த வேளை" என்று பெரிய அம்மா குழந்தையைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

'தேனப்பன் வந்த வேளை' அம்மாவுக்கு இன்பம் கொடுத்தது; இன்பமே கொடுக்கும் என்று நானும் எண்ணினேன். ஆனுல் என் எண்ணத்தில் மறுநாளே மண் விழுந்தது. மறுநாள் காலை. வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தேன். "தலைமை ஆசிரியர் செந்தில் வீடு இது தானே? அவர் இருக்கிருரா?" என்று கேட்டுக்கொண்டே பேருந்துவை விட்டு இறங்கிய ஒருவர் குனிந்து கொண்டிருந்த என்னிடம் கேட்டார். "இருக்கிருர்" என்று பதில் சொல்லிக்கொண்டே தலை நிமிர்ந்தேன்.

ஆ! அவர்தான். என்னவர்தான். என் அத்தான்தான். "அத்தான்" என்று அலறி விட்டேன். அவரும் திகைத்துப் போய் நின்று விட்டார். தங்கை கைக் குழந்தை ஒன்றை இடுப்பில் தூக்கியபடியே அவரை ஒட்டி உரசிக்கொண்டு பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அத்தான் என்னை

வியப்போடுபார்த்தார். அவர் கண்களில், அந்த அழகிய கண்களில் இன்னும் அன்பு இருந்தது. ஆனல், தங்கை என்னைச் சுட்டு எரிப்பதுபோல் கோபமாகப் பார்த்துவிட்டு, திகைத்துப்போய் நின்ற அத்தானின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே போய்விட்டாள். இன்னது செய்வது என்று அறியாது அவர்கள் போன திசையையே கண்ணீர் கலங்கப் பார்த்துக்கொண்டிருந்தேன். துளிர்த்து விழுந்த கண்ணீர், கோலத்தில் விழுந்து புள்ளிகளை அழித்தது. கலைந்த கோலத்தைப் பார்த்தேன்; முடியாமல் பாதியில் நின்று கலையும் கோலத்தையும் பார்த்தேன். அதை முழுதும் போட என் மனம் இடம் தரவில்லை. அப்படியே அரை குறையாக விட்டுவிட்டு வீட்டுக்குள் வந்துவிட்டேன்.

அன்று செந்தில் அண்ணு சீக்கிரமாகவே பள்ளிக்குப் புறப்பட்டு விட்டார். "புதிய ஆசிரியர் ஒருவர் மாற்றலாகி இன்று வருகிருர்; அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்" என்று கூறிக்கொண்டே புறப்பட்டார். விரைவாகச் சட்டை போட்டுக் கொண்டு தேனப்பனும் தயார் ஆனன். எப்போதும் போல் பள்ளிக்குப் போகும்போது அவன் கன்னத்தில் செல்லமாக ஒரு முத்தம் கொடுத்தேன். கன்னம் கதகதப்பாக இருந்தது. சட்டையினுள் கை விட்டு மார்பைத் தொட்டுப் பார்த்தேன். உடம்பும் கதகத என்று காய்ந்தது.

"ஐயோ! அண்ணு! தேனப்பனுக்கு உடம்பு காய்கிறதே!" என்று படபடப்போடு கூறினேன்.

அண்ணன் தான் இருந்த அவசரத்தில், "போ தங்கச்சி! நீயும் அம்மாவும் கூடி அவனைக் கெடுத்து விடுவீர்கள்" என்று சொல்லியவாறு ஒரு கையில் அவனைப் பிடித்துக் கொண்டு மறுகையில் சிற்றுண்டி பெட்டியைப் பிடித்தபடியே நொண்டி நொண்டிக் கொண்டே போய்விட்டார். எனக்கு மட்டும் மனம் நிம்மதியாக இல்லை. அத்தான் வந்து

போனதைச் சொல்லலாமா வேண்டாமா என்று என்னுள்ளேயே எண்ணிக் குழம்பினேன். சூழ்ந்து கிடந்த பல வேலைகளுள் என்னைப் புதைத்துக் கொண்டு ஒருவாறு பகலைக் கழித்துவிட்டேன்.

மாலைவந்தது. மனத்துயரும் வந்தது. எப்போதையும்விட அன்று சாயுங்காலம் கொஞ்சம் நேரம் கழித்தே அண்ணன் வந்தார். வாயிற்படியிலே நின்றுகொண்டு, "சுரத்தோடு போனனே? எப்படி இருக்கிறதோ?" என்று தேனப்பனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நான், அண்ணன் மட்டும் வருவதைப் பார்த்து, "தேனப்பன் எங்கே அண்ணு?" என்று ஆர்வம் கலந்த துயரத்தோடு கேட்டேன்.

"தேனப்பனு! இன்னும் வரவில்லையா? நான் அப்பவே அனுப்பி வைத்துவிட்டேனே!" என்று வியப்போடு கூறிக்கொண்டே என்னிடம் சிற்றுண்டிப் பெட்டியை கொடுத்துவிட்டு மீண்டும் பள்ளிக்கூடம் நோக்கிப் போனர். காலையில் நிகழ்ந்ததை நினைந்தபடி உள்ளே போகாமல் வாயிற்படியிலேயே அண்ணனையும் தேனப்பனையும் எதிர் பார்த்துக்கொண்டு சோர்ந்து போய் உட்கார்ந்துவிட்டேன்.

கோயிலுக்குப் போயிருந்த பெரிய அம்மா வந்தார்கள். "செங்கமலம்! ஏன் வாசற்படியிலேயே சோர்ந்துபோய் உட்கார்ந்திருக்கே. தம்பி செந்தில் இன்னும் வரலையா? தேனப்பன் எங்கே?" என்று தடுமாற்றத்துடன் கேட்டார்கள்.

"இல்லை அம்மா! அண்ணன் வேலை அதிகம்னு தேனப்பனை வீட்டுக்கு முன்னேயே அனுப்பிச்சுட்டாங்களாம். ஆனு, தேனப்பன் வரலை; அண்ணன் இப்பத்தான் வந்தாங்க. தேனப்பனைத் தேடிப் போயிருக்காங்க" என்று என் பக்கத்தில் இருந்த கண்ணம்மா சொன்னுள்.

"ஆண்டவனே எங்களைச் சோதிக்காதேடா" என்று சொல்லியபடியே கையில் இருந்த திருநீற்றைக் கண்கலங்

கிக்கொண்டிருந்த கண்ணம்மாவின் நெற்றியில் பூசிவிட்டுத் தெருப்பக்கம் திரும்பித் "தேனப்பா!" தேனப்பா!" என்று கூவி அழைத்தவாறே தேனப்பனைத் தேடிக்கொண்டு போனார்கள்.

கண்ணம்மா என் பக்கத்தில் உட்கார்ந்தபடியே ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது குழந்தையைத் தோளில் தூக்கிக்கொண்டு செந்தில் அண்ணு தூரத்தில் வந்துகொண்டிருந்தார். அம்மா பின்னல் வந்தார். அதைப் பார்த்ததும்,

"போடி பைத்தியம்! எதற்கு எடுத்தாலும் அழத்தான் தெரிகிறது. 'தேம்பி அழும் குழந்தை நொண்டி' என்ற பாரதி பாட்டை உனக்கு எத்தனை தரம்தான் சொல்றது. அதோ அண்ணன் குழந்தையைத் தூக்கி வந்துவிட்டார் பார்த்தாயா!" என்று அன்போடு கடிந்துகொண்டாள்.

"என்ன செய்வது? என் வாழ்வே நொண்டியாய்ப் போய்விட்டது. அரைகுறைக் கோலமாய் ஆகிவிட்டது!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அண்ணு வந்து விட்டார். "தேனப்பா! தேனப்பா! என் கண்ணு" என்று ஓடித் தூக்கப் போனேன். என் குரலைக் கேட்டுப் பெரிய அம்மா நெருங்கி வாயிற்படிக்கு வந்துவிட்டனர்.

குழந்தை தலை நிமிர்ந்து பார்த்து என்னிடம்வர முதலில் கைகளை நீட்டினன். உடனே என்னை என்னவோ மாதிரி பார்த்தபடி என்னிடம் வராது அந்தப் பெரிய அம்மாவிடம் தாவினன். குழந்தையை அவரிடம் கொடுத்துவிட்டு அண்ணு என்னைத் தனியாக அழைத்தார். நான் தொடர்ந்து போனேன்.

"தங்கச்சி!" என்று ஆரம்பித்தவர் எதுவும் சொல்ல இயலாது தடுமாறினர்,

"என்ன அண்ணு! சொல்லுங்கள். என் தலை எழுத்துப் படிதான் எல்லாம் நடக்கும். சொல்லுங்கள்" என்றேன்.

"இன்றைக்குப் புதிய ஆசிரியர் ஒருவர் வருவார் என்று சொன்னேனே?" என்று நிறுத்திஞர்.

"ஆமாம்! சொன்னீர்கள். அந்தப் புதிய ஆசிரியர்தான் என் கணவர். அவருடைய இப்போதைய மனைவிதான் என் தங்கை" என்று படபடப்போடு கூறி நிறுத்தினேன்.

என்னை வியப்போடு அண்ணு விழித்துப் பார்த்தார். "அப்ப உனக்கு முன்னேயே எல்லாம் தெரியுமா?" என்று கேட்டார்,

"எல்லாம் என்ருல், அவர்கள் இருவரும் இன்று காலையில் உங்களைத் தேடிக்கொண்டு இங்கு வந்தார்கள். நான் குனிந்துகொண்டு கோலம் போட்டுக் கொண்டிருந்தேன். என்னைக் கேட்டார்கள். பதில் சொல்லத் தலை நிமிர்ந்தேன். என்னைக் கண்டதும் பேயைக் கண்டதுபோல இருவரும் விறுவிறு என்று போய்விட்டனர்" என்றேன்.

"அப்ப உனக்கு அது தெரியாது!" என்று மீண்டும் தயங்கியபடியே நிறுத்திஞர்.

"என்ன அண்ணு அது? எதுவாயினும் கடகடன்னு சொல்லிவிடுங்கள். நடப்பது நடந்தே தீரும்" என்று அவசரப்படுத்தினேன். அண்ணு அப்படி ஒரு இடியைத் தான் தாங்கிக்கொண்டு என் தலையிலும் போடக் கொண்டுவந்திருப்பார் என்று நினைத்திருந்தால் நான் அவ்வளவு அவசரப்பட்டிருக்க மாட்டேன்.

"தங்கச்சி! தங்கச்சி" என்று தொண்டை கரகரக்க, "நான் உன் காதலனும்; கள்ளப் புருசனும்" என்று கண் கலங்கிஞர். "உன்னேடு எனக்கு ஆசிரமத்திலேயே தொடர்பு உண்டாம். அதைத் தெரிந்துகொண்ட உங்க அம்மா கெண்டைக் காலில் சூடுகூடப் போட்டிருக்காங்

களாமே! தேனப்பன் அப்பன் இல்லாத பிள்ளையாம்'' இப்படி இருவரும் தேனப்பனைச் சுட்டிச் சுட்டிப் பேசி இருக்காங்க. தேனப்பனையும் என்ன என்னவோ குடைந்து குடைந்து கேட்டுச் சிரித்துக் கேலி செய்திருக்காங்க. எல்லாத்தையும் கேட்டுக்கொண்டிருந்த ஆயா நம்மிடம் சொல்லப் பள்ளிக்கூடத்தை எல்லாம் கூட்டி வேலையை முடிச்சிட்டு இங்கே வந்திருக்காங்க. அப்போ வழியிலே பெரிய புளியமரத்து அடியிலே அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தானும் தேனப்பன்; தூக்கிக்கொண்டு வந்தாங்க. என்னைப் பார்த்ததும் குழந்தையை என்னிடம் கொடுத்துவிட்டு மெல்ல மெல்லப் பயந்தபடியே இந்தச் செய்திகளையும் சொன்ணுங்க. ஆயாவை அப்படியே அனுப்பிவிட்டு நான் இப்படியே வந்தேன்'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டபடியே என்னை அங்கேயே தனியே விட்டுவிட்டு வீட்டினுள் போய் விட்டார்.

'கெண்டைக் காலில் சூடு போட்டது நான் அத்தான் வீட்டுக்குப் போய் வந்ததற்காக அல்லவா? திருமணம் ஆன முதல் நாள் அத்தான்கூட அதைப்பற்றிக் கேட்டாரே? அம்மாவின் கொடுமையை மறைக்க நினைத்து, ஐயோ! அன்று அத்தானிடம் ஆசிரமத்தில் நெருப்புச் சுட்டுவிட்டது என்று பொய் சொல்லிவிட்டேனே. அந்தப் பொய் இப்படி ஒரு பூத வடிவம் எடுக்குமென்று பேதை எனக்குத் தெரியாமல் போய் விட்டதே. தங்கை இதை எப்படியோ திரித்துக் கூறி மறுபடியும் அத்தான் மனதைக் கெடுத்துவிட்டாளே?' "அடி பழிகாரி! நீயும் ஒரு தங்கையா? உனக்கு என்ன கேடுடி நான் செய்தேன். என் குழந்தை தேனப்பன் என்னை என்னவோ போல பார்க்கிருனடி, அந்தப் பார்வை என் மனசைக் குத்திக் குத்தி ஆராய்வது போல இருக்கே. ஏண்டி என் வாழ்வை இப்படிப் பாழாக்குறே!'' என்று அழுது புலம்பி விட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு நானும் கூடத்துக்கு வந்தேன்.

அப்போது பெரிய அம்மா நாங்கள் பேசிக்கொண்டது பற்றி அண்ணனைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"இப்பொ என்னை ஒன்னும் கேட்காதிங்க. நானே அப்புறம் எல்லாம் உங்களுக்குச் சொல்றேன். செங்கமலத்தையும் தொல்லை செய்யாதிங்க" என்று கண்டிப்போடு சொல்லிவிட்டுத் துன்பம் வரும்போதெல்லாம் வழக்கமாகப் போகும் மலை அடிவாரம் நோக்கிப் போய்விட்டார்.

'நான் எங்கே போய் என் கவலைகளைத் தீர்த்துக் கொள்வேன்' என்று ஏங்கியபடி குழந்தையிடம் போனேன். குழந்தை தூங்கிக்கொண்டிருந்தான். முகம் அழுது அழுது வீங்கிப்போய் இருந்தது. மெல்லக் கன்னத்தைத் தொட்டுப் பார்த்தேன். நல்ல காய்ச்சல் அடித்தது. "அம்மா !" என்றேன் தழுதழுத்த குரலில்.

"ஒன்னும் பயப்படாதே. கத்தூரி மெழுகு போட்டிருக்கேன். சளி சுரம். நாளைக்கு நன்றாகப் போய்விடும்" என்று பெரிய அம்மா ஆறுதல் சொன்னார்கள்.

"சாப்பிட்டானா!" என்று கேட்டேன்.

ரசம் சோறு பிசைந்து ஊட்டினேன். "வேண்டாம் வேண்டாம்" என்று கொஞ்சம் கூடத் தின்னாமல் அழுது கொண்டே என் மடியில் படித்துத் தூங்கிப் போய் விட்டான். இப்பொ எழுப்ப வேண்டாம்" என்று எழுப்பப் போன என் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்.

"எனக்குப் பசி இல்லை, ஒன்றும் வேண்டாம் அம்மா" என்று குழந்தைக்குப் பக்கத்தில் படுத்துக்கொண்டேன். நான் வேண்டாம் என்று சொன்னவுடன் கண்ணம்மாவும் 'வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே குழந்தைக்கு இன்னொரு பக்கத்தில் படுத்துக் கொண்டாள். மலையடி வாரம் போயிருந்த அண்ணனும் "நீ நினைத்தது எப்படி அப்படி அருளுதல் நீதம்" என்று தாயுமானவர் பாடலின்

கடைசி அடியை உளம் உருகி மெல்லத் தனக்குள் பாடிய வாறே வந்து வாயிற்படியருகே தன் பாயை விரித்து 'அம்மா எனக்கு ஒன்றும் உண்பதற்கு வேண்டாம்'' என்று சொல் லிக்கொண்டே படுத்து விட்டார். பெரிய அம்மா சட்டிப் பானை எல்லாவற்றையும் ஒழுங்காக மூடி வைத்துவிட்டு வந்து கொல்லை வாயிற்படி அருகே படுத்துவிட்டார்கள். என் வாழ்வை, கள்ளி மலர் வாழ்வை நினைத்தபடியே நானும் தூங்கிப் போய்விட்டேன்.

திடீரென்று விழித்துக் கொண்டேன். சுற்றும் முற்றும் பார்த்தேன். என் பக்கத்தில் படுத்திருந்த குழந்தை, கண்ணம்மாவை அணைத்தபடியே தூங்கிக் கொண்டிருந் தான். எப்போதும் போல் தெருக் கதவு திறந்திருந்தது. நிலவின் ஒளி அங்கு ஏதோ ஒரு துறவிபோல் படுத்துக் கொண்டிருந்த அண்ணனின் முகத்தைக் காட்டி யது. பெரிய அம்மா ஆடாது அசையாது ஏதோ ஒரு யோகியைப் போல் படுத்துக் கிடந்தார். உறங்கும் போது, அவர்கள் நெற்றியில் இட்ட திருநீறு கொஞ்சம் கூடக் கலை யாமல் அப்படியே இருந்தது.

எண்ணிப் பார்த்தேன். அத்தானிடம் உண்மைகளை ஆதியோடு அந்தமாகக் கூறுவதைப் பற்றி எண்ணிப் பார்த் தேன். முதலில் நம்ப வேண்டும். நம்பிவிட்டாலும் குழந் தையோடு வாழ்கின்ற தங்கை பாழாய்ப் போய்விடுவாள். நானாவது கணவனை இழந்தாலும் கற்பை இழக்காமல் வாழ்கிறேன். அவளால் அவரின்றி, ஒரு ஆண் இன்றி வாழ முடியாது. போகட்டும். வாழ்ந்து போகட்டும்.

'இனி இந்தக் குடும்பத்தோடு நான் இருப்பது சரி தானா? அத்தானும் தங்கையும் மெல்ல மெல்லக் கதை கட்டி விடுவார்கள். அண்ணாவால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியும். அம்மாவால், பெரிய அம்மாவால் பொறுத்துக் கொள்ள முடியுமா? வேண்டாம். நான் துக்குறி பிடித்தவள்

நான் இவர்களை எல்லாம் விட்டுப் போய்விடுவதுதான் நல்லது' என்ற முடிவுக்கு வந்தேன்.

முடிவுக்கு வந்தவுடன் அந்த அம்மாவின் காலடி அருகில் நின்று, அவர்கள் அன்பை நினைத்துக் கண்ணீர் விட்டேன். அதன் பின் கண்ணம்மாவிடம் சென்றேன். குழந்தையைக் கட்டி அணைத்த படியே அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். "கண்ணம்மா குழந்தையை உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். பார்த்துக்கொள். நான் எல்லா வகையிலும் பாவம் செய்தவள்" என்று முணுமுணுத்துக் கொண்டே வாயிற்படி அருகே வந்தேன்.

"அண்ணு! என்னுல் நீங்கள் பட்ட அடி போதும்! பெற்ற வசவு போதும். அனுபவித்த அவமானம் போதும். உங்கள் வாழ்க்கையில் இந்தத் தங்கைக் குறுக்கிட்டது ஒரு கனவாக மறந்துபோகட்டும்" என்று அவர் காலடியில் விழுந்து மண்டியிட்டு வணங்கிவிட்டுத் திறந்திருந்த கதவு வழியே புறப்பட்டேன்.

நிலவு பாடு சாய்ந்துவிட்டது. காற்றிலே மரம் மட்டைகள் எல்லாம் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்தன. பக்கத்தில் இருந்த புதரில் இரண்டு பூனைகள் 'உர் உர்' என்று உருமிக்கொண்டு சண்டை போட்ட சத்தம் கேட்டது. அப்போது ஒரு பூனை தன் குட்டியை வாயில் கவ்விக்கொண்டு ஓடியது. அதனைத் துரத்திக் கொண்டு புதரிலிருந்து பாய்ந்தபடியே இன்னொரு பூனை வந்தது.

மீண்டும் குழந்தை நினைவு வந்தது. விடுவிடு என்று திரும்பி வீட்டுக்குப் போனேன். வாயிற் படியில் நின்ற படியே உள்ளே எட்டிப் பார்த்தேன். குழந்தை புரண்டு தனியே படுத்திருந்தான். 'சரி, நல்லதோ கெட்டதோ ரெண்டு பேரும் சேர்ந்தே அனுபவிப்போம். அப்புறம், நான் போன பிறகு, உன்னை ஒரு அவமானச் சின்னமா இந்த உலகம் சொல்லும். அதனுல் களங்கமில்லாமல்

உறங்குகிற இந்த அண்ணனுக்கு என்ன என்ன நேரிடுமோ?' என்று என் மனதுக்குள் பேசியபடியே குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வயல் வரப்பு என்று பார்க்காமல் நடந்தேன்.

நாய் குரைத்தது. நரி ஊளை இட்டது. எங்கிருந்தோ ஆந்தை இரண்டு அலறின. நான்பாட்டுக்குக் கால்போன போக்கில் நடந்து கொண்டேயிருந்தேன்.

எவ்வளவு நேரம் நடந்தேனோ. எந்தத் திசையில் நடந்தேனோ. ஏதோ மந்திர வித்தையில் மயக்குண்ட விலங்கு போலே போய்க்கொண்டிருந்தேன். "அம்மா! பசிக்குது. அம்மா ரொம்ப தாகமா இருக்கு" என்ற சத்தம் கேட்டுத் திகைத்து நின்றேன். "யாரது?" என்று நிதானித்தேன். என் நினைவு வந்தது. என் தோளில் கிடக்கும் குழந்தையின் நினைவு வந்தது. 'ஐயோ! இரவு ஒன்றும் தின்னமல் படுத்துக்கொண்டானே' என்ற ஏக்க உணர்வு வந்தது. அருகில் இருந்த களத்து மேட்டுமேல் ஏறி நின்று பார்த்தேன். பக்கத்தில் ஒரு தோட்டம் தெரிந்தது. அதில் ஒரு கபிலைக் கிணறு தெரிந்தது. நேராக அங்கே போனேன்.

கிணற்றில் தண்ணீர் மொண்டு தரலாம் என்று அதன் அருகே நெருங்கினேன். எனக்கும் தாகமாக இருந்தது. கிணற்றை எட்டிப் பார்த்தேன். நல்ல ஆழம். உற்றுப் பார்த்தேன். கிணற்றுக்கும் தாகமாக இருக்கும் போல் தெரிந்தது. 'தண்ணீர் எடுத்து நம் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாமா, அல்லது கிணற்றினுள் விழுந்து அதன் தாகத்தைத் தீர்த்துவிடலாமா?' என்று ஒரு தடுமாற்றம் திடீர் என என் மனதில் தோன்றி நின்றது. தோளில் கிடந்த குழந்தையைத் தூக்கிக் கிணற்றின்மேல் நிறுத்தினேன். ஆழ்ந்த நீரைக் கண்டு விட்டு, "அம்மா! அம்மா!" என்று பயந்து அலறியபடியே என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். நானும் அவனைக் கட்டித் தழுவியபடியே கதறி அழுதேன்.

அப்போது ஏதோ மென்மையான ஒன்று என் தோளைத் தொடுவது போல் இருந்தது. தொட்ட இடம் சில்லென்று இருந்தது. சட்டென்று திரும்பினேன்.

"மகளே! மகளே! அஞ்சாதே. நானும் ஒரு தாய்தான். அஞ்சாதே" என்று தோளில் வைத்த மலர் போன்ற மென்மையான தன் கையை எடுக்காமலேயே கனிவோடு பேசியபடியே தள்ளாத பாட்டி ஒருவர் நின்று கொண்டிருந் தார். "அஞ்சாதே!" என்று சொன்னாலும் பயத்தால் மனம் படபடத்தது. கால்கள் நடுங்கின. அவர் என்னையும் குழந்தையையும் உற்றுப் பார்த்துப் புன்னகை செய்தார். என்னவோ என் தடுமாற்றத்தைத் தெரிந்து கொண்டவர் போல,

"மகளே! கிணற்றுக்குத் தாகம் இல்லை. அது உன் தாகத்தை, உலகத் தாகத்தைத் தீர்க்க வந்த ஊற்று; கருணை ஊற்று. அது வற்றுது. மானம் அவமானம் எல்லாம் நாமாகக் கற்பித்துக் கொண்ட கற்பனைகள். குழந்தையாக நாம் இருந்தபோது திறந்த இடத்தில் அமர்ந்து கொண்டு வானத்தில் ஓடும் மேகக் கூட்டங்களில் குதிரை ஒட்டகம் இவற்றை எல்லாம் பார்த்து மகிழ்ந்தது இல்லையா? உண் மையில் வானத்தில் குதிரையும் இல்லை; கொக்கும் இல்லை; ஒட்டகமும் இல்லை ஓடமும் இல்லை. எல்லாம் குழந்தைக் கற்பனை. கொஞ்ச நேரம் இன்பமாகப் பொழுது போவதற் காக நாமாகக் கற்பித்துக் கொண்ட கற்பனைகள்" என்று சொல்லி என்னை உணர்ந்துகொண்டதுபோல் ஆதரவோடு பார்த்தார்.

இரு சிறு நட்சத்திரங்கள் போல மின்னிய அந்தக் கண் களில் அண்ணனின் அறிவும் பெரிய அம்மாவின் அன்பும் திகழ்வதைக் கண்டேன். மறைந்து கொண்டிருந்த மங்கிய நிலா ஒளியில் அவர் நின்ற தோற்றம் ஏதோ வன தேவதைபோல் தோன்றியது. முகத்தில் சதைப்பற்று ஒன்றும் இல்லை. ஒட்டிய கன்னம், எலும்பும் தோலுமாய்

இருந்த உடல், இவை எல்லாம் அந்தத் தாயின் தள்ளாமை யைக் காட்டின.

பால் போல் நரைத்த கூந்தல் முடியப் பெறுமல் தொங் கிக் கொண்டிருந்தது. அதிலிருந்து தண்ணீர் முத்து முத்தா கச் சொட்டிக்கொண்டிருந்தன. எங்கோ அந்த வைகறையில் நீராடிக் கொண்டிருந்தவர் தலையைத் துவட்டிக் கொள்ளாமல் நேரே கிணற்றண்டை வந்ததை அது ஒருவாறு சுட்டிக் காட்டியது.

மஞ்சள் புடவை ஒன்று உடுத்தியிருந்தார். உடுத்தி யிருந்தார் என்பதைவிட உடம்பைச் சுற்றிப் போர்த்தியிருந் தார் என்று சொல்வதே பொருந்தும். மஞ்சள் நிறம்தானு அல்லது நிலவு வெளிச்சத்தில் வெள்ளைப் புடவை அப்படி மஞ்சளாகத் தோன்றியதா என்று மயங்கும்படி வெளுர் மஞ்சளாக அதன் நிறம் இருந்தது.

கண்களைக் கீழே செலுத்தி அந்தத் தாயின் கால்களைப் பார்த்தேன். கால் விரல்கள் மெலிந்து நீண்டிருந்தன; வெளுர் சிவப்பாக ஏதோ மலர் ஒன்றின் நீண்ட இதழ்கள் போல் இருந்தன. நகங்கள் வெட்டப்படாமல் விரல்களுக்கு அப்பாலும் சிறிது நீண்டிருந்தன; விரல் நுனி வரை அவை சிவந்தும், பிறகு வெளுத்தும் காணப்பட்டன. ஒரு விரலில் லேசான கீறல் ஒன்று தெரிந்தது. அதில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதன் அருகே கூரிய சப்பாத்தி முள் ஒன்று இன்னும் பிடுங்கப் பெறுமல் குத்தியபடியே இருந் தது. பக்கத்தில் படர்ந்திருந்த சப்பாத்திக் கள்ளியைப் பார்த்தேன். அதில் மலர்ந்திருந்த மஞ்சள் வண்ணப் பூவில் என் கண்கள் சென்று நின்றன.

'கலகல' என்று குழந்தை சிரிப்பது போன்ற ஒலி கேட்டு நிமிர்ந்தேன். அந்தத் தாய் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே,

"என்ன மகளே! அந்தக் கள்ளி மலரை அப்படிப் பார்க்கிருய். இங்கே பார் இந்தப் பூந்தோட்டத்தில் கள்ளியும் பூக்கின்றன; முல்லேயும் பூக்கின்றன. இந்தப் பூந்தோட்டம்தான் என் வீடு; என் கோயில்; எல்லாம். இது எனக்கு அமைதி கொடுத்தது! உனக்கும் நிறைவு தரும்.

"நான் தளர்ந்துபோய் உதிரும் நிலேயில் இருக்கிறேன் நல்ல காலம். இறைவன் உன்னே அனுப்பிவைத்தான். அவன் எப்படியும் உன் போன்ற ஒருவரை—உலகப் பற்றை எல்லாம், உயிர்ப் பற்றைக்கூட விட்ட ஒருவரை—அனுப்பி வைப்பான் என்று நானும் எதிர்பார்த்தேன்." என்று என்னேப் பார்த்தார். 'இந்த வயதில் உங்களுக்கு ஏனம்மா தொல்லே. நாங்கள் எங்கள் வழியைப் பார்த்துக்கொண்டு போகிறோம்' என்று சொல்ல நினேத்து அவரைப் பார்த்தேன். அதைப் புரிந்து கொண்டவர் போல, ஒரு பொலிவான புன்னகையோடு,

"யார் யாரைக் காப்பாற்றுகிறோம்? எத்தனே கோடி உயிரினங்கள் சுவாசித்தாலும் பிராண வாயு குறைந்து போய் விடுவது இல்லே. எத்தனே கோடி மக்கள் மண்ணில் எவ்வளவு இழிவு செய்தாலும் ஒரு நாள் பெரு மழை எல்லா அழுக்குகளேயும் அகற்றி மண்ணேப் பசுமையாக்கிவிடுகிறது.

"நாம் எல்லாம் மலர்கள். ஆண்டவன் நம்மை எல்லாம் மென்மையாகப் படைத்துவிட்டான். வேண்டும் என்றுதான் அப்படிப் படைத்தான். ஏன் எனில் அவன் தொழில்களாகிய படைத்தலேயும் காத்தலேயும் மண்ணுலகில் நடத்துவது பெண்களாகிய நாம்தான். நாம்தான் ஆண்டவனுக்கு மிக மிக வேண்டியவர்கள்.

"அதனுல்தான் கல்லுக்கு இடையிலும் நாம் மென்மையாக இருக்கிறோம்; முள்ளுக்கு இடையிலும் நாம் மென்மையாக இருக்கிறோம்; ஏன் இப்படி மென்மையாக நம்மைப் படைத்தான்?

"என்னோடு பிறந்தவர் ஏழு பேர். ஏழு பேரும் ஆண்கள். விளையாடும் அந்தக் குழந்தைப் பருவத்திலும் நான் அவர்களுக்காக விட்டுக் கொடுத்துவிடுவேன். என் தம்பி கண்ணீர் விட்டு அழுதால் என் பங்கு மிட்டாயையும் அவனுக்கே கொடுத்துவிடுவேன். அப்பாவிடம் 'காசு வேண்டும்' என்று அடம் பிடித்து, அடிவாங்கி என் அண்ணன் கண் கலங்கினால் நான் நெஞ்சுருகி சேர்த்து வைத்திருந்த என் காசை எல்லாம் அவனுக்கே கொடுத்து விடுவேன்.

"குழந்தைப் பருவத்தில் மட்டும் பெண்களாகிய நாம் அப்படி என்று நினைத்துவிடாதே. காதல் பருவத்திலும் அப்படித்தான். என்னை விரும்பிய ஒருவனுக்காக என் உற்றார், உறவினர், பெற்றோர் எல்லோரையும் இழந்து விட்டேன். ஆம். இழப்பதுதான் பெண்மை. எவரை நம்பி எல்லாவற்றையும் விட்டு நான் பிறந்து வளர்ந்த வீட்டையும் திரும்பிப் பாராமல் வந்தேனோ அவரே எதிர்பாராமல் என்னை விட்டுப் போய்விட்டார்.

"புற இதழ்களை, பூ இதழ்களை மலர்கள் ஒன்றன்பின் ஒன்றாக இழந்து இறுதியில் தானும் மறைந்துவிடுகிறது அல்லவா? அப்படித்தான் தாய்மையில் நாம் அனைத்தையும் இழந்து நிற்கிறோம். நாம் இழக்கப் பிறந்தவர்கள். ஆனால் இன்று—இந்த வயதில்—என்னால் ஓர் உண்மையை உணர முடிகிறது. பெறுவதில் விலங்கு மனத்துக்கு இன்பம்; தருவதில், ஆம், தருவதில்தான் மனித மனத்திற்கு இன்பம். அது காதலாகட்டும் அன்றிக் காமமே ஆகட்டும் தருவதில் தான் இன்பம். இழப்பதே இன்பம். இழப்பதே வெற்றி. இழப்பது சான்றோர் இயல்பு. நாம் எல்லாம், மலர்கள் எல்லாமே சான்றோர்கள். அதிலும் என்னைக் குத்திய, உன்னைக் கவர்ந்த இந்தக் 'கள்ளி மலர்' இருக்கிறதே இது சான்றோரினும் சான்றோர்." என்று தங்கு தடையின்றி ஓடும்

சிற்றோடை போலப் பேசி, தன் வலக்கைச் சுட்டுவிரலால் கீழ்த்திசையைக் காட்டி, "வா அங்கே போவோம். வாடா தம்பி வா! ஏன் தயங்குகிறாய். நல்லதற்கு எல்லாம் லாம் தயங்குவதே மனித சுபாவம் ஆகிவிட்டது. வா" என்று அவனை ஒரு கையில் பற்றியபடியே என்னையும் அழைத்துச் சென்றார்.

அவர் செல்லும் திசையில் ஒரு குடிசை இருந்தது. அதற்குப் பின்னால் ஒரு குன்று தெரிந்தது. அந்தக் குன்றுக் குப் பின்னால் தோன்றிக்கொண்டிருந்த கதிரவனின் செங் கதிர்கள் வானத்தைச் செம்மை செய்தன; மண்ணைப் பொன்மயம் ஆக்கின. வழி எல்லாம் காலைப் பூக்கள் மலர்ந்து கமழ்ந்தன. நாகணவாய்ப் பறவைகள் கீச்சிட்டுக் கொண்டு இங்கும் அங்கும் குதித்து குதித்துப் பறந்து ஓடின. என் னுள்ளும் ஏதோ ஒரு புத்தொளி தோன்றியது; புது மணம் கமழ்ந்தது; புதுக் குரல் கேட்டது.